தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

# ஆண்டறிக்கை

# 2016

அச்சீடு: இளைஞர் சேவைகள் அச்சகம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் ……………………………………………………………………… | 1 |
| 2. | தொலைநோக்கும் பணித்திட்டமும் ……………………………………………… | 2 |
| 3. | சபையின் தத்துவங்கள் ……………………………………………………… | 3 |
| 4. | சபையின் கூட்டிணைத் தகவல் ………………………………………………… | 4 |
| 5. | நிறுவனக் கட்டமைப்பு ………………………………………………………… | 7-8 |
| 6. | போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்தின் இன்றைய நிலைமை …………….. | 9-13 |
| 7. | சபையின் கூட்டிணை ஆளுகை ………………………………………………… | 14 |
| 8. | செயற்பாடு குறித்த மீளாய்வு ………………………………………………… | 15-82 |
| 9. | வருமானக் கூற்று………………………………………………………………… | 83 |
| 10. | ஐந்தொகை ……………………………………………………………………… | 84-85 |
| 11. | குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் ………………………………………………… | 85-89 |
| 12. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ………………………………… | 90-105 |
| 13. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மீதான தவிசாளரின் அவதானிப்புகள் …………………………………………………………… | 106-117 |

**பின்னிணைப்புகள்:**

| | | |
|---|---|---|
| i. | சபையின் நிறைவேற்றுப் பதவியினர் ……………………………………… | 118-121 |
| ii. | சட்ட வினைப்படுத்துகை உப குழு உறுப்பினர்கள் ……………………….. | 122-123 |
| iii. | சட்டவாக்க உபகுழு உறுப்பினர்கள் ………………………………….... | 124-125 |
| iv. | கணக்கீட்டுக் குறிப்புகள் ……………………………………………… | 126-143 |

# 1. அறிமுகம்



தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையானது (NDDCB) 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட நிறுவனமாகும். இச்சபை, 1984 ஏப்ரல் மாதம் ஒன்பதாம் திகதியிலிருந்துஇயங்கி வருகிறது. சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சின் நோக்கெல்லையின்கீழ் இச்சபை செயற்படுகிறது.

அபாயகரமான ஔடத துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான தேசிய கொள்கையை மீளாய்வுசெய்து பாதகமான போதையூட்டும் ஔடதங்களின் பாவனையைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் திணைக்களங்களுக்கும் ஒத்தாசை வழங்கி போதையூட்டும் ஔடத தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல், சிகிச்சையளிப்பு முறைகளையும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகளையும் மேம்படுத்துதல், கள ஆராய்ச்சிகளையும் கற்கை ஆய்வுகளையும் மேற்கொள்ளல், தரவுத்தளங்களைப் பேணிவருதல் முதலான கருமங்களை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை சிரமேற்கொண்டு வருகிறது. அத்துடன், அரசாங்கத்தினால் ஏற்பிசைவளிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் (UN) மற்றும் சார்க் (SAARC) அமைப்பின் கீழ் அமுலிலுள்ள சா்வதேச சமவாயங்களின் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களை மேற்பார்வைசெய்தல், அவற்றுக்கு உதவுதல் ஆகிய கருமங்களையும் சபை சிரமேற்கொண்டு வருகிறது. குறிப்பிட்ட கருமங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் ஏனைய உதவிகளை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை வழங்கி வருகிறது. அரசாங்கத்துடனும் சா்வதேச போதையூட்டும் ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையுடனும் (INCB) இச்சபை ஒத்துழைத்துச் செயலாற்றுவதுடன், போதையை உண்டுபண்ணும் ஔடதங்கள் பற்றிய ஆணைக்குழுவையும் (CND) பிரதிநிதித்துவம் செய்கிறது.

அரசாங்க விதித்துரைப்புகளின்படி அதன் செயற்பாடுகள் குறித்த ஓர் ஆண்டறிக்கையை சபை தயாரிக்க வேண்டும்.

# 2. தொலைநோக்கும் பணித்திட்டமும்

## தொலைநோக்கு

போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த பாதக தாக்கங்களை முகாமை செய்வதில் தெற்காசியாவின் முன்னோடியாக இலங்கையை நிலைபெறச் செய்தல்.

## பணித்திட்டம்

போதையூட்டும் ஔடதங்களினால் ஏற்படக்கூடிய எல்லாப் பிரச்சினைகளையும் ஒழிக்குமுகமாக எல்லா சமூகப் படிநிலைகளுடனும் பொது மக்களுடனும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனும் இணைந்து முனைப்புடன் செயலாற்றக்கூடிய ஒரு சூழலை உருவாக்குதல்.

போதையூட்டும் ஔடதங்களின் பாவனையையும் வியாபாரத்தையும் ஊக்கமிழக்கச்செய்யும் ஒரு சமூக சூழலை உருவாக்குதல்.

போதையற்ற ஒரு சமூகத்தை உருவாக்குமுகமாக தேசிய அரசியல் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புதல்.

தேசியக் கொள்கையை அமுல்படுத்துவதில் தலைமைத்துவம் வழங்கும் தேவை ஏற்படும்போது தேசியக் கொள்கையை நுண்ணாய்வுக்கு உட்படுத்துவதற்கும் மதிப்பீடுசெய்வதற்கும் பயன்கூர்மிக்க விதத்தில் அதனைச் செயற்படுத்துவதற்கும் தேவையான தகவல்களையும் ஒரு தரவுத்தளத்தையும் உருவாக்குதல்.

தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் பற்றி சர்வதேச போதையூட்டும் ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையுடன் ஒத்துழைத்துச் செயலாற்றுதல்.

# 3. சபையின் தத்துவங்கள்

**1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின்மூலம் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்கள்**

அ. அபாயகரமான ஔடதங்களின் துஷ்பிரயோகத்தைத் தடுத்தலும் கட்டுப்படுத்தலும் தொடர்பிலான ஒரு தேசியக் கொள்கையை வகுத்தமைத்தலும் அதனை மீளாய்வுசெய்தலும் அத்தகைய கொள்கைகள் தொடர்பில் அமைச்சருக்கு மதியுரை வழங்குதலும் பரிந்துரைகளைச் செய்தலும்.

ஆ. சபையின் தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்காக தனிநபர்கள், அமைப்புக்கள், அரசாங்க திணைக்களங்கள் மற்றும் பகிரங்க கூட்டுத்தாபனங்களிடமிருந்து தேவைப்படக்கூடிய தகவல்களையும் விபரங்களையும் கோருதல்.

இ. சபையின் தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்காக தேவைப்படுத்தப்படும் நன்கொடைகளையும் மானியங்களையும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளல்.

ஈ. அபாயகரமான ஔடதங்களின் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கூட்டிணைத்தல்.

உ. போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்கான சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துதலும், சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் அபாயகரமான ஔடதங்களின் துஷ்பிரயோகத்தைத் தடுக்கும் கல்விசார் தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதலும்.

ஊ. அபாயகரமான ஔடத துஷ்பிரயோகத்தின் பரம்பல், காரணிகள் மற்றும் அதனோடிணைந்த சட்ட, மருத்துவ, விஞ்ஞான, சமூக, கலாசார மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பிலான ஆராய்ச்சிக் கற்கைகளைப் பொறுப்பேற்று நடத்துதலும் கண்காணித்தலும்.

எ. போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச முகவராண்மைகளுடன் தொடர்புகளைப் பேணுதல்.

ஏ. அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களைக் கையகப்படுத்துதல், வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடல் அல்லது பெறல், ஈடுவைத்தல், விற்றல் அல்லது வேறு வகையில் கையுதிர்ப்புச்செய்தல்.

# 4. சபையின் கூட்டிணைத் தகவல்

நிறுவனத்தின் பெயர்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

**சட்ட வடிவம்**

1986 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க மற்றும் 1990 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட சபை.

**சபையின் அமைப்பு**

இன்றைய சபையின் அமைப்பு பின்வருமாறு:

அ. அமைச்சரினால் நியமிக்கப்படும் தவிசாளர் ஒருவரும் ஏனைய மூன்று உறுப்பினர்களும்.

ஆ. கல்வி அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

இ. பொலிஸ் மா அதிபர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

ஈ. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

உ. சுங்கப் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

ஊ. அரசாங்கப் பகுப்பாய்வாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர்.

எ. ஆயுர்வேத ஆணையாளர் அல்லது அவரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒருவர் அத்துடன்

ஏ. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பிரதிநிதி ஒருவர்.

## சபை உறுப்பினர்கள் - 2016

1. பேராசிரியர் ரவீந்திர பர்னாந்து
   தவிசாளர்
   தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை

2. வண. தீனியாவல பாலித்த தேரர்
   விஹாராதிபதி
   ''நாலந்தாராமய''
   நுகேகொடை

3. வண. குப்பியாவத்தே போதானந்த தேரர்
   பணிப்பாளர்
   ''மித்துரு மித்துரோ செவன''
   பெல்மதுல்ல

4. சட்டத்தரணி வர்ணகுலசூரிய ஜோன் பொஸ்கோ
   இல.99/21, அதிமேற்றிராணியார் நிக்கலஸ் மார்கஸ் மாவத்தை
   நீர்கொழும்பு

5. திருமதி சகுந்தலா தென்னகோன்
   அரசாங்கப் பகுப்பாய்வாளர்
   அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம்
   இல.31, இசுரு மாவத்தை
   பெலவத்த
   பத்தரமுல்ல

6. திரு. நந்தன முனசிங்க
   பிரதிப் பொலிஸ் மா அதிபர் (குற்றவியல்)
   பொலிஸ் தலைமையகம்
   கொழும்பு 01

7. வைத்தியர் கமல் ஜயசிங்க
   பணிப்பாளர் (ஆய்வுகூட சேவைகள்)
   தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை
   கொழும்பு 10

8. திரு. எல்.எச்.திலகரத்ன
   ஆயுர்வேத ஆணையாளர்
   ஆயுர்வேத திணைக்களம்
   பழைய கொட்டாவ வீதி
   நாவின்ன
   மஹரகம

9. திரு. எச்.யூ.பிரேமதிலக
   மேலதிக செயலாளர்
   கல்வி அமைச்சு
   'இசுருபாய'
   பத்தரமுல்ல

10. திரு. எம்.பாஸ்கரன்
    பணிப்பாளர் (சமூக பாதுகாப்புப் பிரிவு)
    இலங்கைச் சுங்கம்
    இல.40, பிரதான வீதி
    கொழும்பு 01

11. திரு. பிரசன்ன கிரிவத்துடுவ
    உதவிப் பணிப்பாளர்
    அரசிறைக் கொள்கைகள் திணைக்களம்
    பொதுத் திறைசேரி
    கொழும்பு 01

**பணியாளர்தொகுதி:**

216 பணியாளர்தொகுதி உறுப்பினர்கள் சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் அடங்குகின்றனர்.

**முகவரி/தகவல்களுக்கு:**

இல.383, கோட்டே வீதி
ராஜகிரிய

தொலைபேசி: 011 2868794 - 6
தொலைநகல்: 011 2868791-2 / 2869805
மின்னஞ்சல்: mail@nddcd.gov.lk
இணையத்தளம்: www.nddcb.gov.lk
முகநூல்: facebooknddcd.gov.lk

**கணக்காய்வு:**

கணக்காய்வாளர் தலைமையதிபதி
கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்

**உத்தியோகபூர்வ வங்கி:**

இலங்கை வங்கி

# 5. நிறுவனக் கட்டமைப்பு



Chairman

HM 2-1

DG(ED) Director General (Execut    or)

HM 1 – 1

A & F ) - Director-Admin & Finance (

T, R & O ) - Director- Treatment , Rehab    Outreach (01)
R ) - Director–Research (01)
PE & T ) - Director- Preventive Educat    ning (01 )

cer (03)

MA 5 -2

/P - Computer Analyst / Progran
: - Assistant Counselor (20)
OO - Assistant Outreach Officer (

RO - Assistant Research Officer (
SO - Assistant Scientific Officer (
E&IO - Assistant Drug Education ar    ion Officer (06)

All staff 216 at 2016.12.31

MM 1-1

AD (A) - Assistant Director Administration( 01)

AD (F) - Assistant Director Finance(01)
AD (T&R) - Assistant Director Treatment & Rehabilitation(01)
AD (O) - Assistant Director Outreach(01)
AD (P&DTC) - Assistant Director Private & Designated Treatment Centers (01)
AD(R) - Assistant Director Research( 01)

AD(SR) - Assistant Director Scientific Research(01)
AD(PE &T) - Assistant Director Preventive Education & Training (01)
BS/LO - Board Secretary cum Legal Officer (01)

IA - Internal Auditor (01)

MA 2 – 1

ITA - IT Assistant(02)
BK - Book Keeper (01)
N - Nurse (05)

CA - Counseling Assistant (72)
LT - Laboratory Technician (04)
DE&IA - Drug Education and Information Assistant (06)

JM 1-1

AO - Administrative Officer (01)

LB - Librarian (01)
FO - Finance Officer (01)
M - Manager (06)
C - Counselor (07)
T&IO - Treatment & Investigation Office

RO - Research Officer (03)
SO - Scientific Officer (04)
DE&IO - Drug Education & Information

MA 1-1

MA - Management Assistant (28)

PL - 3

DR - Driver (14)

PL – 2

LA - Library Assistant (01)

PL - 1
OA - Office Aid (15)

# 6. இலங்கையின் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்தின் இன்றைய நிலை

2016 ஆம் ஆண்டில் இலங்கையில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றச்செயல்களுக்காக கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 79,378 ஆகும். 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அது 4% சதவீத குறைவாகும். போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றச்செயல்களுக்காக கைதுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை, ஹெரொயின் சார்ந்த குற்றச் செயல்களுக்கு 35% சதவீதமும் கஞ்சா சார்ந்த குற்றச்செயல்களுக்கு 60% சதவீதமும் ஆகும். போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றச் செயல்களுக்காக கைதுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையில் பெரும்பகுதி மேல் மாகாணத்திலிருந்தும் (60%) தென் மாகாணத்திலிருந்து 9% சதவீதமும் மத்திய மாகாணத்திலிருந்து 10% சதவீதமும் அறிக்கையிடப்பட்டது. கைதுசெய்யப்பட்ட நபர்களின் மொத்த எண்ணிக்கையில் கொழும்பு மாவட்டத்தில் 43% சதவீதமும் கம்பஹா மாவட்டத்தில் 13% சதவீதமும் குருநாகல் மாவட்டத்தில் 4% சதவீதமும் ஆகும். 2016 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றச்செயல்களுக்காக கைதுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கையின் போக்கு, சனத்தொகையில் ஓரிலட்சம் பேருக்கு 390 பேர் ஆவர்.

கஞ்சா

இலங்கையில் குறிப்பாக உலர் வலயத்தின் கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகாணத்தின் எல்லைப் புறங்களிலும் சட்டரீதியற்ற விதத்தில் பயிரப்படுகிறது. கஞ்சா பயிரிடப்பட்டுள்ளதாகக் கருதப்படும் மதிப்பீடுசெய்யப்பட்ட காணியின் விஸ்தீரணம் சுமார் 500 ஹெக்டேயராகும். ஏனைய பயிர்களுடன் ஒப்பிடுமிடத்து குறைந்தளவான உழைப்புடனும் குறைந்த செலவுடனும் பயிரிடக்கூடிய கஞ்சா, மிகக் குறைந்தளவிலேயே இயற்கை அனர்த்தங்களுக்கும் இரையாகிறது. கஞ்சா பயிரிடுவதற்கு நவீன தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்படுகிறது. இன்று போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் நபர்கள் மத்தியில் உள்ளூர் மற்றும் இந்தியாவிலிருந்து சட்டரீதியற்ற விதத்தில் இந்நாட்டுக்கு எடுத்துவரப்படும் கேரளா கஞ்சா ரகங்களை நாடும் போக்கு அதிகளவில் காணப்படுகிறது.

2016 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுசெய்யப்பட்டவர்களில் கணிசமானவர்கள், (47,787) கஞ்சா சார்ந்த குற்றச்செயல்களுக்காகவே கைதுசெய்யப்பட்டிருந்தனர். கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையில் கூடுதலான கஞ்சா சார்ந்த திடீர் சுற்றிவளைப்புகள் கொழும்பு மாவட்டத்திலிருந்து (35%) அறிக்கையிடப்பட்டுள்ளது. கஞ்சா சார்ந்த சுற்றிவளைப்புகளில் கம்பஹா மாவட்டத்திலிருந்து 12% சதவீதமும் மாத்தறை மாவட்டத்திலிருந்து 3% சதவீதமும் அறிக்கையிடப்பட்டுள்ளது. கஞ்சா சார்ந்த திடீர் சுற்றிவளைப்புகளில் கணிசமானவை இலங்கை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மதுவரித் திணைக்களம் மூலமும் விசேட அதிரடிப்படை மூலமும் கணிசமான திடீர் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. கஞ்சாவை கிராமப்புறங்களிலிருந்து கொழும்பிற்கும் ஏனைய பிரதேச நகரங்களுக்கும் விநியோகிப்பதன் ஊடாக கடத்தல்காரர்கள் மிகப் பெரிய அளவில் இலாபமீட்டுகின்றனர். திடீர் சுற்றிவளைப்புகளிலிருந்து தப்புவதற்காக கஞ்சா போக்குவரத்திற்கு பொதுப் போக்குவரத்து சேவைகளும் முச்சக்கர வண்டிகளும் தனியார் வாகனங்களும் பயன்படுத்தப்படுகிறது. அண்மைக் காலத்தில் போதையூட்டும் ஔடதங்களைப் பயன்படுத்தியதற்காக கைதுசெய்யப்பட்டவர்களில் கஞ்சாவுடன் சம்பந்தப்பட்ட கைதுகள் அதிகரித்துள்ளதை தெளிவாக அவதானிக்க முடிகிறது. 2016 ஆம் ஆண்டில் நாடுமுழுதும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது கைதுசெய்யப்பட்ட கஞ்சாவின் அளவு 4,174 கிலோ கிராம்களாகும். மேல் மாகாணத்திலிருந்து கஞ்சா சார்ந்த குற்றச்செயல்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் 51% சதவீதமும் தென் மாகாணத்திலிருந்து 10% சதவீதமும் மத்திய மாகாணத்திலிருந்து 9% சதவீதமும் வடமேல் மாகாணத்திலிருந்து 8% சதவீதமும் ஆகும். 2016 ஆம் ஆண்டில் கஞ்சா சார்ந்த கைதுகளின் போக்கு, நாட்டின் சனத்தொகையில் ஓரிலட்சம் பேருக்கு 235 பேர் ஆவர். இன்று கஞ்சா பாவனை இலங்கையர் சமூகத்தில் அழிவுகரமான ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இப்போக்குடன் நாட்டினுள் கஞ்சா பாவனையாளர்களில் அதிகரிப்பொன்றை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

கஞ்சாவில் அடங்கியிருக்கும் நச்சுத்தன்மையை அகற்றிவிட்டு ஆயுர்வேத ஔடதங்களைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. ஆயுர்வேத வைத்தியர்களும் ஆயுர்வேத ஔடதங்களைத் தயாரிக்கும் கம்பனிகளும் இதன் பிரதான சட்டரீதியான வாடிக்கையாளர்களாவர். 2016 ஆம் ஆண்டில் ஆயுர்வேத ஔடதங்களைத் தயாரிப்பதற்கு 332.54 கிலோ கிராம் கஞ்சா பயன்படுத்தப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டில் மதன மோதகம், காமேஷ்வரீ மோதகம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு 129.8 கிலோ கிராம் கஞ்ஜாவை ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனம் மட்டும் உபயோகித்துள்ளது.

### ஹெரோயின்

1970 தசாப்தத்திற்கு முன்பு இலங்கையில் ஹெரோயின் பாவித்தவர்கள் பற்றி அறியக் கிடைக்கவில்லை என்பதுடன், இந்நாட்டில் ஹெரோயின் பாவனையின் பரம்பல் சுற்றுலாக் கைத்தொழில் வளர்ச்சியுடன் பிணைந்துள்ளது. வெளிநாட்டவர்களால் இலங்கையில் ஹெரோயின் அறிமுகப்படுத்தப்பட்டதாக நம்பப்படுவதுடன், 1980 களைத் தொடர்ந்து ஹெரோயின் இலங்கையின் நகர்ப்புறங்களில் பரம்பலடையலாயிற்று. அதனைத்தொடர்ந்து ஆபத்தான ஒரு சூழல் உருவானது. ஹெரோயின் பாவிப்பவர்கள் கைதுசெய்யப்பட்டனர். முக்கியமாக கொழும்பு நகரிலும் சில பகுதிகளின் நகர்ப்புறங்களிலும் அது முக்கியமாக பயன்படுத்தப்பட்டுவந்ததுடன், ஏனைய நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் பரம்பலடைய ஆரம்பித்தவுடன் அது மிகவும் பாரதூரமான ஒரு பிரச்சினையாக உருவெடுத்தது. அது பிரதானமாக நாட்டின் சுகாதார மற்றும் சமூகப் பிரச்சினையொன்றாகவும் மாறியுள்ளது.

போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்களில் கைதுசெய்யப்பட்ட பெரும்பாலானோரும் தமது பாவனைக்கு மிகச் சிறியளவு போதையூட்டும் ஔடதங்களை தம் வசம் வைத்திருந்தவர்களாவர். இலங்கையில் மதிப்பிடப்பட்ட 45,000 ஹெரோயின் பாவனையாளர்களுக்கு வருடாந்தம் தெரு மட்ட ஹெரோயின் 1,478 கிலோ கிராம்கள் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அது நாளொன்றுக்கு 04 கிலோ கிராம்களாகும். பெரும்பாலும், இந்தியாவிலிருந்து அல்லது பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு ஹெரோயின் கொண்டுவரப்படுகிறது. மீன்பிடிப் படகுகள் மூலம் அல்லது வெளிநாட்டவர்கள் எடுத்துவருவதன் மூலமும் நாட்டிற்குள் ஹெரோயின் பிரதானமாக போக்குவரவு செய்யப்படுகிறது. பிரதானமாக போதையூட்டும் ஔடதங்களின் கடத்தலுக்கு தென்னிந்தியா ஊடாக மேற்குக் கரையோரப் பகுதிக்கு மீன்பிடிப் படகுகளின் உதவியுடனும் வேறு வழிகளிலும் ஹெரோயின் போக்குவரவு செய்யப்படுகிறது. 2016 ஆம் ஆண்டில் 206 கிலோ கிராம் ஹெரோயின் சட்டத்தின் பிடியில் சிக்கியது. 27,462 பேர் கைதாகினர். ஹெரோயின் சம்பந்தப்பட்ட கைதுகள் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 2016 ஆம் ஆண்டில் 3% சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் ஹெரோயின் சம்பந்தப்பட்ட கைதுகளின் போக்கு நாட்டின் சனத்தொகையில் ஓரிலட்சம் பேருக்கு 135 பேர் ஆகும்.

### அபின்

அபின் துஷ்பிரயோகத்தை இன்று இலங்கையில் அவதானிக்க முடியவில்லை. ஆயுர்வேத மருந்துப் பொருள்களைத் தயாரிப்பதற்கு பிரதானமாக அபின் பயன்படுத்தப்படுகிறது. சுகாதார அமைச்சினால் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு அரசாங்க வைத்தியசாலைகள் ஊடாக அவசியமான அளவு அபின் வழங்கப்படுகிறது. 2016 ஆம் ஆண்டில் அபின் சம்பந்தப்பட்ட குற்றச்செயல்களுக்காக நான்கு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### தெருமட்டத்தில் விற்பனையாகும் போதையூட்டும் ஔடதங்களின் சராசரி விலைகள்

2016 ஆம் ஆண்டில் ஹெரோயின் போதைத்தூள் தெரு விலையின் சராசரிப் பெறுமானம், 09 மில்லியன் ரூபா (58,705 ஐ.அ.டொலர்) ஆகும். 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, தெரு விலைகள் 13% சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அதாவது, 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, ஹெரோயினின் தெரு விலை 08 மில்லியன் ரூபாவிலிருந்து 09 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. ஒரு கிலோ கிராம் கஞ்சாவின் தெரு விலையின் சராசரிப் பெறுமானம் 22,000 ரூபா (143.5 ஐ.அ.டொலர்) ஆகும். 2016 ஆம் ஆண்டில் அபின் கிலோ கிராம் அலகு ஒன்றின் விலை 1.5 மில்லியன் ரூபா (9,784 ஐ.அ.டொலர்) ஆகும்.

**ஹெரொயின் போதைத்தூளின் தூய்மான பெறுமானத்தின் (Purity) சராசரி (டை எசிட்டைல் மோர்.்.பீன் சதவீதம்)**

2016 ஆம் ஆண்டில் இலங்கையில் தெரு ஹெரொயினின் டை எசிட்டைல் மோர்.்.பீன் அளவின் சராசரிப் பெறுமானம் 17.87% ஆக இருந்தது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 16% சதவீதத்தால் அது அதிகரித்துள்ளது. பொதுவாக டைசி.்.பேம், எசிடமிநோ.்.பீன், கெ.்.பேன் என்பன ஹெரொயினின் கலப்பட பதார்த்தங்களாக (adulterants) பயன்படுத்தப்படுகின்றன. தெரு மட்டத்தில் விற்பனையாகும் போதையூட்டும் ஔடத மாதிரிகள் தேசிய போதையூட்டும் ஔடதங்கள் ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன், அத்தகைய மாதிரிகளின் பகுப்பாய்வும் அங்கு மேற்கொள்ளப்படுகிறது.

**உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள்/உளநிலைமாற்றி (Psychotropic Substances)**

உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள்/பதார்த்தங்களின் துஷ்பிரயோகம், இலங்கையில் ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது. வைத்தியக் காரணங்களின் பேரில் அல்லது சந்தையில் ஹெரொயின் கிடைக்காதபோது விலகல் அறிகுறிகளைத் (withdrawal symptoms) தவிர்த்துக்கொள்வதற்காக இத்தகைய உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களை ஹெரொயின் பாவிப்பவர்கள் எடுக்கின்றனர். எவ்வாறாயினும், வைத்தியரின் சிபார்சின்றி இவ்வாறான உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களை விநியோகிப்பது தடைசெய்யப்பட்டுள்ள-போதும், சட்டரீதியற்ற முறைகளில் இவற்றை சந்தையில் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புள்ளது. 2016 ஆம் ஆண்டில் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களையும் வைத்தியக் காரணங்களின் பேரில் பயன்படுத்தும் சில ஔடத வகைகளையும் துஷ்பிரயோகம்செய்யும் ஒரு போக்கு பற்றி அடையாளம் காணப்பட்டுள்ளது. அறிக்கையிடப்படும் சம்பவங்கள் மற்றும் தரவுகளின்படி மேல் மாகாணத்தில் இது சம்பந்தமாக உயர் போக்கொன்று காணப்படுவதாக அடையாளம் காண முடிகிறது. 2016 ஆம் ஆண்டில் மருந்து வகைகளின் துஷ்பிரயோகம் சம்பந்தமாக தேசிய ஔடதங்கள் கண்காணிப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புகளின்போது சட்டரீதியற்ற முறையில் டிரமடோல் (Tramadol) எனும் வலிநீக்கி மாத்திரைகளை தம் கைவசம் வைத்திருந்த அதேபோல் விநியோகித்த பல சம்பவங்கள் பற்றி அறிக்கையிடப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்ட நபர்களிடையே வெளிநாட்டவர்களும் அடங்குவதுடன், பெரும்பாலான சம்பவங்கள் கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலிருந்து அறிக்கையிடப்பட்டுள்ளன.

**போதையூட்டும் ஔடதங்களின் போக்குவரவு**

சட்டவினைப்படுத்துகை நிறுவனங்களினால் கைதுசெய்யப்படும் போதையூட்டும் ஔடத அளவுகள், சட்டவிரோதமான போதையூட்டும் ஔடதங்களின் போக்குவரவு மட்டத்தை நிர்ணயிக்கும் ஒரு குறிகாட்டியாகும். போதையூட்டும் ஔடதங்களின் போக்குவரவில் முக்கிய கேந்திரமாக இலங்கை அமைந்துள்ளதுடன், பாகிஸ்தானிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் கொண்டுவரப்படும் போதையூட்டும் ஔடதங்கள் ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகளுக்கு போக்குவரவு செய்யப்படுகிறது.

கடந்த 05 வருடங்களை எடுத்து நோக்குமிடத்து, தென்கிழக்காசிய ஹெரொயின் (பிரவுன் சுகர்) பிரதானமாக இந்தியாவிலிருந்தும் பாகிஸ்தானிலிருந்தும் சட்டமுரணான வழிகளில் இலங்கைக்கு கடத்தப்படுகிறது என்பது ஹெரொயின் சார்ந்த கைதுகள் மற்றும் பிடிபடல்களின் தரவுகளின்படி தெரிய வரும் விடயமாகும். கடந்த 05 வருட காலப்பகுதியில் 186 வெளிநாட்டவர்கள் இலங்கையில் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 58 பேர் இந்தியர்கள் ஆவர். 2016 ஆம் ஆண்டில் இலங்கையர்கள் 05 பேர் வெளிநாடுகளில் கைதுசெய்யப்பட்டனர். இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் அவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

**சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புச் சேவை**

போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்கான வதிவிட மற்றும் புனர்வாழ்வளிப்புச் சேவைகளை இலங்கையில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. 2007

ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்கான கட்டாய சிகிச்சையளிப்பு வசதிகள் அறிமுகம் செய்யப்பட்டன. போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்கான 04 சிகிச்சை அளிப்பதற்கான 04 வதிவிட சிகிச்சையளிப்பு நிலையங்கள் கொழும்பு, கண்டி, காலி, நிட்டம்புவ ஆகிய இடங்களில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின்கீழ் இயங்கி வருகின்றன. இதற்கு மேலதிகமாக, வெளிநிலைச் சேவை நிகழ்ச்சித்திட்டங்களும் அமுலில் உள்ளன.

இச்சிகிச்சையளிப்பு நிலையங்களில் உளவியல் சிகிச்சைமுறை கையாளப்படுகிறது. இச்சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் தனிநபரையும் குடும்பத்தையும் மையப்படுத்திய ஆலோசனைச் சேவையும் நச்சுத்தடைநீக்க சிகிச்சைகள், உடலியற் செயற்பாடுகள், உள நலம், வீட்டு மற்றும் வெளிநிலைச் செயற்பாடுகள், உளநலச் சிகிச்சைகள், கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிகள், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன உள்ளடங்கும்.

2016 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட 2,355 சேவைபெறுநர்களுக்கு சிகிச்சையளிப்புச் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. அச்சேவைபெறுநர்களில் 826 பேர் (35%) தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையிலிருந்தும், 684 பேர் (29%) சிறைச்சாலை சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமும் 474 பேர் (20%) அரச சார்பற்ற அமைப்புகள் மூலமும் 371 பேர் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகத்தின் கீழ் இயங்கும் கந்தகாடு சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையத்திலிருந்தும் சிகிச்சைகளையும் புனர்வாழ்வளிப்புச் சேவைகளையும் பெற்றுக் கொண்டுள்ளதுடன், குறித்த சேவைபெறுநர்களில் பெரும்பாலானவர்கள் (51%) கொழும்பு மாவட்டத்திலிருந்து சென்றவர்களாவர். சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டவர்களில் 62% சதவீதமானவர்கள் 30 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களாவர். 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2016 ஆம் ஆண்டில் சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 59% சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

### சிறையிடப்படல்

2016 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்களுடன் சம்பந்தப்பட்டதன் காரணமாக சிறையிடப்பட்ட நபர்களின் மொத்த எண்ணிக்கை 24,060 ஆகும். அவர்களில் நச்சுத்தன்மைவாய்ந்த போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றங்களுக்காக 10,535 பேர் சிறையிடப்பட்டுள்ளனர். அது மொத்த சிறையிடப்பட்டவர்களின் எண்ணிக்கையில் 44% சதவீதமாகும். 2016 ஆம் ஆண்டில் கஞ்சாவுடன் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்காக 2,739 பேரும் (26%) ஹெரொயின் சார்ந்த குற்றங்களுக்காக 7,783 பேரும் (74%) சிறையிடப்பட்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2016 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றங்களுக்காக சிறையிடப்பட்டவர்களின் சதவீதம் 6% சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

### எச்.ஐ.வி./ எயிட்ஸ்

போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உடலுக்குட்செலுத்திக்கொள்வதன் மூலம் எச்.ஐ.வி. தொற்றும் ஆபத்துள்ளது. போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்கள் மத்தியில் உட்செலுத்தும் உபகரணங்களைப் பரிமாறிக்கொள்வதால் குருதி ஊடாக ஆளொருவருக்கு எச்.ஐ.வி/ எயிட்ஸ் தொற்றலாம்.

இலங்கையில் முதல் தடவையாக எச்.ஐ.வி. தொற்றிய ஒருவர் பற்றி 1987 ஆம் ஆண்டிலேயே அறியக் கிடைத்தது. உத்தியோகபூர்வ அறிக்கைகளின்படி 2016 ஆம் ஆண்டளவில் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளான 2,557 பேர் பற்றி அறியக் கிடைத்துள்ளதுடன், 1,640 ஆண்களும் 917 பெண்களும் இதில் அடங்குவர். கடந்தாண்டின் அறிக்கைகளின்படி நோக்கும்போது 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 6% சதவீதத்தாலும் ஆண்களின் எண்ணிக்கை 10% சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டளவில் எயிட்ஸ் நோய்த் தொற்றுக்கு ஆளாகிய 656 பேர் காணப்பட்டனர். அவர்களில் 456 பேர் ஆண்களும் 200 பேர் பெண்களும் ஆவர். 2016 ஆம் ஆண்டளவில் எயிட்ஸ் நோய் தொற்றியதன் காரணமாக மரணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 414 ஆக இருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் மாத்திரம் 47 பேர் மரணமடைந்திருந்தனர்.

சட்டவினைப்படுத்துகை

இலங்கை பொலிஸ், பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பிரிவு, மதுவரித் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம், இலங்கைச் சுங்கம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், முப்படைகள் போன்ற சட்டவினைப்படுத்துகை நிறுவனங்கள் 2016 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றச்செயல்கள் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தன. போதையூட்டும் ஔடதங்கள் சட்டத்தை அமுல்படுத்தும் குழுவின் ஊடாக சட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை எடுப்பதுடன், புதிய சட்டங்களை இயற்றுவதிலும் கொள்கைகளை வகுப்பதிலும் நாடுபூராவும் சட்டத்தை வினைப்படுத்துவதிலும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை ஈடுபட்டுள்ளது. இதற்குப் புறம்பாக, சிறைச்சாலைத் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்களுடனும் வேறு அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் இணைந்து போதையூட்டும் ஔடத சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகளை சபை முன்னெடுத்து வருகிறது.

போதையூட்டும் ஔடதங்கள்சார்ந்த குற்றச்செயல்கள்

போதையூட்டும் ஔடத பாவனை சமூக மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் ஒரு சமூகத் தோற்றப்பாடாக இருப்பதுடன், உரிய காலத்தில் அறிக்கையிடப்படும் சிறிய மற்றும் பாரிய அளவான குற்றச்செயல்கள் சம்பந்தமாக புலனாய்வுசெய்யும்போது போதையூட்டும் ஔடதங்களுக்கும் குற்றச் செயல்களுக்கு இடையில் ஓர் இடைத்தொடர்பு நிலவுவதை அவதானிக்கலாம். கொழும்பு குற்றவியல் பிரிவின் குற்றச்செயல்கள் தொடர்பான ஆண்டுக்குரிய தரவுகளின்படி 2016 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடத பாவனையுடன் சம்பந்தப்பட்ட சிறிய மற்றும் பாரிய 1,762 குற்றச்செயல்கள் பற்றி அறிக்கையிடப்பட்டுள்ளது. அவற்றில் மேல்மாகாணத்திலிருந்து போதையூட்டும் ஔடதங்களுடன் சம்பந்தப்பட்ட 1,140 (65%) குற்றச்செயல்களும் மத்திய மாகாணத்திலிருந்து 168 (10%) குற்றச்செயல்களும் தென் மாகாணத்திலிருந்து 81 (5%) குற்றச்செயல்களும் பற்றி அறிக்கையிடப்பட்டுள்ளது.

# 7. சபையின் கூட்டிணை ஆளுகை

வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சபையின் நல்லாட்சிக்கான வழிகாட்டுநெறிக் கோவையின்கீழ் சபை முகாமை செய்யப்படுகிறது. இதற்குப் புறம்பாக, சபையினால் தயாரிக்கப்படும் விசேட வழிகாட்டுநெறிக்கோவையும் தாபனவிதிக்கோவையும் ஏற்புடைத்தாக்கிக்கொள்ளப்படுகிறது.

**சபை**

சபையின் தவிசாளர் உட்பட நியமிக்கப்பட்ட 04 உறுப்பினர்களையும் பதவிவழியால் நியமிக்கப்பட்ட 06 உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டத்தின் பிரகாரம், சபை மாதம் ஒருமுறை கூடும்.

**உப குழுக்கள்**

நல்லாட்சிக்கான பொது தொழில்முயற்சிகள் வழிகாட்டுநெறிக்கோவையின்படி சபையினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று இருக்கும்.

போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமான சட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய நிறுவனங்களின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் அடங்கிய சட்ட வினைப்படுத்துகை உப குழு இலங்கையில் போதையூட்டும் ஔடத உபத்திரவங்களை ஒழித்துக்கட்டுவதற்கும் போதையூட்டும் ஔடதங்களின் வழங்கலையும் துஷ்பிரயோகத்தையும் இயன்றளவு குறைப்பதற்கும் சட்டவினைப்படுத்துகைக்கும் பலப்படுத்துவதற்கும் அவசியமான முக்கிய தீர்மானங்களை மேற்கொண்டு மிகவும் வினைத்திறனான ஒரு குழுவாக செயற்படுகிறது.

காலத்திற்குக் காலம் போதையூட்டும் ஔடத வழங்கல்களும் துஷ்பிரயோகமும் சம்பந்தமாக உலகில் உருவாகும் போக்குகளுக்கு முகங்கொடுப்பதற்கு ஏற்ற விதத்தில் இலங்கையில் போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமான சட்டத்தை மேலும் பலப்படுத்துவதற்கு செயல்வலுவிலுள்ள சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் மீளாய்வுசெய்தல், திருத்துதல், புதிய சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் ஆக்குதல் என்பவற்றுக்கு அவசியமான நடவடிக்கைகளை சபையின் சட்டவாக்க உப குழு மேற்கொள்கிறது.

# 8. செயற்பாடுகள் குறித்த மீளாய்வு

## 8.1 போதையூட்டும் ஔடதங்கள் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

போதையூட்டும் ஔடதங்கள் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவானது இலங்கையில் போதையூட்டும் ஔடத தடுப்பு பற்றிய முன்னணி, முனைப்புடன் இடையீடுசெய்யும் ஒரு பிரிவாகும்.

இலங்கையின் நியதிச்சட்டத்திற்கும் சர்வதேச சமவாயங்களுக்கும் அமைவாக போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்தின் பரம்பலைக் குறைப்பதும் போதையூட்டும் ஔடதங்கள் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்கு போதையூட்டும் ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்றுவதற்காக தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு முனைப்பான பங்களிப்பை வழங்குகிறது.

போதையூட்டும் ஔடத துஷ்பிரயோக நடத்தை, தடுப்புக்காக பாடசாலை மாணவ மாணவிகள், இளைஞர் யுவதிகள், பல்கலைக்கழக மாணவ மாணவிகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் தனியார்துறை நிறுவனங்களிலும் பணிபுரியும் தொழிற்றுறையாளர்களும் வியாபாரிகளும் பொதுமக்களும் போதையூட்டும் ஔடதங்கள்பால் ஈர்க்கப்படுவதன்மீது பாதிப்புச் செலுத்தும் ஆபத்தான காரணிகள் மீது சிறப்பாக கவனம் செலுத்தி போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுக்கும் தேவையை தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு அடையாளம் கண்டுள்ளது.

பொதுமக்கள் மத்தியில் காணப்படும் போதையூட்டும் ஔடதங்கள் மீதான கேள்வியைக் குறைப்பதற்கு தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் நாளதுவரைப்படுத்திய நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளதுடன், எமது பிரிவின் பணியாளர்குழாம் விடயம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவம் கொண்டதாக பண்புத்தரமுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை சமூகத்திற்கு முன்வைப்பதற்கு கடப்பாடுடையது.

2016 ஆம் ஆண்டில் சிறப்பான முன்னேற்றமொன்றைப் பதிவுசெய்து நாட்டின் எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்கக்கூடிய விதத்தில் போதையூட்டும் ஔடத தடுப்புச் செய்தியை சமூகமயப்படுத்த தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவிற்கு வாய்ப்புக் கிட்டியது.

#### பாடசாலை மாணாக்கருக்கான தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

பாடசாலைப் பிள்ளைகளுக்கான பயனுறுதிவாய்ந்த போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் அம்மாணவர்களின் போதையூட்டும் ஔடதங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பான அறிவு விருத்தியையும் போதையூட்டும் ஔடதங்களுக்கான கேள்வியையும் குறைக்கும் ஆற்றல் உள்ளது என்பதை ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர்.

இப்புரிந்துணர்வுடன் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு கூடுதல் கவனத்தை பாடசாலைப் பிள்ளைகள் மீது செலுத்துகிறது.

பாடசாலைப் பிள்ளைகளுக்காக அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் கல்விக் கோட்பாடுகள் மீது அமைந்த கலாசார கூருணர்ச்சியுடன்கூடிய பிரயோக ரீதியான செயற்பாடுகள் கொண்டதாக ஒழுங்கு செய்யப்படுகிறது.

வாழ்க்கைத் திறன்களை விருத்திசெய்வதன் ஊடாகவும் பாடசாலை மாணவ மாணவிகள் மத்தியில் போதையூட்டும் ஔடதங்களை நிராகரிக்கும் திறனை முன்னேற்றுவதன் ஊடாகவும் போதையூட்டும் ஔடத தடுப்பை மேற்கொள்வதன் மீது தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு மூலம் அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் கவனம் கோரப்படுகிறது.

தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் பாடசாலைப் பிள்ளைகளுக்கு நடத்தும் தடுப்புக்கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்மூலம் அடையப்பெற்றுள்ள புள்ளிவிவர ரீதியான முன்னேற்றம் கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு பாடசாலைப் பிள்ளைகளுக்கான 500 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு மதிப்பீடுசெய்ததுடன், 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 607 நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கத் துணிந்துள்ளது. அது உத்தேச நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒப்பீடாக 107 நிகழ்ச்சித்திட்டங்களின் வளர்ச்சியாகும். சதவீத அடிப்படையில் நோக்கின், அது 121.4% சதவீத வளர்ச்சியொன்றைச் சுட்டிநிற்கிறது. 2016 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக உள்ளடக்க எதிர்பார்க்கப்படும் மாணாக்கர்களின் எண்ணிக்கையின் இலக்கு 130,000 ஆக இருப்பதுடன், ஆண்டின் இறுதியில் உள்ளடக்கிய மாணாக்கர்களின் எண்ணிக்கை 120,876 ஆகும். அதனை சதவீத அடிப்படையில் நோக்கின், 92.98% ஆல் இலக்கை நோக்கிய அடைவகக் குறிப்பிடலாம்.

2015 ஆம் ஆண்டில் பாடசாலை மாணாக்கர்களுக்கான 564 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் உள்வாங்கப்பட்ட மாணாக்கர்களின் எண்ணிக்கை 99,956 ஆகும். 2016 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையான 607 உடன் ஒப்புநோக்கும்போது அது 2015 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 107.6% முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகிறது. 2016 ஆம் ஆண்டில் உள்வாங்கப்பட்ட மாணாக்கர்களின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பீடாக 120.92% முன்னேற்றமொன்றைப் பதிவுசெய்கிறது.

### சர்வதேச பாடசாலைப் பிள்ளைகளுக்கான தடுப்பு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

அரசாங்கப் பாடசாலைகளுக்குப் புறம்பாக, இலங்கையில் இயங்கிவரும் தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி நிலைமையொன்றை இன்றளவில் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலையைப் புரிந்துகொண்ட தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு, காலத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு நிகழ்ச்சித்திட்டங்கள் சிலவற்றை சர்வதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளை இலக்கிட்டதாக அமுல்படுத்தியது.

தமது பிள்ளைகளுக்கு உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ற கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்குடன் பெரும்பாலான பெற்றோர்கள் இப்பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்பிவைப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

இத்தேவைகளைப் புரிந்துகொண்டு தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு, கல்விக் கோட்பாடுகள் மீதமைந்த முனைப்பான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை சர்வதேச பாடசாலை மாணவ மாணவிகளை இலக்கிட்டதாக அமுல்படுத்தியது.

தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு 2016 ஆம் ஆண்டில் சர்வதேச பாடசாலைகளுக்காக 10 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்த உத்தேசித்ததுடன், ஆண்டின் இறுதிப் பகுதியில் 17 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தத் துணிந்தது. அது 170% வளர்ச்சியைச் சுட்டி நிற்கிறது.

சர்வதேச பாடசாலைகளின் 2,760 மாணவ மாணவிகள் 2016 ஆம் ஆண்டில் உள்வாங்கப்பட்டனர். அது எதிர்பார்த்த மாணவர்கள் எண்ணிக்கையான 2000க்கு ஒப்பீடாக 138% சதவீத வளர்ச்சியொன்றைச் சுட்டிநிற்கிறது.

### வாழ்க்கைத்தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்களின் போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்சசித்திட்டங்கள்

1995 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மூன்றாம்நிலைப் பயிற்சி அதிகாரசபையினால் இலங்கையின் தொழிற்சந்தைக்கு ஏற்றவாறு பயிற்றப்பட்ட உழைப்பாளர்களையும் தொழிற்றுறையாளர்களையும் உருவாக்கும் நோக்குடன், பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்த பிள்ளைகளுக்காக கிராமப்புற பிள்ளைகள் எளிதில் சென்றடையக்கூடிய விதத்தில் பெரும் எண்ணிக்கையான வாழ்க்கைத்தொழிற் பயிற்சிக் கற்கைநெறிகள் முன்னெடுக்கப்படுகின்றன. பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்து பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பைப் பெறாத பிள்ளைகளுக்கு திறன் விருத்தியின் ஊடாக

பட்டம்பெறும் மட்டம் வரை செல்வதற்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது இதன் நோக்கமாகும். இங்கு இலங்கையில் அமுலிலுள்ள வாழ்க்கைத்தொழில் மற்றும் மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்களில் பிரவேசிக்கும் பிள்ளைகளில் வாழ்க்கைத் திறன்களை விருத்திசெய்து தடுப்புக் கல்வியின் ஊடாக வலுப்படுத்துவதை நோக்காகக்கொண்ட பல நிகழ்ச்சித்திட்டங்கள் கடந்த சில ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 2016 ஆம் ஆண்டில் எல்லாப் பிரதேசங்களிலும் வாழ்க்கைத்தொழில் மற்றும் மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்களில் பயிற்சிபெறும் மாணவ மாணவிகளுக்கு போதையூட்டும் ஔடதங்கள் தடுப்புச்செய்தியைக் கொண்டுசேர்ப்பதற்கு தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது.

போதையூட்டும் ஔடத தடுப்புக் கல்விப் பிரிவினால் 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வாழ்க்கைத்தொழில் மற்றும் மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்களுக்கு நடத்த எதிர்பார்த்த நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 150 ஆக இருந்ததுடன், உள்வாங்க எதிர்பார்க்கப்பட்ட மாணவ மாணவிகளின் எண்ணிக்கை 22.000 ஆக இருந்தது. 2016 ஆம் ஆண்டு இறுதியில் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் 125 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதுடன், 12,722 மாணவ மாணவிகள் அந்த நிகழ்ச்சித்திட்டங்கள்மூலம் உள்வாங்கப்பட்டனர். உத்தேச இலக்கையும் அடைந்த இலக்கையும் ஒப்பிடும்போது சதவீதமாக நோக்கின் நிகழ்ச்சித்திட்டத்திற்கு 83.33% என்றும், உள்வாங்கப்பட்ட மாணாக்கர்களின் எண்ணிக்கை 58.05% என்றும் குறிப்பிடலாம்.

2015 ஆம் ஆண்டு மற்றும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2015 ஆம் ஆண்டில் வாழ்க்கைத்தொழில் மற்றும் மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்களில்கு 87 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டில் அவ்வெண்ணிக்கையை 125 வரை அதிகரித்துக்கொள்ள முடிந்தது. அது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 143.675% வளர்ச்சியாகும். 2015 ஆம் ஆண்டில் உள்வாங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 8,170 ஆக இருக்கும்போது 2016 ஆம் ஆண்டில் 12,722 மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர். அதன்படி, 2016 ஆம் ஆண்டில் 2015 ஆம் ஆண்டை விட 4,602 மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர்.

### முன்சிறுவர் பராய அபிவிருத்தியும் போதையூட்டும் ஔடத தடுப்பும் கருதி பெற்றோரை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள்

வளரிளம் பராயத்தில் வெளிப்படக்கூடிய போதையூட்டும் ஔடதங்களின் பாவனையும் ஏனைய பிரச்சினைக்குரிய தனிமனித நடத்தைகளின் மூலகாரணங்கள் பெரும்பாலும் முன் பிரசவ காலகட்டத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகளின் பலவீனங்கள் வரை நீடிக்கும் என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இதன் அடிப்படையில், போதையூட்டும் ஔடத தடுப்பை எந்தவொரு வயது மட்டத்திலும் ஈடுபடுத்திக் கொள்ளலாம் என்றபோதும், முன் சிறுவர் பராயத்தில் அதாவது தனிமனித வளர்ச்சி வேகமாக இடம்பெறும் அதேபோல் மிக எளிதில் நேர்ப்படியான நடத்தைகளை உருவாக்கிக்கொள்ளக்கூடிய காலகட்டத்தில் இந்த அணுகுமுறைகளை பெற்றோருக்கு அறிமுகப்படுத்துவது நீண்டகாலப் பெறுபேறுகளைப் பெற்றுத்தரும்.

முன்சிறுவர் பராயத்தில் பாதுகாப்புக் காரணிகளை வளர்ப்பதற்கும் ஆபத்துக் காரணிகளைக் குறைப்பதற்கும் அவசியமான தலையீட்டை முன்னேற்றுவது இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பின்வரும் முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்படுமென ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

முன்சிறுவர் பராயத்தில் போதையூட்டும் ஔடதங்களின் தடுப்புக்காக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் நீண்டகால நேர்ப்படியான பெறுபேறுகளை உருவாக்குதல். அதேபோல், அதன்மூலம் விரிவான நடத்தைசார் மாற்றங்களை ஏற்படுத்துதல்.

முன்சிறுவர் பராயத்தில் மேற்கொள்ளப்படும் தலையீடுகள் மூலம் பிள்ளைகளின் உயிரியல் செயற்பாட்டின் மீது நேர்ப்படியான விதத்தில் பாதிப்புச் செலுத்துதல்.

இவ்விடயங்களை அடிப்படையாகக்கொண்டு முன்சிறுவர் பராயத்தின்கீழ் கவனத்திற்கொள்ளப்படும் முன் பிரசவ பராயம், சிசுப் பராயம், குழந்தைப் பராயம் (பிறப்பிலிருந்து 3 ஆண்டுகள் வரை), முன் பள்ளிப் பராயம் (3-5 ஆண்டுகள்) மற்றும் பாடசாலை செல்லும் பராயத்தில் (6-9 ஆண்டுகள்)

பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்கு அவசியமான காரணிகளை உருவாக்குவதற்கு பெற்றோரை வலுப்படுத்துவது இந்நிகழ்ச்சித்திட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டது.

தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் 2016 ஆம் ஆண்டுக்காக இலக்கிடப்பட்ட முன்சிறுவர் பராய அபிவிருத்தியும் போதையூட்டும் ஔடதங்களின் தடுப்புக்காக பெற்றோரை அறிவுறுத்தும் 10 நிகழ்ச்சித் திட்டங்களும் காணப்பட்டன. ஆண்டின் இறுதிப் பகுதியளவில் 17 நிகழ்ச்சித்திட்டங்களைப் பூர்த்திசெய்ய இப்பிரிவு துணிந்துள்ளது. அது 178% சதவீத முன்னேற்றமாகும்.

2016 ஆம் ஆண்டில் உள்வாங்க எதிர்பார்க்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 20,000 ஆகும். ஆண்டின் இறுதியில் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 2,760 ஆகும். உத்தேச இலக்கையும் அடையப்பெற்ற இலக்கையும் கருத்திற்கொள்ளும்பொது 138% சதவீத வளர்ச்சியொன்று ஏற்பட்டுள்ளது. முன்சிறுவர் பராய அபிவிருத்தி மற்றும் போதையூட்டும் ஔடத தடுப்புக்காக பெற்றோரை அறிவுறுத்தும் 108 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. 10,634 பேர் உள்வாங்கப்பட்டனர். இவ்வெண்ணிக்கையை 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது நிகழ்ச்சித் திட்டங்கள் 15.7% சதவீதத்தையும் உள்வாங்கப்பட்ட அளவு 25.9% சதவீதத்தையும் சுட்டி நிற்கிறது.

**பல்கலைக்கழக மாணவர்களின் போதையூட்டும் ஔடத கல்வியை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்**

பல்கலைக்கழகம் புகும் புதுமுகங்களில் கணிசமானவர்கள் வீட்டிலிருந்தும் பெற்றோரிடமிருந்தும் தூர விலகுதல், புதிய ஒரு சூழலுக்கும் நபர்களுக்கும் பழக்கப்படும் தேவை, பல்கலைக்கழக சூழலில் புதுமுகங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் புதுமாதிரியான நிகழ்ச்சித்திட்டங்களில் உட்படுதல், புதிய சமூகக் குழுக்களைக் கட்டியெழுப்பிக் கொள்ளல் என்பவற்றில் பல்வேறு உளவியல் பிரச்சினைகளுக்கு உட்படும் ஆபத்தொன்று உள்ளது. இந்நிலையில் கணிசமான பல்கலைக்கழக மாணவர்கள் போதையூட்டும் ஔடதங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கும் போதையூட்டும் ஔடங்களைப் பாவிப்பதற்கும் முனையும் ஒரு போக்கு உருவாகியுள்ளது.

இந்த ஆபத்தான நிலையைப் புரிந்துகொண்டு தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு இளைஞர்களின் தேவைகளைக் கவனிக்கத் துணிந்த கோட்பாட்டு அடிப்படையிலான விடயங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தடுப்புக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மொரட்டுவைப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட நாடுபூராவும் உள்ள பல்கலைக்கழகங்களில் அமுல்படுத்தப்பட்டது.

2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலக்கிடப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு 10 போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் காணப்பட்டதுடன், ஆண்டு இறுதிப் பகுதியளவில் 15 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது. குறித்த இலக்கை அடையும்போது 150% சதவீத வளர்ச்சியொன்று சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆண்டினுள் உள்வாங்க உத்தேசிக்கப்பட்ட மாணாக்கர்களின் எண்ணிக்கை 3,000 ஆக இருந்ததுடன், ஆண்டு இறுதிப் பகுதியளவில் 3,740 மாணாக்கர்களை உள்வாங்கி 124.66% சதவீத முன்னேற்றமொன்றைப் பெற்றுக்கொள்ளத் துணிந்துள்ளது.

2015 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்காக 08 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. உள்வாங்கப்பட்ட மாணாக்கர்களின் எண்ணிக்கை 2,315 ஆகும். இதனுடன் ஒப்பிடும்போது 2016 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டங்களின் வளர்ச்சி 137.5% சதவீதமாக இருப்பதுடன், உள்வாங்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டில் 161.55% சதவீத வளர்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகிறது.

**அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்குமான போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

ஒழுக்க பண்பாடு நிறைந்த எதிர்கால பிள்ளைகள் சந்ததியொன்றை உருவாக்குமுகமாக தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் 2016 ஆம் ஆண்டில் புத்தசாசன மற்றும் பௌத்த அலுவல்கள்

அமைச்சில் பதிவுசெய்துகொண்ட ஒவ்வொரு மதம் சார்ந்த புனிதத்தலங்களையும் மையமாகக்கொண்ட தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சித்திட்டங்களில் பன்சாலை, பள்ளிவாசல், கோயில் சார்ந்ததாக அமுல்படுத்தப்படும் அறநெறிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் ஆசிரியர் குழாமுக்கும் போதையூட்டும் ஔடதங்கள் மூலம் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து அறிவுறுத்தப்பட்டது.

இக்குறிக்கோளை அடைந்துகொள்வதற்கு தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் 2016 ஆம் ஆண்டில் நாட்டின் பெரும் எண்ணிக்கையான அறநெறிப் பாடசாலைகளை உள்வாங்கி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

2016 ஆம் ஆண்டுக்காக அறநெறிப் பாடசாலைகளை உள்வாங்கி தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 38 ஆகும். ஆண்டு இறுதிப்பகுதியளவில் 39 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்துள்ளதுடன், அதனை சதவீத அடிப்படையில் நோக்கின், 128.66% சதவீத முன்னேற்றமொன்றை சுட்டி நிற்கிறது.

அறநெறிப் பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக உள்வாங்க எதிர்பார்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 600 ஆகும்போது 2016 ஆம் ஆண்டில் உள்வாங்க முடிந்த மாணவர்களின் எண்ணிக்கை 579 ஆகும். அதனை 96.5% சதவீதத்தால் எதிர்பார்த்த இலக்கை நோக்கிய அடைவாகக் குறிப்பிடலாம்.

2016 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடத தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு அறநெறிப் பாடசாலைகளை இலக்காகக்கொண்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்ததன் காரணமாக 2015 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக பூர்த்திசெய்யப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை குறைந்த பெறுமானத்தைக் கொண்டுள்ளது.

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் வினைத்திறனையும் வாழ்வில் நல்லிருப்பின் பண்புத்தரத்தையும் வளர்க்கும் நோக்குடன் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பதன் மீது பாதிப்புச் செலுத்தும் ஆபத்தான காரணிகளைக் குறைப்பதற்கு அவசியமான போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய கல்வியை வழங்குவதற்கு இந்நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியது. அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பதன்பால் ஈர்க்கப்பட்டவுடன் சுகாதாரப் பிரச்சினைகள், நிதி நெருக்கடிகள், தொழில் அதிருப்திநிலை, உளச் சுகாதார சீர்கேடுகள், வினைத்திறன் குறைவடைதல், தனிப்பட்ட வாழ்வில் சரிவுநிலை ஏற்படுவது போன்ற உடலியல், உளவியல், சமூக மற்றும் பொருளாதார நெருக்கடிகள் ஏராளமானவற்றுக்கு முகங்கொடுக்க நேரிடுகிறது. இத்தகைய பிரச்சினைகளைத் தவிர்த்து போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் நிலையிலிருந்து விடுபடுவதற்கும் போதையூட்டும் ஔடதங்களின்பால் ஈர்க்கப்படாதிருப்பதற்கும் அவசியமான திறன்களை வளர்ப்பதன் மீது இந்நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக கவனம் செலுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, போதையூட்டும் ஔடத தடுப்பு நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு அவசியமான பங்களிப்பை அரச துறை கடமை அலுவல்களில் ஈடுபடும் கள உத்தியோகத்தர்களின் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு அவசியமான கோட்பாட்டு ரீதியான அறிவை அவர்களுக்கு வழங்குவதற்கான போதையூட்டும் ஔடத தடுப்புப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டில் நாடுபூராவும் அமுல்படுத்தப்பட்டன. பயிற்றப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் மூலம் போதையூட்டும் ஔடத தடுப்புச் செய்தியை கீழ் மட்டம் வரை எடுத்துச்செல்வதே இதன் முக்கிய நோக்கமாகும். சர்வதேச போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய கல்விக் கையேடுகளை அடிப்படையாகக்கொண்டு காலத்தின் தேவைகளுக்கு ஏற்ற பல கல்விச் செயலமர்வுகள் நாடுபூராவும் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டன.

2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு கிராம உத்தியோகத்தர்களையும், சமூர்த்தி உத்தியோகத்தர்களையும், புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளையும் உள்ளடக்கிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 150 தடுப்பு

நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு இலக்கிட்டதுடன், ஆண்டு இறுதிப் பகுதியளவில் 127 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்த முடிந்துள்ளது. அது 24.66% சதவீத முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டுகிறது. 2016 ஆண்டில் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் உள்வாங்க எதிர்பார்த்த எண்ணிக்கை 1200 ஆகும். உள்வாங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 10,334 ஆகும். அதனை 35.26% சதவீத உத்தேச இலக்கின் அடைவாகக் குறிப்பிடலாம்.

2015 ஆம் ஆண்டில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 149 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. 10,734 உத்தியோகத்தர்கள் இதன் மூலம் உள்வாங்கப்பட்டனர்.

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளை ஒப்பிடும்போது 2016 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் 2015 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 85.23% சதவீதமாகும். உள்வாங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 96.22% வளர்ச்சியொன்றைச் சுட்டிநிற்கிறது.

<u>சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களுக்கான போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்</u>

போதையூட்டும் ஔடதங்களுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் சேவைகளை ஒருங்கிணைத்த ஒரு நிகழ்ச்சித்திட்டமாக மாற்றுவது காலத்தின் தேவையாக மாறியுள்ளதுடன் கணிசமான நிறுவனங்களின் கவனம் அது குறித்து ஈர்க்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக சுகாதாரத்துறை நேரடியாகவே பங்களிப்புச் செலுத்துகிறது.

இதுவரை போதையூட்டும் ஔடதங்களின்பால் ஈர்க்கப்படாத நபர்களை அதேநிலையில் வைத்து தொடர்ந்தும் பேணுவதற்கும் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட நபர்களுக்கு சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புச் நிகழ்ச்சித்திட்டங்களினதும் சுகாதாரத் துறையினதும் தலையீடு இன்றியமையாததாகும்.

போதையூட்டும் ஔடத தடுப்புக்காக பயனுறுதிவாய்ந்த ஒரு பங்களிப்பை சுகாதாரத் துறையின் ஊடாக பெற்றுக்கொள்ளும் நோக்கில் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் மருத்துவ உத்தியோகத்தர்கள், உளநோய் வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள் சார்பாக ஒரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமான பெறுபேறுகள் அடையப்பெற்றுள்ளன.

தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் சுகாதாரத் துறைக்கு 2016 ஆம் ஆண்டுக்காக பூர்த்திசெய்ய உத்தேசிக்கும் இலக்கு 20 நிகழ்ச்சித்திட்டங்கள் என்பதுடன், உள்வாங்கப்பட உத்தேசிக்கும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 2,000 ஆகும்.

2016 ஆம் ஆண்டின் ஈற்றுப் பகுதியளவில் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு இலக்கிட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையை விஞ்சி 29 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியுள்ளது. அதன் இலக்கை அடையும்போது 145% சதவீத முன்னேற்றம் சுட்டிக்காட்டப்படுகிறது.

2016 ஆம் ஆண்டில் உள்வாங்க எதிர்பார்த்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 2000 ஆக இருக்கும்போது உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 1839 ஆகும். அது 91.95% சதவீத முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

2015 ஆம் ஆண்டில் சுகாதாரத் துறைக்கு நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 19 ஆகும். 2016 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையான 29 உடன் ஒப்பிடும்போதும், 2016 ஆம் ஆண்டில் 152.63% சதவீத வளர்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகிறது. 2015 ஆம் ஆண்டில் உள்வாங்கப்பட்ட 732 உத்தியோகத்தர்களுக்கு ஒப்பீடாக 2016 ஆம் ஆண்டில் உள்வாங்கப்பட்ட 1839 என்ற எண்ணிக்கையானது 251.22% சதவீத வளர்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டுகிறது.

<u>தோட்டப்பகுதி மக்களுக்கான போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்</u>

போதையூட்டும் ஔடதப் பிரச்சினை தோட்டப்பகுதி மக்களுக்கு இடையிலும் நெருக்கடிநிலை தோன்றக் காரணமாக அமைந்துள்ளமை கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்படுவதாக பல்வேறு ஆய்வுகள்மூலம் இனங்காணப்பட்டுள்ளது. தோட்டப்பகுதி மக்கள் போதையூட்டும் ஔடதங்களின்பால் ஈர்க்கப்படும்போது ஏராளமான சுகாதார, சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் அச்சமுதாயத்தில் வேரூன்றுவதற்கான ஒரு சூழலை உருவாக்குகிறது.

தோட்டப்பகுதி மக்கள் மேலும் வறுமையின் அதலபாதாளத்தில் வீழ்வது போதையூட்டும் ஔடத பாவனையுடன் ஏற்படும் ஒரு நிலைமையாகும். இதனை உணர்ந்து 2016 ஆம் ஆண்டில் தோட்டப்பகுதிவாழ் மக்களை இலக்காகக்கொண்டு பல்வேறு போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தோட்டப்பகுதிவாழ் மக்களுக்காக 20 போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்த உத்தேசிக்கப்பட்டது. இதன்மூலம் உள்வாங்க உத்தேசிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 2000 ஆகும். 2016 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியளவில் 34 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு போதையூட்டும் ஔடத தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது. அது எதிர்பார்த்த இலக்குடன் ஒப்பிடும்போது 170% சதவீத வளர்ச்சியாகும்.

2015 ஆம் ஆண்டில் தோட்டப்பகுதிவாழ் மக்களுக்கான 31 நிகழ்ச்சித்திட்டங்கள் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் நடத்தப்பட்டுள்ளதுடன், 2,368 நபர்கள் இதன்மூலம் உள்வாங்கப்பட்டனர்.

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2016 ஆம் ஆண்டில் தோட்டப்பகுதிகள் சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களில் 109.67% வளர்ச்சியொன்று சுட்டிக்காட்டப்படுவதுடன், பயனாளிகளில் 113.8% வளர்ச்சியொன்று சுட்டிக்காட்டப்படுகிறது.

**சட்டவினைப்படுத்துகை உத்தியோகத்தர்களை இலக்காகக்கொண்டு அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

போதையூட்டும் ஔடத தடுப்பில் வெற்றிகரமான பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்காக போதையூட்டும் ஔடதங்களுக்கான கேள்வியைக் குறைத்தல், போதையூட்டும் ஔடதங்களின் கிடைப்பனவையும் வழங்கலையும் குறைப்பதற்கான செயற்பாடுகளையும் ஒருசேர காலத்தின் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் முன்னெடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு புதிய போக்குகள் பற்றிய சிறந்ததோர் அறிவை வழங்கக்கூடிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இன்றியமையாதனவாகும்.

அதேபோல், பாதுகாப்புத் தரப்பினர் மத்தியில் கடமை அலுவல்களில் ஈடுபடும் படைவீரர்களுக்கு 30 ஆண்டு காலமாக நிலவிய கொடிய யுத்தத்தின் விளைவாக முகங்கொடுக்க நேரிட்ட அனர்த்தத்திற்குப் பிந்திய மனக்குழப்பம் அவர்களை போதையூட்டும் ஔடதங்களைப் பயன்படுத்துவதன்பால் ஈர்த்துவிடுவதில் முக்கிய தாக்கம் செலுத்துகிறது. அதேபோல், சேவையாற்றும் இடங்களில் நிலவும் கடும் மனத்தாக்கலைவும் இதன்மீது நேரடித் தாக்கம் செலுத்துகிறது. இவ்விடயங்களைப் புரிந்துகொண்டு முப்படையினர், பொலிஸார், ஏனைய சட்டவினைப்படுத்துகை உத்தியோகத்தர்களுக்கான தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டன.

இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தும்போது போதையூட்டும் ஔடத சட்டத்தை வினைப்படுத்துவதற்கு அவசியமான கல்வியை வழங்குவதன்மீது போதையூட்டும் ஔடதங்களின்பால் ஈர்க்கப்படுவதன்மீது பாதிப்புச்செலுத்தும் ஆபத்துக் காரணிகளிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு அவசியமான திறன்களை வளர்ப்பதன் மீதும் கவனம் செலுத்தப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் இலங்கைப் பொலிஸ், தரைப்படை, கடற்படை உள்ளிட்ட சட்டவினைப்படுத்துகைக்கான நிறுவனங்களுக்கு நடத்துவதற்கு இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 55 ஆகும். எனினும், ஆண்டின் இறுதிப்பகுதியளவில் 68 நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு தடுப்புக்கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்துள்ளது. அது 127.63% சதவீத முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகிறது. குறித்த நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக உள்வாங்க எதிர்பார்த்த எண்ணிக்கை 11,000 ஆகும் என்பதுடன், 2016 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியளவில் 10,614 பேர் உள்வாங்கப்பட்டுள்ளனர். அது எதிர்பார்த்த இலக்கின் 96.495 சதவீத அடைவாகும்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது 2016 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையை 11 ஆல் விஞ்சியுள்ளது. அது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2016 ஆம் ஆண்டில் 119.29% சதவீத வளர்ச்சியொன்றைச் சுட்டி நிற்கிறது.

2015 ஆம் ஆண்டில் 9,068 சட்டவினைப்படுத்துகை உத்தியோகத்தர்கள் உள்வாங்கப்பட்டனர். அது 2016 ஆம் ஆண்டில் உள்வாங்கப்பட்ட 10,614 உத்தியோகத்தர்களுடன் ஒப்பிடும்போது 2016 ஆம் ஆண்டில் 117.04% முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகிறது.

<u>சமுதாயத்தை இலக்கிட்டு நடத்தப்பட்ட தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்</u>

சமுதாயத்தை அடிப்படையாகக்கொண்டு போதையூட்டும் ஔடதங்களுக்கு நிலவும் கேள்வியைக் குறைத்து தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் வருடாந்தம் நாடு பூராவும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. கீழ்மட்ட சமுதாயத்தினருக்கு போதையூட்டும் ஔடதங்கள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல், போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த பிரச்சினைகளைக் குறைப்பதன் மீது பயனுறுதிவாய்ந்த பெறுபேறுகளை உருவாக்கும் என ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒரு சமுதாயத்தில் வாழும் அதன் அங்கத்தவர்களுக்கு தமது சமுதாயம் பற்றிய சிறந்த அறிவு இருப்பதுடன், ஏதேனுமொரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முக்கிய பங்களிப்பாற்றும் சாத்தியமும் அவர்களில் காணப்படுகிறது. இங்கு நபரொருவர் போதையூட்டும் ஔடதங்களின்பால் ஈர்க்கப்படுவதன் மீது பாதிப்புச்செலுத்தும் சூழற்காரணிகளைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், இதற்குள்ள சமூகத் தாக்கத்தைக் குறைப்பது முக்கிய நோக்கமாகும். அதேபோல், ஒவ்வொரு நபரும் தனித்துச் செயலாற்றும் ஒரு சூழலுக்குப் பதிலாக கூட்டாக போதையூட்டும் ஔடதங்களுக்கு எதிராக பயனுள்ள விதத்தில் உறுதியான ஒரு வேலைத்திட்டத்தை அமுல்படுத்தும் ஒரு சமூகத்தை உருவாக்குவதன் ஊடாக தன்னையும் தனக்கு நெருக்கமானவர்களையும் போதையூட்டும் ஔடதங்களின் ஊடாக ஏற்படக்கூடிய பாதிப்புகளிலிருந்து காத்துக்கொள்வதற்கு சுகாதார ஊக்குவிப்பு நடத்தைகளுக்குப் பழக்கி, அப்பணிகளுக்கு கீழ்மட்ட சமுதாயம் தயார்படுத்தப்பட்டது.

2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சமுதாய அடிப்படையிலான 300 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு இலக்கிடப்பட்டு திட்டமிடப்பட்டதுடன், ஆண்டு இறுதியில் உள்வாங்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 268 ஆகும். அது எதிர்பார்த்த இலக்கின் 89.33% சதவீத அடைவாகும்.

ஆண்டினுள் 243 சமுதாய அடிப்படையிலான போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் உள்வாங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 40,595 ஆகும். 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2016 ஆம் ஆண்டின் நிகழ்ச்சித்திட்டங்களில் 90.61% வளர்ச்சியொன்று பதிவாவதுடன், உள்வாங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கையை 75.31% சதவீதமாகக் குறிப்பிடலாம்.

**பொதுமக்களுக்கான கண்காட்சிகள்**

ஒரே தடவையில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்களை அணுகக்கூடிய ஒரேமுறை, பொது மக்களுக்கான கண்காட்சிகளாகும். பொது மக்களுக்கான கண்காட்சிகளின் ஊடாக குறைந்த செலவுடனும் குறைந்த காலப்பகுதியிலும் போதையூட்டும் ஔடத தடுப்புச் செய்தியை பெரும் எண்ணிக்கையான மக்கள் மத்தியில் பயனுறுதிவாய்ந்த விதத்தில் எடுத்துச்செல்ல முடியும்.

பிரதானமாக சுவரொட்டிகள், பதாகைகள் முதலியனவும் மக்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்படும் துண்டுப் பிரசுரங்களும் ஊடாக போதையூட்டும் ஔடத பாவனையினால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

அவ்வாறே 2016 ஆம் ஆண்டில் பொதுமக்கள் கண்காட்சிகளை ஏற்பாடுசெய்வதன் ஊடாக பெரும் திரளான மக்கள் மத்தியில் போதையூட்டும் ஔடத தடுப்புச் செய்தியைத் தாங்கிச்செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் 2016 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு உத்தேசித்திருந்த போதையூட்டும் ஔடத தடுப்புக் கண்காட்சிகளின் எண்ணிக்கை 20 ஆகும் என்பதுடன், அவற்றின் மூலம் உள்வாங்க உத்தேசிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 20,000 ஆகும்.

2016 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியளவில் 14 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியதன்மூலம் 70% சதவீதத்தினர் எதிர்பார்த்த இலக்கை அடைந்திருப்பதுடன், 17,545 பேரை உள்வாங்கி 87.72% தனிநபர் இலக்கு அடையப்பெற்றுள்ளது.

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2016 ஆம் ஆண்டில் 03 நிகழ்ச்சித்திட்டங்கள் மேலதிகமாகவும் சுமார் 4,000 பேரை மேலதிகமாகவும் உள்வாங்க தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது.

### இளந்தலைவர்களை பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்

எந்தவொரு சமூகத்தையும் மாற்றியமைக்கும் முக்கிய சக்தியாக சமூகத்தின் இளம் பரம்பரை விளங்குகிறது. சமூகத்தில் தீர்க்கமான விழிப்புணர்வொன்றை ஏற்படுத்துவதற்காக இளம்பராயத்தினரின் ஆக்கபூர்வ தன்மையையும் பலத்தையும் மிகவும் பயனுள்ள விதத்தில் பயன்படுத்திக்கொள்ளலாம். இளந் தலைவர்களைப் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கும் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தின்மூலம் போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை விஸ்தரிப்பதற்காக இளந்தலைவர்கள் பலப்படுத்தப்படுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய பணியகம் குறிப்பிடுகின்றவாறு சமுதாயத்திலும் உலகிலும் போதையூட்டும் ஔடத தடுப்பில் இளைஞர்கள் பலம்பொருந்திய ஒரு சக்தியாக விளங்குகின்றனர். பெரும்பாலான விஞ்ஞானிகளை விட இளம் பராயம் குறித்த பரந்ததொரு அறிவு அவர்களிடம் இருப்பதுடன், போதையூட்டும் ஔடத தடுப்புச் செய்திகளை நேர்ப்படியாகவும் அவமதிப்பிற்கு உள்ளாகாத விதத்திலும் சமவயதுக் குழுக்களிடம் கொண்டுசேர்க்கும் ஆற்றல் அவர்களிடம் உள்ளது.

இவ்விடயங்களைக் கவனத்திலெடுத்து, நாட்டில் எல்லாப் பகுதிகளும் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட இளம் தலைவர்கள் போதையூட்டும் ஔடத தடுப்பு பற்றிய பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கப்பட்டனர். இவ்வாறு பயிற்றுவிக்கப்பட்ட இளம் தலைவர்கள் தடுப்புக் கல்வி, பயிற்சிப் பிரிவின் மேற்பார்வையின்கீழ் பிரதேச மட்டத்தில் போதையூட்டும் ஔடத தடுப்பு நடவடிக்கைகளில் வெற்றிகரமாக ஈடுபடுகின்றனர்.

2016 ஆம் ஆண்டில் சமூகத் தலைவர்களை போதையூட்டும் ஔடத தடுப்பு பயிற்றுவிப்பாளர்களாக பயிற்றுவிக்கும் 15 நிகழ்ச்சித்திட்டங்களை தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு நாடுபூராவும் அமுல்படுத்தியது. இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள்மூலம் 799 சமூகத் தலைவர்கள் போதையூட்டும் ஔடத தடுப்பில் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்சிபெற்று வெற்றிகரமாக செயலமர்வுகளைப் பூர்த்திசெய்தனர்.

### ஆசிரியர்களை போதையூட்டும் ஔடத தடுப்பு பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்

போதையூட்டும் ஔடத தடுப்பில் கூடுதல் கவனிப்பை பாடசாலைச் சிறுவர்களுக்கு வழங்குவதன் ஊடாக இலங்கையில் போதையூட்டும் ஔடத பாவனையைக் குறைத்து போதையூட்டும் ஔடத தடுப்பில் வெற்றிகரமான பெறுபேறுகளை அடைந்துகொள்ள முடியும் என்பதுடன், பாடசாலை ஆசிரியர்கள் அப்பணியை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றக்கூடிய ஒரு பிரிவினராவர்.

இத்தேவையை அடையாளம் கண்ட போதையூட்டும் ஔடத தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு ஆசிரியர்களுக்கு கோட்பாட்டு ரீதியான மற்றும் பிரயோக ரீதியான அறிவை வழங்கி அவர்களை போதையூட்டும் ஔடத தடுப்பு பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்றுவிப்பதற்கான ஏராளமான நிகழ்ச்சித்திட்டங்களை 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்தியுள்ளனர்.

பாடசாலை மாணாக்கர் மத்தியில் போதையூட்டும் ஔடத தடுப்பு பற்றிய பயிற்றுவிப்பாளர்கள் ஊடாக போதையூட்டும் ஔடத தடுப்புச் செய்தியை மிக முனைப்பாகவும் திட்டமிட்டும் கொண்டுசெல்வது இந்நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

போதையூட்டும் ஔடத தடுப்பு பயிற்றுவிப்பாளர்களாக ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் 29 நிகழ்ச்சித் திட்டங்களை 2016 ஆம் ஆண்டு முழுவதிலும் அமுல்படுத்த தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு துணிந்தது. இதில் ஒருநாள், இருநாள், மூன்றுநாள் நிகழ்ச்சித்திட்டங்கள் அடங்கும். இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக போதையூட்டும் ஔடத தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு இலங்கை பூராவுமுள்ள பாடசாலைகளில் 1,928 ஆசிரியர்களைப் பயிற்றுவித்துள்ளது.

### போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்திற்கும் கடத்தலுக்கும் எதிரான சர்வதேச தினம்

தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் ஏற்பாடுசெய்யப்பட்ட போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத்திற்கும் கடத்தலுக்கும் எதிரான சர்வதேச தினம் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் தலைமையில் 2016 ஜூன் மாதம் 26 ஆந் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வை முன்னிட்டு தபால் திணைக்களம் நினைவு முத்திரையொன்றை வெளியிட்டதுடன், அன்றைய தினம் ஜனாதிபதி அவர்களிடம் அது கையளிக்கப்பட்டது. வணக்கத்திற்குரிய தீனியாவல பாலித்த நாயக்க தேரர் அவர்கள், சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்னாயக்க அவர்கள், அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் திரு. கே.கமகே அவர்கள் உள்ளிட்ட கௌரவ அதிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### பாரிய வேலைத்தலங்களின் ஊழியர்களுக்கான போதையூட்டும் ஔடத தடுப்புக் கல்வி

பாரிய வேலைத்தலங்களில் பணிபுரியும் ஊழியர்கள் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பதற்கான கூடுதல் ஆபத்துநிலை உள்ளது. இதற்கு பெரும்பாலும் காரணமாக அமைவது, இச்வேலைத்தலங்களில் நிலவும் அதிக வேலைப்பளு காரணமாக அந்த ஊழியர்கள் தமது குடும்ப உறுப்பினர்களுடனும் நெருங்கியவர்களுடனும் நேர்ப்படியான தொடர்புகளைக் கட்டியெழுப்பிக் கொள்ளும்போதும் அதற்கு அவசியமான காலத்தை முகாமைசெய்துகொள்ளும்போதும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதாகும். பெரும்பாலும் இவ்வாறான விடயங்கள் மூலம் ஏற்படுத்தப்படும் அதிக மன உலைச்சல் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் நிலைக்கு மனிதர்களைத் தள்ளிவிடுவதற்கான காரணிகளை உருவாக்கிவிடும்.

இத்தேவைகளுக்குப் பயனுறுதிவாய்ந்த விதத்தில் தலையீடுசெய்வதற்காக தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு கடந்த ஆண்டில் பாரிய வேலைத்தலங்களை உள்ளடக்கியதாக போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை அமுல்படுத்தியது.

2016 ஆம் ஆண்டில் பெரும் எண்ணிக்கையான வேலைத்தலங்களிலுள்ள ஊழியர்களுக்கு போதையூட்டும் ஔடத தடுப்பு பற்றிய 39 நிகழ்ச்சித்திட்டங்கள் தடுப்புக் கல்விப் பிரிவினால் நடத்தப்பட்டது. இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 2,879 ஊழியர்கள் உள்வாங்கப்பட்டனர்.

2015 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 35 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒப்பீடாக 2016 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையில் 111.42% வளர்ச்சியொன்று சுட்டிக் காட்டப்படுகிறது.

### ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய போதையூட்டும் ஔடத சட்டவினைப்படுத்துகை தேசியத் தலைவர்களுடனான உச்சிமாநாடு – கொழும்பில்

இலங்கை அரசாங்கத்தின் செயல்முனைப்புடன் சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சின் ஆதரவுடன் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தடுப்புக் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் பங்கேற்புடன் ஆசிய, பசுபிக் பிராந்திய போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய தேசிய நிறுவனங்களின் தலைவர்களின் 40 ஆவது உச்சிமாநாடு (HONLEA) 2016 அக்டோபர் மாதம் 24–27 ஆந் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த உச்சிமாநாட்டுக்கு சட்டவினைப்படுத்துகை, பொதுமக்கள் பாதுகாப்பு, ஐக்கிய நாடுகள் அமைப்பைச் சார்ந்த 100 க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகள் கொழும்பில் ஒன்றுகூடி ஆசிய, பசுபிக் பிராந்தியத்தில் அதிகரித்துவரும் போதையூட்டும் ஔடதப் பிரச்சினை சம்பந்தமாகவும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய பிரச்சினை சம்பந்தமாகவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது சம்பந்தமாகவும் கலந்தாலோசித்தனர்.

தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் மற்றும் போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய ஆணையத்தின் அழைப்பின்பேரில் உச்சிமாநாட்டினால் பூகோள உறுப்பாண்மை நாடுகளின்

பங்களிப்புடன் உலக போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய பிரச்சினைக்கு கூட்டான, சமநிலையான உபாயமுறைகள் ஊடாக சர்வதேச ஒத்துழைப்புடன்கூடிய அரசியல் சமவாயங்களையும் திட்டங்களையும் செயற்படுத்துவது எவ்வாறு? என்ற விடயம் குறித்த பிராந்திய ரீதியான கலந்துரையாடல்களை முன்னெடுத்து இது குறித்த முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் உலக போதையூட்டும் ஔடத நெருக்கடி பற்றி 2016 ஏப்ரல் மாதம் நடைபெற்ற விசேட அமர்வின்போது கலந்துரையாடப்பட்டு உடன்பட்ட பெறுபேறுகளுக்கு அமைவாக ஒத்துழைப்பு ரீதியான ஒரு தீர்வைக் காணும் பொருட்டு இம்மாநாட்டில் ‘‘உலகளாவிய போதையூட்டும் ஔடதப் பிரச்சினைக்கு எதிராக பயன்கூர் விதத்தில் முகங்கொடுப்பது எவ்வாறு? என்ற இணைந்த முனைப்பு’’ குறித்து மேலும் கவனம் செலுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் சிபார்சுசெய்யப்பட்டவாறு அதாவது, ‘‘உகந்தவாறு தூக்க மயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் பற்றிய ஆணையத்தின் வழிகாட்டலின் ஊடாக அதன் உப நிறுவனங்களுக்கு இடையில் தொடர்ந்தும் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளல், ஒன்றுக்கொன்று மாற்றமான துறைகளில் செயலாற்றும் தேசிய நிறுவனங்களின் உத்தியோகத்தர்களிடையே விடய அறிவையும் கற்றறிந்த பாடங்களையும் பிரயோக ரீதியாக ஈடுபடுத்திக்கொள்ளல், எல்லாப் படிநிலைகளிலும் பயனுறுதிவாய்ந்த விதத்தில் ஒருங்கிணைந்து செயற்படுதல் மற்றும் உலக போதையூட்டும் ஔடதப் பிரச்சினைக்கு ஒப்பீட்டு ரீதியான அணுகுமுறையொன்றைப் பின்பற்றுதல் போன்றே மேற்சொன்ன நிறுவனங்களின் உத்தியோகத்தர்களிடையே தொடர்ந்தும் அர்த்தமுள்ள கலந்துரையாடலொன்றுக்கு ஒத்துழைப்பை வழங்கி மேலதிக கண்காணிப்புகள் பற்றி கவனித்தல், பலப்படுத்துதல் ஆகிய விடயங்கள் தொடர்பில் இம்மாநாட்டில் சிபார்சுகளும் வெளியிடப்பட்டன.

40 ஆவது ஆசிய பசுபிக் பிராந்திய ‘‘HONLEA’’ மாநாட்டின் இறுதியில் 2016 அக்டோபர் மாதம் 28, 29 ஆகிய இரு தினங்களிலும் இந்து சமுத்திர பிராந்திய நாடுகளில் போதையூட்டும் ஔடத சட்டத்தை வலுப்படுத்தும் நிறுவனங்களின் தலைவர்களை உள்ளடக்கிய ஐக்கிய நாடுகள் போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய பணியகத்தின்கீழ் மேற்பார்வை செய்யப்படும் உலக கடல்சார் குற்றச்செயல்கள் தொடர்பான ஒன்றுகூடலொன்றும் இடம்பெற்றது. மேற்கண்ட மாநாட்டில் 22 இந்து சமுத்திர பிராந்திய நாடுகளின் போதையூட்டும் ஔடத சட்ட வினைப்படுத்துகைக்கான உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். கடல் மார்க்கங்கள் வழியே போதையூட்டும் ஔடதங்களை போக்குவரவுசெய்வது தொடர்பாக ஏற்பட்டுவரும் அச்சுறுத்தல்கள் குறித்தும் இங்கு கலந்தாலோசிக்கப்பட்டது.

## 8.2 ஆராய்ச்சிப் பிரிவின் முன்னேற்றம் - 2016

அபாயகர ஔடத துஷ்பிரயோகத்தின் பரம்பல், அதற்கான காரணங்கள், அபாயகர ஔடதங்களைப் பாவிப்பதன்மூலம் ஏற்படக்கூடிய சட்ட, மருத்துவ, சமூக, கலாசார மற்றும் பொருளாதார ரீதியான பிரச்சினைகள் குறித்த ஆராய்ச்சிக் கற்கைகளை நடத்துதல், அது சம்பந்தமான நடவடிக்கைகளை நிறைவேற்றல் ஆகியன ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது. போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான கொள்கை வகுப்போருக்கும் சேவை வழங்குநர்களுக்கும் சேவைபெறுநர்களுக்கும் வசதியளிப்பவர்களுக்கும் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த ஆராய்ச்சிகளை நடத்துவதும் அறிக்கைகளைத் தயாரிப்பதும் சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்குவதும் முக்கிய கருமங்களாகும்.

### போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய தகவல் கைந்நூல்




ஆண்டுதோறும் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய தகவல்களும் அதற்கு முந்திய ஐந்து வருட காலப்பகுதிக்குரிய தகவல்களும் ஒரு தொகுப்பாக வெளியிடப்படுகிறது. பிரதானமாக சகல விதமான போதையூட்டும் ஔடதங்களும் சம்பந்தமாக பெற்றுக்கொண்ட தகவல்களும் இக்கைந்நூலில் அடங்கும்.




2016 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய கைந்நூலை (2015) அச்சிட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டது.

இலங்கை பொலிஸ், இலங்கை பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்பு பணியகம், மதுவரித் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம் போன்ற சட்ட வினைப்படுத்துகைக்கான பிரிவுகளிலிருந்தும் சுகாதார அமைச்சு, ஆயுர்வேத திணைக்களம் முதலிய பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் அதற்கு அவசியமான தகவல்கள் திரட்டப்பட்டு, போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய கைந்நூலை (2016) அச்சிட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்களுடன் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட நபர்களின் மொத்த எண்ணிக்கை 82,482 ஆகும். கைதுசெய்யப்பட்ட நபர்களில் 32 சதவீதமானோர் ஹெரொயின் சார்ந்த குற்றச்செயல்களுக்காகவும் 63% சதவீதமானோர் கஞ்சா சார்ந்த குற்றச்செயல்களுக்காகவும் கைதாகியுள்ளனர்.

2015 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமாக கைதானவர்களில் பெரும்பாலானவர்கள் மேல் மாகாணத்திலிருந்து கைதானவர்களாவர். அதன் சதவீதம் 60% ஆகும். அதனையடுத்து, தென் மாகாணத்திலிருந்து 10%, மத்திய மாகாணத்திலிருந்து 8% என்றவாறு கைதாகியுள்ளனர். 2015 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமாக கைதானவர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து கைதாகியிருப்பதுடன், அது 43% சதவீதமாகும். கம்பஹா மாவட்டத்திலிருந்து 14%, குருணாகல் மாவட்டத்திலிருந்து 4% என்றவாறு கைதாகியுள்ளனர். 2015 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமான தவறுகள் தொடர்பில் கைதானவர்களின் எண்ணிக்கை நாட்டின் மொத்த சனத்தொகையில் ஓரிலட்சம் பேருக்கு 397 பேராவர்.







மூலம்: போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய கைந்நூல் - 2015

## போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த புள்ளிவிவர அறிக்கைகள் (2015-2016)




சட்ட வினைப்படுத்துகைக்கான நிறுவனங்கள் மூலம் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகள் சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை உபயோகித்து தற்கால போதையூட்டும் ஔடத பாவனையின் கோலங்கள் பற்றியதாக தயாரிக்கப்பட்ட ஒரு புள்ளிவிவர அறிக்கையாகும்.

இவ்வாண்டில் பின்வரும் அறிக்கை தயாரித்து வெளியிடப்பட்டது:-

1. போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த புள்ளிவிவர அறிக்கை, 2015 ஜனவரி – டிசம்பர் வரை.
   (ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் தயாரிக்கப்பட்டது.)

## போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத் தரவு முகாமைத்துவ முறைமை (DAMS)




போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத் தரவு முகாமைத்துவ முறைமையானது கணினிமயப்படுத்திய ஒரு தகவல் பகுப்பாய்வு முறைமையாகும். இலங்கையில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த குற்றங்களுக்காக கைதாவோரினதும் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படுவோரினதும் தகவல்கள் அதன்மூலம் திரட்டப்படுகின்றன. எல்லா சட்டவினைப்படுத்துகை நிறுவனங்களிலிருந்தும் சிகிச்சை நிலையங்களிலிருந்தும் தனியார் சிகிச்சை நிலையங்களிலிருந்தும் சிறைச்சாலைகளிலிருந்தும் இத்தகைய தகவல்கள் மாதாந்தம் பெறப்படுகின்றன. சிகிச்சை

பெற்றுக்கொள்பவர்கள் பற்றிய தகவல்கள் ஒவ்வொரு காலாண்டுக்கு ஒருமுறை பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

2016 ஆம் ஆண்டில் பின்வரும் அறிக்கைகள் வெளியிடப்பட்டன:-

- ✓ போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 98
- ✓ போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 99
- ✓ போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 100

**போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை - தொகுதி 100 (வருடாந்த அறிக்கையின் பொழிப்பு)**

2015 ஆம் ஆண்டில் சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்ட 1,482 பேரின் சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்ட இடங்குறித்து ஆராயும்போது சிகிச்சைகளுக்காக அரசாங்க நிறுவனங்களுக்கு (தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைக்கு) உட்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 866 ஆகும். சதவீத அடிப்படையிலாயின், அது 59% சதவீதமாகும். அரச சார்பற்ற அமைப்புகளிலிருந்து 2015 ஆம் ஆண்டில் சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை 212 (14%) பேராகும். சிறைச்சாலை சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் உட்படுத்தப்பட்டுள்ள 317 (21%) பேர் இருப்பதுடன், கந்தகாடு சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையத்திலிருந்து 87 (6%) பேர் சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

**சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படுவோரின் அமைப்பு - 2015**




மூலம் : போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத் தரவு முகாமைத்துவ முறைமையின் சிகிச்சையளிப்பு பற்றிய தரவுகள் - 2015

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, பொலிஸ் போதையூட்டும் ஔடத ஒழிப்புப் பணியகத்துடன் இணைந்து போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகத் தரவு முகாமைத்துவ முறைமைக்கு 2016 ஜூலை மாதம் தொடக்கம் இணைய வழி ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக நாட்டின் எல்லா பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்குகின்றவாறு 32 பயிற்சிச் செயலமர்வுகள் நடத்தப்பட்டன. இதன்மூலம் சுமார் 1,800 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டனர். ஆண்டில் நாட்டின் எல்லா பொலிஸ் நிலையங்களிலிருந்தும் இணையத்தின் ஊடாக 6,891 அளவைப் பத்திரங்கள் ஆராய்ச்சிப் பிரிவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.






2016 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகள் பற்றிய புள்ளிவிவர அறிக்கைகள் குறித்த நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. சிகிச்சையளிப்பு நிலையங்களின் படிவமும் பொலிஸ்/ மதுவரி படிவமும் சம்பந்தப்பட்ட சிகிச்சையளிப்பு நிலையங்களுக்கும் பொலிஸ் நிலையங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

### இலங்கையில் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் சார்ந்த ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு – IV



ஆராய்ச்சிப் பிரிவினால் கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அளவை அறிக்கைகள் சிலவற்றை ஒரு கோவையாகத் தொகுத்து "இலங்கையின் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் சார்ந்த ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு – IV" என்ற பெயரில் நூலொன்று தொகுக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட இந்நூலில் பின்வரும் அளவைகள்/ஆராய்ச்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன:-

- யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதையூட்டும் ஔடத பாவனையின் போக்கும் பரம்பலும் பற்றிய அளவை.
- சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களுக்கு வெளியே இருக்கும் சேவைபெறுநர்களும் சிசிக்சையளிப்புச் செயன்முறையும் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு 2014/2015
- இலங்கையில் போதையூட்டும் ஔடதங்களின் போக்குவரவு, கடத்தல், கடத்தல்காரர்கள் பற்றிய துரித அளவை. (சிறைச்சாலைத் திணைக்களத்தின் துணையுடன்)

## ஆராய்ச்சிகள்/ அளவைகள்

### 1. போதையூட்டும் ஔடத பாவனையின் பரம்பலும் புதிய போக்குகளும் பற்றிய நாடுதழுவிய அளவை

ஆராய்ச்சிப் பிரிவினால் போதையூட்டும் ஔடதங்களின் போக்கு பற்றிய நாடுதழுவிய அளவையொன்று மேற்கொள்ளப்பட்டது. போதையூட்டும் ஔடதங்களுக்கான உயர் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள பிரதேசங்களை அடையாளம் காண்பதும் போதையூட்டும் ஔடத பாவனையின் புதிய போக்குகள் பற்றி அடையாளம் காண்பதும் இதன் முக்கிய நோக்கமாகும். 18 மாவட்டங்களின் 28 பொலிஸ் அதிகார இடப்பரப்புகளை உள்ளடக்கும் விதத்தில் மாதிரி வகைகள் தெரிவுசெய்யப்பட்டு அளவை மேற்கொள்ளப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்ட 10 பொலிஸ் அதிகார இடப்பரப்புகளின் அடிப்படைத் தகவல் வழங்குநர்களுடன் நேர்காணல்களை நடத்தி அப்பகுதிகளில் போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய காலத்திற்குரிய தகவல்கள் திரட்டப்பட்டன.

1,080 வினாக்கொத்துக்கள் தரவு முகாமைத்துவ முறைமையில் உட்படுத்தப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டில் அதன் அறிக்கை பூர்த்திசெய்யப்பட்டது.





### 2. போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உடலுக்குட்செலுத்திக்கொள்பவர்கள் பற்றிய அளவை

ஆராய்ச்சிப் பிரிவினால் போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உடலுக்குட்செலுத்திக் கொள்பவர்கள் பற்றிய நாடளாவிய அளவையொன்று ஆரம்பிக்கப்பட்டது. போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உடலுக்குட்செலுத்திக்கொள்பவர்களை அடையாளம் காணலும் போக்கை அளவிடுவதும் ஊடாக ஊசிமூலம் உடலுக்குட்செலுத்திக்கொள்பவர்களின் அளவை மதிப்பீடுசெய்வதும் உயர் போக்குள்ள பிரதேசங்களை அடையாளம் கண்டு அத்தகைய ஆட்களை சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகளில் பால் ஈடுபடுத்தல் என்பன இதன் முக்கிய நோக்கமாகும். ஆய்வறிக்கையைத் தயாரிக்கும் பணி பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

#### அறிக்கையின் பொழிப்பு

போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உடலுக்குட்செலுத்திக்கொள்ளும் 721 பேர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 657 பேர் (91%) மேல் மாகாணத்தில் வாழ்பவர்கள் என்பதுடன் தென் மாகாணத்திலிருந்து 23 (3%) பேரும் சப்ரகமுவ மாகாணத்திலிருந்து 14 (2%) பேரும் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உடலுக்குட் செலுத்திக் கொள்பவர்கள் பற்றி உயர் பெறுமானம் மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கொம்பனித்தெரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்து பதிவாகியுள்ளது.

இலங்கையில் மதிப்பிடப்பட்ட போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உடலுக்குட்செலுத்திக் கொள்பவர்களின் எண்ணிக்கை 957 க்கும் 1209 க்கு இடைப்பட்டதாக உள்ளதுடன், ஆகக்குறைந்த மதிப்பீட்டுப் பெறுமதி 705 ஆகும். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களாவர். ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது மேல்மாகாணத்தில் பெண்களில் சிறு அளவினர் அறிக்கையிடப்பட்டிருந்தனர். போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உடலுக்குட் செலுத்திக் கொள்பவர்களின் இடையம் 38 வயது என்பதுடன், 17 வயதிலிருந்து 73 வரையான வயதுப் பிரிவைச்

சேர்ந்தவர்கள் மாதிரியில் அடங்கினர். அடையாளம் காணப்பட்ட போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம் உடலுக்குட்செலுத்திக்கொள்ளும் சுமார் 326 பேர் (45%) 36 – 50 வருட வயதுப் பிரிவைப் சேர்ந்தவர்களாவர்.

படம் 01:
மாவட்ட வாரியாக போதையூட்டும் ஔடதங்களை ஊசிமூலம்
உடலுக்குட்செலுத்திக்கொள்பவர்களின் போக்கு




(அளவைத் தரவுகள் 2015/2016)

## 3. பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய ஆய்வு

பாடசாலை மாணவர்களின் போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய ஆய்வொன்று ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. மாதிரியாக 15 மாவட்டங்கள் போதையூட்டும் ஔடத பாவனையின் போக்குகள் சார்ந்த அறிக்கைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. எளிய எழுமாற்று முறையைப் பயன்படுத்தி 100 பாடசாலைகளின் 1,000 பிள்ளைகளை ஈடுபடுத்தி இந்த அளவை மேற்கொள்ளப்பட்டது.

ஆராய்ச்சிப் பிரிவின் பணியாளர்தொகுதியினரும் வெளிநிலைச் சேவைகள் உத்தியோகத்தர்களும் கள அளவையாளர்களாகப் பணியாற்றினர். அதன்படி, பூர்த்திசெய்யப்பட்ட 5,000 வினாக்கொத்துக்கள் டிசம்பர் மாதம் இறுதிப்பகுதி அளவில் தரவு முறைமையில் உட்படுத்தப்பட்டதுடன், தரவுப் பகுப்பாய்வு இடம்பெற்று வருகிறது.





4. கொழும்பையும் அதுசார்ந்த உபநகர்ப் பிரதேசங்களையும் அண்டியுள்ள இரவுக் களியாட்ட விடுதிகளும் கடலோர களியாட்டங்களும் சார்ந்த போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய ஆய்வு

ஆராய்ச்சிப் பிரிவினால் கொழும்பையும் அதுசார்ந்த உபநகர்ப் பிரதேசங்களையும் அண்டியுள்ள இரவுக் களியாட்ட விடுதிகளும் கடலோர களியாட்டங்களும் சார்ந்த போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய ஓர் ஆய்வு முடுக்கிவிடப்பட்டது. தற்போது இலங்கையில் இரவுக் களியாட்ட விடுதிகளில் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் சனத்தொகை புதைமறைவான உப கலாசாரக் குழுவொன்றாக விளங்குகிறது. களியாட்ட விடுதிகளில் அம்பெட்டமின் ரக மற்றும் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களைப் பாவிக்கும் போக்கு, கோலங்கள் மற்றும் அவற்றுடன் பிணைந்த உப கலாசாரத்தை அடையாளம் காணல், அவர்களின் சமூக மற்றும் சமூகவியல் தோற்றச்சாயல்களை நிர்ணயித்தல், அது சார்ந்த குறுகிய மற்றும் நீண்டகாலத் தாக்கங்கள் பற்றி ஆராய்தல் என்பன இதன் நோக்கங்களாகும்.

கொழும்பையும் அதுசார்ந்த உபநகர்ப் பிரதேசங்களையும் அண்டியுள்ள இரவுக் களியாட்ட விடுதிகளில் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் 50 நபர்கள் பனியுருண்டை மாதிரி முறையைப் (Snow Ball Method) பயன்படுத்தி மாதிரிக்கு உட்படுத்திக்கொள்ளப்பட்டனர். இதற்கு மேலதிகமாக இரவு களியாட்ட விடுதிகளின் உரிமையாளர்கள், சிற்றூழியர்கள், குறித்த பிரதேசங்களின் மருந்துக் கலவையாளர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் அக்குழுவில் அங்கம் வகித்தனர்.

நேர்காணல்கள், ஆய்வுகள், 50 வினாக்கொத்துக்கள் என்பன அடிப்படைத் தகவல் வழங்குநர்களுடன் 10 நேர்காணல்கள் 2016 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. தரவுகள் கணினிமயப்படுத்தப்பட்டு வருகின்றன. பாவனைக் கோல அவதானிப்புக்காக பங்கேற்பு ரீதியான அவதானிப்பு வாய்ப்பொன்றும் இடம்பெற்றது.

5. பெண்களின் போதையூட்டும் ஔடத பாவனையின் போக்கும் பாவனைக் கோலங்களை அடையாளம் காணலும்

இலங்கைப் பெண்கள் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் இன்றைய போக்குகளையும் அவற்றின் கோலங்களையும் அடையாளம் காண்பதற்கான ஓர் அளவை மேற்கொள்ளப்பட்டது. பெண்கள் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்படுவதன் மீது பாதிப்புச் செலுத்தும் காரணிகளை அடையாளம் காணல், போதையூட்டும் ஔடத பாவனையும் பால்நிலை சமத்துவ மாற்றங்களையும் அடையாளம் காணல், பால்நிலை சமத்துவக் காரணிகளுக்கு ஏற்ற வகையிலான சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை முன்மொழிதல் ஆகியன மேற்படி ஆய்வின் முக்கிய நோக்கங்களாகும். சிகிச்சையளிப்பு நிலையங்கள், சிறைச்சாலைகள், சீர்திருத்த நிலையங்கள், பொதுமக்களின் ஊடாக பனியுருண்டை மாதிரி முறையைப் பயன்படுத்தி போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் 150 பேர் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தரவு திரட்டும் பணி இடம்பெற்று வருகிறது.

### களனிப் பல்கலைக்கழக உள்வாரி மாணவர்களுக்கான ஆராய்ச்சிப் பயிற்சிகளை நடத்துதல்

களனிப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் சிறப்புமாணி பட்டக் கற்கைகளைத் தொடரும் மாணவர் ஒருவர் 2016 செப்டம்பர் மாதம் 04 ஆந் திகதி தொடக்கம் 2016 நவம்பர் மாதம் 21 ஆந் திகதி வரை பயிற்றுவிக்கப்பட்டார். ஆராய்ச்சி முறைமைகள், தரவு திரட்டல், தரவுகளைக் கணினிமயப்படுத்தல் என்பன தொடர்பாக அம்மாணவருக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

### இலங்கையில் அபின் பாவனையும் விநியோகமும் சம்பந்தமான முறையான ஒரு வேலைத்திட்டத்தை வகுப்பதற்கான நிபுணர்களின் குழுக் கூட்டம்

ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அபின் பாவனை மற்றும் விநியோகம் சம்பந்தமாக இன்று சிக்கல்கள் நிலவுவதால், நுகர்வுநிலைமையை மேற்பார்வைசெய்தல், அதற்கு முறையான ஒரு பொறிமுறையை வகுத்தல், சட்டரீதியற்ற அபின் மற்றும் கஞ்சா பாவனை குறித்த

தரவுகளைத் திரட்டுதல், தரவுத்தளமொன்றைப் பேணிவருதல், துஷ்பிரயோகத்தைத் தடுத்தல் மற்றும் சட்ட நடவடிக்கை எடுத்தல் முதலான விடயங்கள் சம்பந்தமான ஒரு பூர்வாங்க கலந்துரையாடல் 2016.09.29 ஆந் திகதி தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் நடைபெற்றது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் உத்தியோகத்தர்களும் ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனம், ஆயுர்வேத திணைக்களம் மருத்துவ வழங்கல்கள் பிரிவு, பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் தடுப்புப் பணியகம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களும் இதில் கலந்து கொண்டனர்., பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக இங்கு கலந்துரையாடப்பட்டது:

- இலங்கையில் அபின் விநியோகிப்பின் இன்றைய தன்மை.
- நுகர்வுநிலையை மேற்பார்வைசெய்தல்.
- சட்டரீதியற்ற அபின் மற்றும் கஞ்சா பாவனை சம்பந்தமான தரவு திரட்டலும் தரவுத்தளமொன்றைப் பேணிவருதலும்.
- துஷ்பிரயோகத்தைத் தடுத்தலும் சட்ட நடவடிக்கை எடுத்தலும்.

அக்கலந்துரையாடலின் இறுதியில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன:

- அண்மைக்காலத்தில் அபின் பயன்படுத்தும் வைத்தியர்கள் பற்றிய மேற்பார்வையொன்று இடம்பெறவில்லையாதலால், இலங்கையில் இன்று அபினைப் பாவித்து ஆயுர்வேத மருந்துப்பொருள்களைத் தயாரிக்கும் ஆயுர்வேத வைத்தியர்களை ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்தல்.
- ஆயுர்தேவ மருந்துகளைத் தயாரிப்பதற்கு வருடாந்தம் தேவைப்படும் அபின் மற்றும் கஞ்சா அளவுகளை வருடாந்தம் மதிப்பீடுசெய்து உரிய நிறுவனங்களுக்கு வழங்குதல்.
- இலங்கையில் மருந்துப்பொருள்களைத் தயாரிப்பதற்கு அபினைப் பயன்படுத்துவது சம்பந்தமாக மேற்பார்வைசெய்வதற்கான முறையான ஒரு பொறிமுறையை வகுத்தல்.
- இலங்கையில் அபின் விநியோகத்தின் இன்றைய தன்மையை ஆராய்வதற்கான அளவையொன்றை ஆரம்பித்தல்.

### கருத்திட்டத்தை அமுல்படுத்தல்

உலக சுகாதார தாபனமும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையும் இணைந்து பின்வரும் கருத்திட்டத்தை 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்தியதுடன், ஆராய்ச்சிப் பிரிவினால் அக்கருத்திட்டத்தின் ஒருங்கிணைப்பும் அமுல்படுத்தலும் மேற்பார்வையும் இடம்பெற்றது. அதன் பொழிப்பு கீழ் தரப்பட்டுள்ளது.

### போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் பெண்களுக்கான சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டம் - SESRL 1408462

உலக சுகாதார தாபனத்தினால் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிக்கும் பெண்களுக்கான இடையீட்டு நிலையமொன்றை ஆரம்பிப்பதற்காக நிதியுதவி அளிக்கப்பட்டது. சுகாதார நிலையை மேம்படுத்துவதற்கு போதையூட்டும் ஔடத பாவனை பற்றிய உயர் சார்புப் போக்குள்ள பிரதேசங்களைத் தெரிவுசெய்து போதையூட்டும் ஔடத பாவனையைத் தடுப்பதற்கும் சிகிச்சை அளிப்பதற்கும் முனைப்புடன் செயலாற்றப்பட்டது.

சனசமூக நிகழ்ச்சித்திட்டங்களாக ஆராய்ச்சிப் பிரிவினால் காசநோய் சம்பந்தமான 03 நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. காசநோயும் எச்.ஐ.வி. எயிட்ஸ் நோயும் பற்றிய இரண்டு விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் சுகாதார அமைச்சின் எச்.ஐ.வி. எயிட்ஸ் நோய் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து அமுல்படுத்தப்பட்டன.

- ✓ 2016 ஜனவரி 05 – கொம்பனித்தெரு 175 தோட்டம் (எச்.ஐ.வி. எயிட்ஸ்நோய் பற்றிய விழிப்பூட்டும் ஒரு நிகழ்ச்சித்திட்டமும் குருதி மாதிரிகள் பரிசோதனையும்)

- ✓ 2016 ஜனவரி 06 – கொம்பனித்தெரு 175 தோட்டம் (எச்.ஐ.வி. எயிட்ஸ்நோய் பற்றிய விழிப்பூட்டும் ஒரு நிகழ்ச்சித்திட்டமும் குருதி மாதிரிகள் பரிசோதனையும்)
- ✓ 2016 ஜனவரி 20 – நவகம்புர, கட்டம் II (காசநோய் பற்றிய விழிப்பூட்டல்)
- ✓ 2016 ஜனவரி 28 – கொம்பனித்தெரு 175 தோட்டம் (காசநோய் பற்றிய விழிப்பூட்டல்)
- ✓ 2016 ஜனவரி 29 – கொம்பனித்தெரு 175 தோட்டம் (காசநோய் பற்றிய விழிப்பூட்டல்)





### சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை (INCB)

இலங்கை கடப்பட்டுள்ள சர்வதேச சமவாயங்களுக்கு ஒத்தாசை வழங்குமுகமாகவும் அவற்றுக்குச் செவிதாழ்த்துமுகமாகவும் மாதாந்தம், காலாண்டு, வருடாந்தம் என்ற அடிப்படையில் INCB நிறுவனத்திற்கு பின்வரும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன: தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஆராய்ச்சிப் பிரிவு, INCB நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கும் இலங்கையின் இன்றைய போதையூட்டும் ஔடத பாவனை மற்றும் அது தொடர்பில் எழும் விடயங்கள் மீதான பொறுப்புக்களை வகிக்கிறது. அதேபோல், ஆண்டினுள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பின்வரும் அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை தேசிய மருத்துப்பொருள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை, பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம், இலங்கைச் சுங்கம், இலங்கை மதுவரித் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம் என்பவற்றுடன் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஆவணங்களைத் தயார்செய்தது. சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபைக்கு பின்வரும் படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

### காலாண்டுக்கு ஒருமுறை அனுப்பிவைக்கப்பட்ட தரவுகள்

- தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்களின் இறக்குமதியும் ஏற்றுமதியும் பற்றிய புள்ளிவிவரங்கள் (படிவம் A) 4வது காலாண்டு, 2015 மற்றும் 1வது காலாண்டு 2016, 2வது காலாண்டு 2016, 3வது காலாண்டு 2016.
- 1971 சமவாயத்தின் நிரல் II இல் தரப்பட்டுள்ள உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களின் இறக்குமதியும் ஏற்றுமதியும் பற்றிய புள்ளிவிவரங்கள் (படிவம் A/P) 4வது காலாண்டு 2015, 1வது காலாண்டு 2016, 2வது காலாண்டு 2016, 3வது காலாண்டு 2016)
- தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்களின் தேவைப்பாட்டு மதிப்பீடுகள்.
- 1971 உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள் பற்றிய சமவாயத்தின் நிரல் 2 இல் அடங்கியுள்ள மருத்துவ, விஞ்ஞானரீதியான தேவைப்பாடுகளுக்கு அவசியமான ஔடத வகைகள் (படிவம் B/P)

வருடாந்தம் அனுப்பிவைக்கப்பட்ட தரவுகள்

- தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்களதும் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களதும் உற்பத்தி, நுகர்வு, களஞ்சியப்படுத்தல், சுற்றிவளைப்புகள் ஆகியன சம்பந்தமான புள்ளிவிவரங்கள் (படிவம் C)
- உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களின் சட்டவிரோத உற்பத்திக்குத் தூண்டுதல் அளிக்கக்கூடிய இரசாயனப் பதார்த்தங்கள் சம்பந்தமான வருடாந்த தகவல்கள் (படிவம் D)
- உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள் சம்பந்தமான புள்ளிவிவரங்கள் (படிவம் P)
- வருடாந்த அறிக்கை வினாக்கொத்து (படிவம் E)

வருடாந்தம் அனுப்பிவைக்கப்பட்ட தரவுகள்

- தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்களதும் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களதும் உற்பத்தி, நுகர்வு, களஞ்சியப்படுத்தல், சுற்றிவளைப்புகள் ஆகியன பற்றிய புள்ளிவிவரங்கள் (படிவம் C)
- உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களும் சட்டவிரோத உற்பத்திக்கு தூண்டுதல் அளிக்கக்கூடிய இரசாயனப் பதார்த்தங்களும் சம்பந்தமான வருடாந்த தகவல்கள் (படிவம் D)
- உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள் சம்பந்தமான புள்ளிவிவரங்கள் (படிவம் P)
- வருடாந்த அறிக்கை வினாக்கொத்து (படிவம் E)

1. சட்டவாக்க மற்றும் நிறுவன ரீதியான பணிச்சட்டகம்.
2. போதையூட்டும் ஔடதங்களுக்கான கேள்வி-நிரம்பலைக் குறைப்பதற்கான நுண்ணிய அணுகுமுறை.
3. போதையூட்டும் ஔடத பாவனைக் கோலங்களையும் போக்குகளையும் அடையாளம் காணல்.
4. போதையூட்டும் ஔடதங்கள் பயிரிடல், உற்பத்தி, சுற்றிவளைப்புகள் சம்பந்தமான தற்கால கோலங்களையும் போக்குகளையும் அடையாளம் காணல்.

- பூர்த்திசெய்யப்பட்ட N-Phenethy1-4-Piperidinone (NNP) and 4-anilino-N-Phenethylpiperidine (ANNP) வினாக்கொத்தை சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைக்கு அனுப்பிவைத்தல்.
- பூர்த்திசெய்யப்பட்ட New Psychoactive substances வினாக்கொத்தை சர்வதேச தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைக்கு அனுப்பிவைத்தல்.

போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமான ஆலோசனை சான்றிதழ் கற்கைநெறி

சபையின் கல்வி மற்றும் ஆலோசனைப் பணியாள்தொகுதியினரின் ஒத்துழைப்புடன் ஆராய்ச்சிப் பிரிவினால் ஒருங்கிணைப்புச்செய்யப்படும் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்பாண்மைகளின் ஆலோசனை மற்றும் அது சார்ந்த துறைகளில் ஈடுபடுபவர்களுக்கும் பல்கலைக்கழக மாணாக்கர்களுக்கும் துறையில் பிரவேசிக்க விரும்பும் ஆட்களுக்கும் “போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய ஆலோசனை சான்றிதழ் கற்கைநெறி” 2012 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையின் போதையூட்டும் ஔடதப் பிரச்சினை பற்றிய தொழில்சார் அறிவை வழங்குவதற்கும் ஆலோசனை நடவடிக்கைகளுக்கான அறிவை விருத்திசெய்துகொள்வதற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுப்பது









இதன் முக்கிய நோக்கமாகும். வருடத்தினுள் 13 அணிகளுக்காக இச்சான்றிதழ் கற்கைநெறி நடாத்தப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டில் சுமார் 455 மாணாக்கர்கள் இதில் கலந்துகொண்டனர்.

### தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் காலாண்டு சஞ்சிகை – "NDDCB NEWS LETTER"




- தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தகவல்களையும் சேவைகளையும் ஏனைய நிறுவனங்களுடன் பரிமாறிக்கொள்ளும் நோக்குடன் ஒரு காலாண்டு செய்திமடல் வெளியிடப்பட்டது. சபையின் ஊழியர்களின் கட்டுரைகள், கருத்துரைகள் மற்றும் கலைப் படைப்புகளையும் போதையூட்டும் ஔடதங்களின் கட்டுப்பாடு, தடுப்பு, சிகிச்சையளிப்பு, புனர்வாழ்வளிப்பு மற்றும் ஆராய்ச்சித் தகவல்களை இச்சஞ்சிகை தாங்கிவருகிறது. 2016 ஆம் ஆண்டில் பன்னிரண்டாவது சஞ்சிகை வெளியிடப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

### இலங்கையில் வைத்திய ஔடத துஷ்பிரயோகத்தை மதிப்பீடுசெய்வதற்கான குழுக் கூட்டம்

வைத்திய ஔடத துஷ்பிரயோகம்செய்வது பற்றி மதிப்பீடுசெய்வதற்கான நிபுணர்களின் குழுக் கூட்டமொன்று போதையூட்டும் ஔடதங்களும் குற்றச்செயல்களும் பற்றிய ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினதும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினதும் ஏற்பாட்டில் 2016 மே மாதம் 24, 25 ஆகிய இரு தினங்களிலும் கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது. வைத்திய வழங்கல்கள் பிரிவு, தேசிய ஔடத ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை, பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம், இலங்கைச் சுங்கம், இலங்கை மதுவரித் திணைக்களம், அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம், ஏற்றுமதி இறக்குமதி திணைக்களம், வைத்திய வழங்கல்கள் பிரிவு ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் வைத்திய ரீதியான ஔடத துஷ்பிரயோகத்தின் இயல்பையும் அளவையும் மதிப்பீடுசெய்தல், இலங்கையில் பரவலாக துஷ்பிரயோகம் செய்யப்படும் ஔடத வகைகளை அடையாளம் காணல், நாட்டில் நிலவும் ஔடத துஷ்பிரயோகம் சம்பந்தமாக சட்ட மற்றும் கொள்கைசார் கட்டுப்பாட்டு நிலைமைகளை மதிப்பீடுசெய்தல், சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது கவனம்செலுத்தி ஒழுங்கமைந்த சட்ட வினைப்படுத்தல் இயலளவொன்றை மதிப்பீடுசெய்தல், தற்போதுள்ள சட்டநிலைமைக்கும் அமைப்புசார் இயலளவுக்கும் இடையில் நிலவும் வெற்றிடத்தை மதிப்பீடுசெய்தல் ஆகியன இதன் முக்கிய நோக்கங்களாகும்.

### போதையூட்டும் ஔடத தடுப்புச் செய்தியை பாடசாலைகளில் காட்சிப்படுத்தல்

பாடசாலை மதிற்சுவர்களில் போதையூட்டும் ஔடத தடுப்புச் செய்திகளைக் காட்சிப்படுத்தும் பணி 2012 ஆம் ஆண்டிலிருந்து ஆராய்ச்சிப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அந்த

அடிப்படையில், 2016 ஆம் ஆண்டில் பின்வரும் பாடசாலைகளில் அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டன:

- ✓ கோட்டே ஆனந்த சாஸ்திராலய – பிட்டகோட்டே.
- ✓ மகாபோதி மகா வித்தியாலயம் – மருதானை.
- ✓ கிரி/ரத்தனாலங்கார மகா வித்தியாலயம் – அளவ்வை.





### தகவல் தொழில்நுட்பப் பிரிவு

தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் 2016 ஆம் ஆண்டில் சிகிச்சைகள் மற்றும் பொலிஸ் மதுவரி அளவைப் பத்திரங்களில் தரவுகளை உட்படுத்தும் பணி பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. அத்தரவுகளின் துணையுடன் பின்வரும் அறிக்கைகள் வெளியிடப்பட்டன:

- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த கைதுகள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை – தொகுதி 49
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை – தொகுதி 98
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை – தொகுதி 99
- போதையூட்டும் ஔடதங்கள் சார்ந்த சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிவர அறிக்கை – தொகுதி 100

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையிலுள்ள எல்லாப் பிரிவுகளிலும் நிலையங்களிலும் உள்ள கணினிகளில் காணப்பட்ட குறைபாடுகளை அடையாளங்கண்டு, அவற்றைத் திருத்தும் பணி தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

சான்றிதழ்கள்/துண்டுப்பிரசுரங்கள் வடிவமைக்கப்பட்டன.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் இணையத்தளம் இப்பிரிவினால் நாளாந்தம் இற்றைவரைப்படுத்தப்பட்டது.

### செல்லிடத் தொலைபேசி ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் போதையூட்டும் ஔடத கட்டுப்பாடு, தடுப்பு, சிகிச்சையளிப்பு, புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகளுக்கு பல்வேறு செயற்பாடுகள் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகிறது. செல்லிடத் தொலைபேசிகள், நவீன தொழில்நுட்பக் கருவிகள், செல்லிட தொடர்பாடல் உபகரணங்கள் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒரு காலகட்டத்தில் ஸ்ரீ லங்கா ரெலிகொம் மொபிடெல் நிறுவனத்துடன் இணைந்து 1984 துரித அழைப்பு நிலைய சேவையை மிகவும் தீவிரப்படுத்தி, நவீனமயப்படுத்தி போதையூட்டும் ஔடத தடுப்புச் செய்தியையும் ஆலோசனை சேவைகளையும் செல்லிடத் தொலைபேசி தொழில்நுட்பம் வழியாக பொதுமக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2016 மே மாதம் 31 ஆந் திகதி தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தவிசாளரினதும் ரெலிகொம் மொபிடெல் நிறுவனத்தின் தவிசாளரினதும் தலைமையில் அழைப்பு நிலையத்தின் (Call centre) அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.






## போதையூட்டும் ஔடத துஷ்பிரயோக தரவு முகாமைத்துவ முறையை நவீனமயப்படுத்தலும் இணையவழி ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலும்

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிக் கல்வி நிறுவகத்தினால் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோக தரவு முகாமைத்துவ முறைமைக்கு இணையவழி ஊடாக இலங்கையின் எல்லா பொலிஸ் நிலையங்களிலிருந்தும் தரவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தரவு முறைமையொன்று இற்றைப்படுத்தப்பட்டது. தரவு முறைமையை நவீனமயப்படுத்திய பின் தரவுகளைப் பெற்றுக்கொள்ளும்போது எழக்கூடிய பிரச்சினைகள் குறித்து பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக அறிவுறுத்தி, தரவுகளைப் பெற்றக்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### தரவு முறைமையின் இரண்டாம் கட்டத்தை ஆரம்பித்தல்

வெளிநிலைச் சேவைகள் பிரிவின் தரவு முறைமையைத் தயார்செய்வதற்கு அவசியமான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## ADSL இணையத் தொடர்பிணைப்பை SMART இணைய வசதிகளுக்கு மாற்றுதல்

சபையில் தற்போதுள்ள இணையத் தொடர்பிணைப்பு, அதிவேக ஸ்மார்ட் இணைய வசதிகள்கொண்ட தொழில்நுட்பத்தின் மூலம் வலுவூட்டப்பட்டது.

## 8.3 சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புப் பிரிவு - 2016

சபையின் சேவைகளிடையே சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புப் பிரிவும் சிறப்பான ஓரிடத்தை வகிக்கிறது. முன்னைய ஆண்டுகளில் போலவே இவ்வாண்டிலும் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளிப்பதிலும் புனர்வாழ்வளிப்பதிலும் சபையின் சிகிச்சையளிப்பு நிலையங்கள் சிறப்பாக தம் பங்காற்றின. போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்படுவதன் காரணமாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்த போதைப்பிரியர்களை அத்தகைய பிரச்சினைகளிலிருந்து விடுவித்தல், அவர்களுக்கும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் நிவாரணங்களைப் பெற்றுக்கொடுத்தல், அவர்களின் ஆற்றல்களைப் பலப்படுத்துதல், ஆன்மீக விருத்தி, ஆளுமை விருத்தி முதலிய பண்புத்தர உள்ளீடுகளின் ஊடாக சிகிச்சையளிப்புச் செயன்முறை போசிக்கப்பட்டது.

சிகிச்சையளிப்பு நிலையங்களுக்கு சேவைபெறுநர்களை அனுமதிக்கும்போது கடந்தாண்டு பின்பற்றப்பட்ட வகையீடே இவ்வாண்டிலும் பின்பற்றப்பட்டது. அதன்படி, இவ்வாண்டில் சபையின் வதிவிட சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டம் பின்வரும் 04 சிகிச்சையளிப்பு நிலையங்கள் மூலம் அமுல்படுத்தப்பட்டது.

| | |
|---|---|
| மத்திய மாகாண "யொவுன்" (இளைஞர்) சிகிச்சையளிப்பு நிலையம் | - கண்டி |
| தென்மாகாண சிகிச்சையளிப்பு நிலையம் | - காலி |
| மேல்மாகாண சிகிச்சையளிப்பு நிலையம் | - தலங்கம |
| நவதிகந்த சிகிச்சையளிப்பு நிலையம் | - நிட்டம்புவ |

21 வயதுக்குக் குறைந்த சேவைபெறுநர்கள், கண்டி "யொவுன்" சிகிச்சையளிப்பு நிலையத்திற்கும்,
போதையூட்டும் ஔடதங்களின் பாவனை காலம் 0-6 ஆண்டுகளுக்கு இடைப்பட்டதாயின், காலி புனர்வாழ்வளிப்பு நிலையத்திற்கும்,
போதையூட்டும் ஔடதங்களின் பாவனைக் காலம் 6-12 ஆண்டுகளுக்கு இடைப்பட்டதாயின், தலங்கம நிலையத்திற்கும்
போதையூட்டும் ஔடதங்களின் பாவனை காலம் 12 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாயின், நவதிகந்த நிலையத்திற்கும்.

<u>சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கு சேர்த்துக்கொள்ளல்</u>

மேற்குறிப்பிட்ட வகையீட்டின்படி ஒவ்வொரு சிகிச்சையளிப்பு நிலையத்திலும் சேவைபெறுநர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன், வழமைபோல் இவ்வாண்டிலும் தமது சுயவிருப்பின் பேரில் வதிவிட சிகிச்சைக்காக சேர்த்துக்கொள்ளப்படுதல், பாதுகாவலர்களின் கோரிக்கையின் பேரில் சேர்த்துக் கொள்ளப்படுதல், நீதிமன்றம் மற்றும் சமுதாய சீர்திருத்த நிறுவனங்கள் ஊடாக சேர்த்துக் கொள்ளப்படுதல், வேறு அரசாங்க நிறுவனங்களின் அறிவுறுத்தலின்பேரில் சேர்த்துக்கொள்ளப்படுதல், வெளிநிலைச் சேவைகள் ஊடாக சேர்த்துக்கொள்ளப்படுதல் என்பவற்றை பரவலாகக் காண முடிந்தது. மேற்குறிப்பிட்ட சகல சேர்த்துக்கொள்ளப்படல்களும் எமது அனுபவம்வாய்ந்த ஆலோசகர்களின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்டன. முன் ஆலோசனை அமர்வுகளை உபயோகித்து வதிவிட சிகிச்சைக்காக சேவைபெறுநர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

அதேபோல், 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் சட்டத்தின்படி நீதிமன்றத்தின் ஊடாக புனர்வாழ்வளிப்புப் பணியகத்தினால் ஆற்றுப்படுத்தப்படும் சேவைபெறுநர்கள் கந்தகாடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வளிப்பு நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அவசியமான வேளைகளில் எமது சேவை அவர்களுக்கு வழங்கப்பட்டது.

<u>சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்ட காலம்</u>

முழுதும் அளாவியதாக நோக்கும்போது இவ்வாண்டில் எமது சிகிச்சையளிப்பு நிலையங்களில் வதிவிட சிகிச்சையளிக்கப்படும் காலம், குறைந்தபட்சம் 03 மாதங்களாகும். சேவைபெறுநர் எவரேனும் வதிவிட சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்திசெய்யுமிடத்து அவருக்கு 03 மாத கால முடிவில் வதிவிட சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து விடைபெற்றுச் செல்லலாம். எனினும், ஆலோசகரதும் ஏனைய பணியாள்தொகுதியினரதும் முன்னேற்ற மதிப்பீட்டின்படி அவர் தொடர்ந்தும்

தனியாள் அபிவிருத்திக்கு உட்படுத்தப்படவேண்டிய ஒருவராயின், அவரது சிகிச்சைக் காலம் நீடிக்கப்பட்டது.

## சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டம்

வதிவிட சிகிச்சையளிப்பதற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட பின் ஒவ்வொரு நிலையத்திலும் அந்தந்த சேவைபெறுநருக்கு ஏற்ற விதத்திலான சிகிச்சையளிப்புத் திட்டமொன்றைப் பயன்படுத்தி சிகிச்சையளிப்புச் சேவை வழங்கப்பட்டது. குறிப்பாக, எல்லா சிகிச்சையளிப்பு நிலையங்களிலும் "உளவியல் சிகிச்சையளிப்பு முறையை" பயன்படுத்தி அவர்களுக்கு உரிய சேவைகள் வழங்கப்பட்டன. போதைப்பிரியர்களின் பிரச்சினைகளை அடையாளம் காணல், பிரச்சினைகளை பொருள்வரையறை செய்தல், பிரச்சினைகளைப் பகுத்தாராய்தல் என்பவற்றின் ஊடாக அவர்களுக்கு ஏற்ற விதத்திலான சிகிச்சையளிப்புத் திட்டம் ஆலோசகரதும் உதவி ஆலோசகர்களதும் தலையீட்டுடன் தயாரிக்கப்பட்டு ஆலோசனை உதவியாளர்களது ஒத்துழைப்புடன் இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இங்கு தனிநபர் ஆலோசனை, குழுநிலை ஆலோசனை, குடும்ப ஆலோசனை, தொழில் வழிகாட்டல் ஆலோசனை, தன்னாபிமானத்தை ஏற்படுத்துவது சார்ந்த செயற்பாடுகள், ஆன்மீக விருத்திக்கான ஆலோசனைகள், சுற்றாடல் நயப்பு சார்ந்த செயற்பாடுகள், பொழுதுபோக்குசார் பண்புகளை விருத்திசெய்தல் போன்ற சேவைபெறுநரிடம் குடிகொண்டிருந்த பல்வேறு பக்கத்தோற்றங்களை முன்னேற்றும் நோக்குடன்கூடிய சிகிச்சையளிப்புத் திட்டமொன்றை உபயோகிப்பதன் மூலம் குறித்த சேவைகள் வழங்கப்பட்டன.

## நாளாந்த நிகழ்ச்சித்திட்டம்

எல்லா சிகிச்சையளிப்பு நிலையங்களிலும் வதிவிட சேவைபெறுநர்களுக்கு பொதுவான நாளாந்த நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டன. மு.ப. 5.30 மணி தொடக்கம் பி.ப. 10.00 மணி வரை தொடரும் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் அதிகாலைவேளை சந்திப்பு, தியான நிகழ்ச்சிகள், திறந்தவெளி மற்றும் உள்ளக விளையாட்டு நிகழ்ச்சிகள், கல்வி நிகழ்ச்சிகள், வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிகழ்ச்சிகள், மௌனம் அனுஷ்டிப்புக் காலம், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், தனிநபர் மற்றும் குழுநிலை அமர்வுகள், மாலைநேர சந்திப்புகள் போன்ற பல்வேறு செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எமது ஒவ்வொரு சிகிச்சையளிப்பு நிலையத்திலும் சிறப்பான நிகழ்ச்சிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிட்ட நாளாந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நிலையத்தில் அமுல்படுத்தப்பட்டன.

## ஆன்மிக விருத்திக்கான நிகழ்ச்சித்திட்டம்

போதைப்பிரியர்களின் கைவிட்டுப்போன ஆன்மிக ரீதியான நடத்தைகளை மீண்டும் போசிக்கும் நோக்குடன் எமது எல்லா சிகிச்சையளிப்பு நிலையங்களிலும் ஆன்மிக விருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு பூரணை நோன்மதி தினத்திலும் ஒவ்வொரு நிலையத்திலுமுள்ள வதிவிட சேவைபெறுநர்களை 'சில்' விரதம் அனுஷ்டிக்கச்செய்தல், தர்ம உபந்நியாசங்களைச் செவிமடுக்க வழிவகைசெய்தல், மதவழிபாட்டுத்தலங்களுக்கு அழைத்துச் செல்லல், சிகிச்சையளிப்பு நிலையங்களின் தலைமையில் பௌத்தாலோக மாவத்தை வெசாக் வெளிச்சக்கூடு அமைக்கும் போட்டி, நிலையங்களில் வெசாக் வாழ்த்து அட்டைகளையும் வெசாக் வெளிச்சக்கூடுகளையும் தயாரித்தல், தானம் வழங்கும் 'பிங்கம' நிகழ்ச்சிகளில் சேவைபெறுநர்களை பங்கேற்கச்செய்தல், பொசொன் வைபவம் சார்ந்த செயற்பாடுகள் என்பன அவற்றில் அடங்கும். இவ்வாண்டில் பௌத்தாலோக மாவத்தையில் நடைபெற்ற வெசாக் வெளிச்சக்கூடு நிர்மாணப் போட்டியில் நவதிகன்த சிகிச்சையளிப்பு நிலையம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை சேவைபெறுநர்களும் பணியாள்தொகுதியினரும் அடைந்த சிறப்பான ஒரு வெற்றியாகும்.





வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

எல்லா சிகிச்சையளிப்பு நிலையங்களிலும் சேவைபெறுநர்களுக்கான பல்வேறு வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வாண்டிலும் அமுல்படுத்தப்பட்டன. நாளாந்த சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படும் அதேவேளை, சேவைபெறுநர்களின் பங்களிப்புடன் ஆண்டு முழுவதும் இந்நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. சிகிச்சையளிப்புக்கான செயற்பாடொன்றாக வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொரு நிலையத்திலும் அமுல்படுத்தப்பட்டது.

| நிலையம் | அமுல்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் |
|---|---|
| யொவுன் சிகிச்சையளிப்பு நிலையம் | கடித உறை தயாரித்தல், விவசாய நடவடிக்கைகள், அந்தூரியம் மலர்ச்செய்கை, ஓக்கிட் மலர்ச்செய்கை, மோட்டார் தொழில்நுட்பம், ஹோட்டல் வேலை பயிற்சி. |
| தலங்கம நிலையம் | கால் துடைப்பம் தயாரித்தல், கடித உறை தயாரித்தல், கடதாசி உறை தயாரித்தல், ஓக்கிட் மலர்ச்செய்கை, தலையணை உறை தைத்தல், விவசாய நடவடிக்கைகள், அழகுக்கலை, மலர்ச்சாடிகள் தயாரித்தல், செல்லிடத் தொலைபேசி பழுதுபார்ப்பு, கண்கவர் அட்டைகள் தயாரித்தல். |
| நவதிகன்த நிலையம் | விளக்குமாறு தயாரித்தல், மலர்ச்செய்கை (ஓக்கிட், அந்தூரியம்), விவசாய நடவடிக்கைகள், மலர்ச்சாடிகள் தயாரித்தல், கால் துடைப்பம் தயாரித்தல், இன்டர்லொக் கற்களைத் தயாரித்தல், கடித உறை தயாரித்தல், மோட்டார் தொழில்நுட்பம். |
| காலி நிலையம் | கடித உறை தயாரித்தல், கால் துடைப்பம் தயாரித்தல், தலையணை உறை தைத்தல், விவசாய நடவடிக்கைகள், மலர்ச்சாடிகள் தயாரித்தல், ஓக்கிட் மலர்ச்செய்கை, மோட்டார் தொழில்நுட்பம், மின் இணைப்பு வேலை. |





விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

சிகிச்சையளிப்பு மற்றும் நாளாந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு மேலதிகமாக, ஒவ்வொரு நிலையத்திலும் சேவைபெறுநர்களின் இரசனையுணர்வு கருதி பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டன. கட்டுரைப் போட்டி, சித்திரப் போட்டி, சுற்றுப் பிரயாணங்களில் பங்குகொள்ளச்செய்தல், மாதம் ஒரு தடவை நடைபெறும் இசைக் கச்சேரி ('பெதுரு பாட்டிய') போன்ற விசேடமான பல நிகழ்ச்சிகள் இதில் அடங்கும். மத நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள், பக்திப் பாடல் நிகழ்ச்சிகள், ஆண்டிறுதி கலையரங்க நிகழ்ச்சிகள் என்பவற்றுடன் உந்துகைக்கான நிகழ்ச்சிகளும் இதில் அடங்கியிருந்தன.





வருமான உருவாக்குகை

சபையின் சிகிச்சையளிப்பு நிலையங்களில் இரு பிரதான வருமான உருவாக்குகை மார்க்கங்களை 2016 ஆம் ஆண்டிலும் அவதானிக்க முடிந்தது. அவை தென்னை பயிரிடுவதன் ஊடாக பெறப்பட்ட வருமானமும் கொடுப்பனவு அடிப்படையில் சிகிச்சைகளுக்கு அனுமதிக்கப்பட்ட சேவை பெறுநர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானமுமாகும்.

ஆலோசனை மற்றும் சிகிச்சையளிப்புச் சேவைகளை வழங்குதல்

இவ்வாண்டில் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட 2,752 பேருக்கு சபையினால் சிகிச்சையளிப்புச் சேவைகள் வழங்கப்பட்டன. இவர்களில் 1,842 பேருக்கு எமது சிகிச்சையளிப்பு நிலையங்களினால் ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டன. வதிவிட சிகிச்சைக்கு 841 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்..

மேல்மாகாண சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - தலங்கம

50 சேவைபெறுநர்களுக்கு இந்த நிலையத்தின்மூலம் வதிவிட சிகிச்சையளிக்க முடியும். நிலையத்தின் சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 03 பிரிவுகளைக் கொண்டதாகும்.. சாதாரண பிரிவு, கொடுப்பனவு அடிப்படையிலான பிரிவு, மகளிர் பிரிவு என வெவ்வேறான மூன்று பிரிவுகள் உள்ளன. நிலையத்தினால் 2016 ஆம் ஆண்டில் 753 சேவைபெறுநர்களுக்கு ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டன. சாதாரண பிரிவு மூலம் 447 சேவைபெறுநர்களுக்கும் கொடுப்பனவு அடிப்படையிலான பிரிவு மூலம் 278 சேவை பெறுநர்களுக்கும் மகளிர் பிரிவு மூலம் 28 சேவைபெறுநர்களுக்கும் ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டன.

அவர்களில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 181 ஆகும். சாதாரண பிரிவு மூலம் 88 சேவைபெறுநர்களுக்கும் கொடுப்பனவு அடிப்படையிலான பிரிவு மூலம் 13 சேவைபெறுநர்களுக்கும் மகளிர் பிரிவு மூலம் 13 சேவைபெறுநர்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டது.

இந்த நிலையத்தின் சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரம் வருமாறு:-

- ஒவ்வொரு பூரணை நோன்மதி தினத்திலும் "சில்" விரதம் அனுஷ்டிப்பு நிகழ்ச்சிகளையும் தர்ம உபந்நியாசங்களையும் தர்ம கலந்துரையாடல்களையும் ஒழுங்குசெய்தல்.

- பெற்றோர்களுடனான மாதாந்த சந்திப்புகளையும் பிற்பாதுகாப்பிற்கான சந்திப்புகளையும் ஒழுங்குசெய்தல்.
- சேவைபெறுநர்களின் இரசனையுணர்வு கருதி இசைக் கச்சேரிகளையும் ('பெதுரு பாட்டிய') இசை நிகழ்ச்சிகளையும் ஒழுங்குசெய்தல்.
- பணியாள்தொகுதியினர் மத்தியிலும் சேவைபெறுநர்கள் மத்தியிலும் காசநோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் விழிப்புணர்வை ஏற்படுத்துதலும் பணியாள்தொகுதியினர் பயிற்சி அமர்வுகளும் பாலியல் நோய்கள் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகளும் ஹெப்படைட்டிஸ் 'சி' பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதலும்.
- வெசாக் பண்டிகை சார்ந்த சமய செயற்பாடுகள் - பக்திப் பாடல் நிகழ்ச்சி, பௌத்தாலோக மாவத்தை வெசாக் வெளிச்சக்கூடு நிர்மாணப் போட்டியில் பரிசு பெறுதல்.
- சிங்கள புதுவருடக் கொண்டாட்டம்.
- மகளிருக்கான ஆலோசனை மற்றும் சிகிச்சையளிப்பு நிலையத்தை தொடர்ந்தும் இயக்கிச் செல்லல்.
- டெங்குநோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் சிரமதானப் பணியும்.
- அழகுக்கலை பற்றிய செயலமர்வுகளை நடாத்துதல்.
- விவசாய நடவடிக்கைகள்: மரக்கறிச்செய்கை, மலர்ச்செய்கை.
- பணியாள்தொகுதியினருக்கான பயிற்சி அமர்வுகள்.
- விளையாட்டு நடவடிக்கைகள்.
- வயதுவந்தவர்களுக்கான ஆங்கிலமொழி வகுப்புகள்.
- நத்தார் பண்டிகைக் கொண்டாட்டம்.
- ஆண்டிறுதி களியாட்ட நிகழ்ச்சி ($31^{st}$ Night)

<u>மத்திய மாகாண (யொவுன்) சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - கண்டி</u>

இந்நிலையத்தின் மூலம் ஒரே தடவையில் 35 பேருக்கு சேவைகளை வழங்க முடியும். இவ்வாண்டில் இந்நிலையத்தின்மூலம் 205 சேவைபெறுநர்களுக்கு ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டதுடன் அவர்களில் 101 சேவைபெறுநர்களுக்கு வதிவிட சிகிச்சையளிப்பு சேவைகள் வழங்கப்பட்டன. 2012 செப்டம்பர் மாதத்தில் இந்நிலையம், 'இளைஞர் (யொவுன்) சிகிச்சையளிப்பு நிலையம்' எனப் பெயரிடப்பட்டது.

மத்திய மாகாண யொவுன் சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையத்தில் பின்வரும் சிறப்பான நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வாண்டில் அமுல்படுத்தப்பட்டன:-

- சேவைபெறுநர்களின் சிந்தனாரீதியான ஆற்றல்களை விருத்திசெய்வதற்கு மாதம் இரு தடவைகள் சேமபூமி சங்கத்தை நடத்துதலும் "சேம பூமி" சஞ்சிகையை வெளியிடுதலும்.

- சேவைபெறுநர்களின் ஆன்மிக விருத்திச் செயன்முறைக்காக மாதம் ஒரு தடவை 'சில்' விரதம் அனுஷ்டிக்கும் நிகழ்ச்சித்திட்டம், ஹேன்தெனிய ரஜமகா விகாரையில் சிரமதானப் பணி, மகா சங்கத்தினரை வரவழைத்து தர்ம உபந்நியாசங்களை ஒழுங்குசெய்தல்.

- அவர்களின் அறிவையும் ஆற்றல்களையும் விருத்திசெய்வதற்கான விவாதப் போட்டிகள், ஆங்கிலமொழி வகுப்புகளை ஒழுங்குசெய்தல், வினா-விடை போட்டி நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல், நடன வகுப்புகள், கட்டுரைப் போட்டிகள், சித்திரப் போட்டிகளை நடத்துதல், க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு முன் ஆயத்தப்படுத்தல், இசை வகுப்புகள்.

- குடும்ப உறவுகளைக் கட்டியெழுப்புவதற்காக மாதம் ஒரு தடவை பெற்றோருடனான சந்திப்பொன்றை ஒழுங்குசெய்தல், இரசனை உணர்வை வளர்க்குமுகமாக திரைப்படங்களைக் காட்சிப்படுத்தல், இசைக் கச்சேரிகளை (பெதுரு பாட்டி) ஒழுங்குசெய்தல், குழுநிலைச்

செயற்பாடுகள், மாலைநேர சந்திப்புகள், நாடகங்களை நடித்துக்காட்டுதல், சிறுகதையாக்கம், பாட்டிசைத்தல் போன்ற செயற்பாடுகள்.

- சமய ரீதியான சுற்றுப்பயணங்கள் என்ற வகையில் கடலாதெனிய, எம்பெக்கே, லங்காதிலக, கொத்மலே மகாவெலி சேய, நெல்லிகல ரஜமகா விகாரை, ரணவன புராண விகாரை என்பவற்றைத் தரிசித்து வழிபடுதல், பின்னவல யானைகள் சரணாலயத்தையும் சூர சரதியல் கிராமத்தையும் பார்வையிடுதல்.

- சிங்கள புதுவருடக் கொண்டாட்டம், அதன் நிமித்தம் பல்வேறு பாரம்பரிய விளையாட்டுக்களை ஒழுங்குசெய்தல், வெசாக் பண்டிகையை முன்னிட்டு பக்தி கீதம் இசைத்தலும் சமய நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தலும், பௌத்தாலோக மாவத்தை வெசாக் வெளிச்சக்கூடு நிர்மாணப் போட்டியில் பரிசு பெறல்.

- கரப்பந்து, கிரிக்கட், கெரம், கிரிக்கட், டாம், சதுரங்க ஆட்டம், பூப்பந்து சுற்றுப் போட்டி நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தல்.

- மாதாந்த மற்றும் வாராந்த அடிப்படையில் பணியாள்தொகுதியினருடன் சிகிச்சையளிப்புக்கான சந்திப்புக்களை ஒழுங்குசெய்தல்.

- 5 S நிகழ்ச்சித்திட்டத்தை ஆண்டுமுழுதும் அமுல்படுத்துதல்.

- மாகாண போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டமும், வேறு போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களும்.

- பல்வேறு சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள் - பற்சிகிச்சை முகாம்கள், டெங்குநோய் ஒழிப்பு நோக்கிலான சிரமதானங்கள், மனநலம் பற்றிய மனோ வைத்தியர் சொற்பொழிவுகள் என்பவற்றை ஒழுங்குசெய்தல்.

- உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒழுங்குசெய்யப்படும் விசேட நிகழ்ச்சிகள்.

- வாழ்க்கைத் தொழிற்பயிற்சி என்ற வகையில் கடிதவுறை தயாரித்தல், ஓக்கிட் மலர்ச்செய்கை சார்ந்த செயற்பாடுகள், விவசாய நடவடிக்கைகள், மோட்டார் தொழில்நுட்பப் பயிற்சி, ஹோட்டல் பயிற்சி.

- ஆண்டிறுதியில் நத்தார் பண்டிகை, டிசம்பர் 31 இரவு களியாட்டம் போன்ற நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் அமுல்படுத்தப்பட்டன.

- தாதியர் பயிற்சி.

- தொழிற்பயிற்சி அதிகாரசபையின் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்.

- யோகாசன நிகழ்ச்சி.

<u>தென்மாகாண சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - காலி</u>

இந்நிலையத்தின் மூலமும் 40 சேவைபெறுநர்களுக்கு ஒரே தடவையில் சேவைகளை வழங்க முடியும். 2014 ஆம் ஆண்டு கொடுப்பனவு அடிப்படையில் சேவைகளைப் பெறக்கூடிய ஒரு பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி, 279 சேவைபெறுநர்கள் ஆலோசனைச் சேவைகளைப் பெறுவதற்கும் 131 சேவைபெறுநர்கள் வதிவிட சிகிச்சைகளைப் பெறுவதற்கும் இங்கு அனுமதிக்கப்பட்டனர். நடப்பாண்டில்

இந்நிலையத்தின் மூலமும் வதிவிட சேவைபெறுநர்களுக்காக பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன:

- டெங்குநோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், பற்சிகிச்சை முகாம்கள், உடல் நலம் மற்றும் மன நலம் பற்றிய சொற்பொழிவுகள், நிலையத்தில் சிரமதானப் பணிகள்.
- மாதாந்த "சில்" விரதம் அனுஷ்டிப்பு நிகழ்ச்சி, வெசாக் மற்றும் பொசொன் பண்டிகைகள் சார்ந்த செயற்பாடுகள்.
- பௌத்தாலோக மாவத்தை வெசாக் வெளிச்சக்கூடு நிர்மாணப் போட்டியில் பரிசுபெறல், பணியாள் தொகுதியினருடனான மாதாந்த மற்றும் வாராந்த சந்திப்புகளையும் சிகிச்சையளிப்புக்கான சந்திப்புகளையும் ஒழுங்குசெய்தல்.
- விவசாய நிகழ்ச்சித்திட்டங்கள், ஓக்கிட் மலர்ச்செய்கை, காளான் வளர்ப்பு, ரோஜா மலர்ச்செய்கை ஆகியன பற்றி லபுதுவ விவசாயக் கல்லூரியில் இடம்பெற்ற கருத்தரங்குகளும் செயற்பாடுகளும், பல்வேறு தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல், மோட்டார் வாகன தொழில்நுட்பம், இலத்திரனியல்.
- பணியாள்தொகுதியினருக்கான பயிற்சி அமர்வுகள், பணியாள்தொகுதியினருடனான வாராந்த மற்றும் மாதாந்த சந்திப்புகள்.
- குடும்ப சந்திப்புகளும் பிற்பாதுகாப்பு சந்திப்புகளும்.
- யோகாசன நிகழ்ச்சி.
- உலக சிறுவர் தினத்தை ஒட்டிய விசேட நிகழ்ச்சிகள்.
- ஹோட்டல் பாடசாலை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.
- 5 S நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்.
- மாகாண போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தையும் அதனோடிணைந்த போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒழுங்குசெய்தல்.
- புதுவருடம், வெசாக், பொசொன், நத்தார் போன்ற பண்டிகைகளை முன்னிட்ட கொண்டாட்டங்களும் அவை சார்ந்த சமய செயற்பாடுகளும்.
- கரப்பந்தாட்டம், கிரிக்கட், டாம், சதுரங்க ஆட்டம், பூப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்கள்.
- உடல் விருத்தி அப்பியாச நிகழ்ச்சிகள்.
- ஆண்டு இறுதி வர்ண இரவு நிகழ்ச்சிகள்.
- கன்னளிய வனக்காப்பைப் பார்வையிடுதல்.
- கொக்கலை மார்டின் விக்ரமசிங்க நூதனசாலையையும் ரூமஸ்ஸல கந்த பகுதியையும் கண்டுகளித்தல்.
- வருடாந்த மாபெரும் கலை நிகழ்ச்சி.
- ராஜகிரிய அரியஞான தேரரின் தர்ம உபந்நியாசங்களுக்கு பிள்ளைகளை இணைத்துக்கொள்ளல்.

<u>நவதிகன்த சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையம் - நிட்டம்புவ</u>

60 சேவைபெறுநர்களுக்கு ஒரே தடவையில் இந்நிலையத்தின்மூலம் சேவைகளை வழங்க முடியும். கொடுப்பனவு அடிப்படையில் சேவைகளை வழங்கும் பிரிவொன்றும் இங்குள்ளது. 2016 ஆம் ஆண்டில் இந்நிலையத்தின்மூலம் 605 பேர் ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொண்டனர். அவர்களில் 401 சேவைபெறுநர்களுக்கு வதிவிட சிகிச்சை அளிக்கப்பட்டது.

நடப்பாண்டில் நவதிகன்த நிலையத்தின் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன:-

- மாதாந்த 'சில்' விரதம் அனுஷ்டிப்பு நிகழ்ச்சி.
- சிங்கள புதுவருட கொண்டாட்டம்.
- வெசாக், பொசொன், நத்தார் முதலிய பண்டிகைகள் சார்ந்த செயற்பாடுகள்.
- இசைமூல சிகிச்சை முறைகள்.
- டெங்குநோய் ஒழிப்பு சார்ந்த செயற்பாடுகளும் சிரமதானங்களும்.
- போதி பூஜை வழிபாட்டு நிகழ்ச்சிகள்.
- பணியாள்தொகுதியினருக்கான பயிற்சி அமர்வுகள்.
- சிகிச்சையளிப்புக்கான வாராந்த சந்திப்புகள்.
- பணியாள்தொகுதியினருக்கான மாதாந்த அமர்வுகள்.
- குடும்பத்தவருடான ஒன்றுகூடல்/குழுநிலை ஆலோசனை/தனிப்பட்ட ஆலோசனை.
- பெற்றோருடனான ஒன்றுகூடல்.
- 5 S நிகழ்ச்சித்திட்டம்.
- உடல்நலம் மற்றும் மனநலம் பற்றிய விரிவுரைகள்.
- வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.
- காசநோய் தடுப்பு/ பாலியல் நோய்கள் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள்.
- பிற்பாதுகாப்பு.
- 'பெதுரு பாட்டி' போன்ற இசை நிகழ்ச்சிகள்.
- சிரமதான நிகழ்ச்சிகள்.
- நடன, நாடக நிகழ்ச்சிகள்.
- கல்வி நிகழ்ச்சிகள்.
- நத்தார் நிகழ்ச்சிகள்.
- ஆண்டு இறுதி 31ம் நாள் வர்ண இரவு நிகழ்ச்சி.
- போதையூட்டும் ஔடத தடுப்பு நிகழ்ச்சிகள்.
- பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆலோசனை சான்றிதழ் கற்கைநெறி, பிரயோக ரீதியான பயிற்சி, தாதி உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்படும் பயிற்சிகள்.

<u>பிற்பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2016</u>

2016 ஆம் ஆண்டில் அந்தந்த நிலையங்கள்மூலம் செய்யப்பட்ட பிற்பாதுகாப்புத் தகவல்கள் கீழ் தரப்பட்டுள்ளன. சேவைபெறுநர்களை நிலையத்திற்கு வரவழைத்துக்கொள்ளல், தொலைபேசி வாயிலாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளல், வெளிநிலைச் சேவைகள் போன்ற முறைகள் இங்கு கையாளப்பட்டன.





<u>போதையூட்டும் ஔடத பாவனையிலிருந்து விடுபட்டவர்கள்</u>

மேற்குறிப்பிட்ட தகவல்களின்படி இவ்வாண்டில் இச்சிகிச்சையளிப்புப் பிரிவிற்கு அறிக்கையிடப்பட்ட மொத்த பிற்பாதுகாப்புத் தகவல்கள் - எமது சிகிச்சையளிப்பு நிலையங்கள்மூலம் புனர்வாழ்வு அளிக்கப்படும் மொத்த புனர்வாழ்வுபெறுநர்களின் எண்ணிக்கை 2741 ஆகும்.

பிற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட சேவைபெறுநர்களில் தலங்கம நிலையத்தில் 713 சேவைபெறுநர்களும் கண்டி நிலையத்தின் 229 சேவைபெறுநர்களும் காலி நிலையத்தின் 456 சேவைபெறுநர்களும் நவதிகன்த நிலையத்தின் 569 சேவைபெறுநர்களும் பிலியந்தலை நிலையத்தின் 81 சேவை பெறுநர்களும் போதையூட்டும் ஔடதங்களை உபயோகிப்பதிலிருந்து விடுபட்டிருப்பதாக அறிய முடிந்தது. அந்த அடிப்படையில், எமது சிகிச்சையளிப்பு நிலையங்களினால் மாத்திரம் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்களில் 1,967 பேர் போதையூட்டும் ஔடதங்களை உபயோகிப்பதிலிருந்து விடுபட்டுள்ளனர்.

<u>கந்தகாடு சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டம்</u>

எமது சபையினால் நடப்பாண்டில் கந்தகாடு புனர்வாழ்வளிப்பு நிலையத்திற்கு சிறப்பான ஒரு சேவை வழங்கப்பட்டது. எமது சிகிச்சையளிப்பு நிலையங்களில் சேவைகளில் ஈடுபடும் ஆலோசனை உதவியாளர் உத்தியோகத்தர்களும் எமது சிகிச்சையளிப்பு நிலையங்களில் நீண்டகாலம் பயிற்சி பெற்ற, நாளாந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட மூன்று ஆலோசனை உதவியாளர்களும் முழு நேர அடிப்படையில் தமது சேவைகளை வழங்கினர்.

## 8.4 பணியமர்வுசெய்யப்பட்ட மற்றும் தனியார் சிகிச்சையளிப்பு நிலையப் பிரிவு

2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட ஆட்களின் (சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு) சட்டத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் 09 பணியமர்வுசெய்யப்பட்ட சிகிச்சையளிப்பு நிலையங்கள் பெயர்குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன:

1. பல்லேகெலே
2. வட்டரெக்க
3. தல்தென
4. வீரவில
5. அநுராதபுரம்
6. பல்லன்சேன
7. கந்தெவத்த
8. மீத்திரிகல
9. அம்பேபுஸ்ஸ

மேற்குறிப்பிட்ட எல்லா பணியமர்வுசெய்யப்பட்ட சிகிச்சை நிலையங்களிலும் போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்கான சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புச் செயன்முறை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் இந்நிலையங்களுக்கு ஆலோசனை உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

தனியார் சிகிச்சையளிப்பு நிலையங்களாவன:-

- யௌவன கித்துமக சிகிச்சையளிப்பு நிலையம்
- பெத்தும சிகிச்சையளிப்பு நிலையம்
- அல்அனோ கிளப் சிகிச்சையளிப்பு நிலையம்
- பெதெஸ்தா புனர்ஜீவன சிகிச்சையளிப்பு நிலையம்
- நேத்ரா சிகிச்சையளிப்பு நிலையம்
- நவஜீவன அமத்யப்ப ஹன்ட சேவய சிகிச்சையளிப்பு நிலையம்
- யஹபத் சமாரியயா சிகிச்சையளிப்பு நிலையம்
- பெரொந்து தேசய சிகிச்சையளிப்பு நிலையம்
- மித்ர சிகிச்சையளிப்பு நிலையம்
- யௌவன சஹன சேவய சிகிச்சையளிப்பு நிலையம்
- மித்துரு மித்துரோ சிகிச்சையளிப்பு நிலையம்
- சிதஹச சிகிச்சையளிப்பு நிலையம்
- செனெஹச சிகிச்சையளிப்பு நிலையம்
- அந்துரின் ஆலோக்கய சிகிச்சையளிப்பு நிலையம்
- கருணாவே நிவச சிகிச்சையளிப்பு நிலையம்
- மீதும சிகிச்சையளிப்பு நிலையம்
- பலய நிவச சிகிச்சையளிப்பு நிலையம்
- சுமித்ரயோ சிகிச்சையளிப்பு நிலையம்
- ஜயவிரு சமாதி நிவஹன சிகிச்சையளிப்பு நிலையம்
- சமாதி நிவஹன சிகிச்சையளிப்பு நிலையம்
- விமோச்சன சிகிச்சையளிப்பு நிலையம்
- பொஸ்கோ சிகிச்சையளிப்பு நிலையம்
- நிசங்சல சிகிச்சையளிப்பு நிலையம்
- மித்துரு செவன சிகிச்சையளிப்பு நிலையம்

மேற்குறிப்பிட்ட தனியார் சிகிச்சையளிப்பு நிலையங்களில் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த தர நியமங்களைப் பூர்த்திசெய்து சபையின் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட 12 சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்கள் உள்ளன.

2016 ஆம் ஆண்டில் பெயர்குறிப்பீடுசெய்யப்பட்ட சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள்

| | வீரவில | பல்லேகெலே | காலி | பூஸ்ஸ | அநுராதபுரம் | மஹர | கந்தெவத்த | மீத்திரிகல | அம்பேபுஸ்ஸ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த பதிவுசெய்யப்பட்டவை | 119 | 181 | 797 | 250 | 28 | 36 | 38 | 20 | 93 |
| மொத்த ஆலோசனைகள் | 251 | 250 | 1005 | 565 | 96 | 48 | 12 | 27 | 516 |
| புதிய சேவைபெறுநர்கள் | 44 | | 743 | 250 | 62 | 28 | 32 | 18 | 72 |
| விடுவிக்கப்பட்டவர்கள் | 18 | 77 | 278 | 149 | 81 | 10 | 15 | 05 | 47 |
| பிற்பாதுகாப்பு | 19 | 77 | 19 | 05 | 73 | 14 | 16 | 10 | 58 |

## 8.5 வெளிநிலைச் சேவைகள் - 2016

வெளிநிலைச் சேவைகள் பிரிவு, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முக்கிய பிரிவுகளில் ஒன்றாகும். வெளிநிலைச் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள்மூலம் பொதுமக்களின் அறிவை விருத்திசெய்தல், கேள்வியையும் வழங்கலையும் குறைத்தல் என்றவாறு இரண்டு தடுப்புப் பொறிமுறைகள் குறித்து விசேட கவனம் செலுத்துகின்றோம். தடுப்பு, சிகிச்சையளிப்பு, புனர்வாழ்வளிப்பு என்பவற்றுடன் போதையூட்டும் ஔடத பாவனையாளர்களுக்கு அவற்றுக்கு அடிமைப்பட்ட நிலையிலிருந்து விடுபடுவதற்காக போராடுவதற்கு நாம் அவர்களுக்கு உளவள ஆலோசனைகளை வழங்குகின்றோம். அதேபோல், அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களையும் வலுப்படுத்துகின்றோம். எமது வெளிநிலைச் சேவைகள் பிரிவு 08 மாகாணங்களில் மிகவும் பரந்தளவில் நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.




### போதையூட்டும் ஔடத பாவனையாளர்களை அடையாளம் காணல் - 2016

அட்டவணை - 1

| மாகாணம் | ஹெரோயின் | கஞ்சா | அற்கஹோல் | பிற |
|---|---|---|---|---|
| மேல் | 1449 | 838 | 434 | 318 |
| மத்திய | 150 | 120 | 371 | 65 |
| வடமத்திய | 177 | 139 | 117 | 12 |
| வடமேல் | 156 | 141 | 311 | 28 |
| தென் | 169 | 145 | 81 | 11 |
| வட | 178 | 263 | 317 | 147 |
| சப்ரகமுவ | 233 | 118 | 471 | 28 |
| கிழக்கு | 46 | 34 | 35 | 01 |
| **மொத்தம்** | **2558** | **1798** | **2137** | **610** |

வெளிநிலைச் சேவை உத்தியோகத்தர்களினால் 7,103 போதையூட்டும் ஔடத பாவனையாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 2,558 பேர் ஹெரோயின் பாவனையாளர்களாவர்.

உருவரை - 1




1,320 போதையூட்டும் ஔடத பாவனையாளர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளுக்கும் எமது நிலையங்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட்டதுடன், நிலையத்தில் இருக்கும்போதும் களப் பணியில் இருக்கும்போதும் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பதிலிருந்து விடுபட்டவர்களின் எண்ணிக்கை 2,050 ஆகும்.

அட்டவணை - 2

| மாகாணம் | ஆற்றுப்படுத்தல் | பாவனையிலிருந்து விடுபடல் |
|---|---|---|
| மேல் | 754 | 741 |
| மத்திய | 67 | 182 |
| வடமத்திய | 39 | 380 |
| வடமேல் | 197 | |
| தென் | 197 | 649 |
| வட | 05 | |
| சப்ரகமுவ | 30 | 48 |
| கிழக்கு | 31 | 50 |
| மொத்தம் | 1,320 | 2,050 |

அட்டவணை - 3

<u>பிற்பாதுகாப்பு</u>

| மாகாணம் | சனசமூக | நிலைய குடும்ப நல ஆலோசனை | நிலையம் | சிறைச்சாலை |
|---|---|---|---|---|
| மேல் | 1,426 | 688 | 1,298 | 217 |
| மத்திய | 644 | 124 | 214 | 8 |
| வடமத்திய | 288 | 92 | 77 | 36 |
| வடமேல் | 446 | 88 | 180 | 41 |
| தென் | 439 | 34 | 296 | 34 |
| வட | 237 | 67 | 55 | 20 |
| சப்ரகமுவ | 255 | 38 | 43 | 12 |
| கிழக்கு | 380 | 05 | 13 | 35 |
| மொத்தம் | 4,115 | 1,136 | 2,176 | 403 |

விழிப்பூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள் உட்பட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எமது வெளிநிலைச் சேவைகள் பிரிவினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரம் வருமாறு:

**அட்டவணை – 4**

| மாகாணம் | அரசாங்க உத்தியோகத்தர்-களுக்கான விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் | | சிறைச்சாலை நிகழ்ச்சித்திட்டங்கள் | | பாடசாலை மாணவர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | அளவு | பங்குபற்றியோர் எண்ணிக்கை | அளவு | பங்குபற்றியோர் எண்ணிக்கை | அளவு | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
| மேல் | 175 | 6,673 | 21 | 280 | 124 | 14,067 |
| மத்திய | 184 | 4,592 | 2 | 90 | 66 | 5,621 |
| வடமத்திய | 22 | 1,097 | - | - | 28 | 2,011 |
| வடமேல் | 50 | 3,978 | - | - | 63 | 6,839 |
| தென் | 232 | 2,753 | - | - | 32 | 6,658 |
| வட | 35 | 4,763 | - | - | 113 | 3,015 |
| சப்ரகமுவ | 49 | 3,511 | 21 | 329 | 39 | 4,678 |
| கிழக்கு | 18 | 647 | - | - | 30 | 2,582 |
| மொத்தம் | 765 | 28,014 | 44 | 699 | 495 | 45,471 |

**அட்டவணை - 5**

| மாகாணம் | சனசமூக நிகழ்ச்சித்திட்டங்கள் | | சமூக அமைப்புகள் | | மருந்தகங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | அளவு | பங்குபற்றியோர் எண்ணிக்கை | அளவு | பங்குபற்றியோர் எண்ணிக்கை | அளவு | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
| மேல் | 156 | 7,588 | 81 | 3,060 | 157 | 1,438 |
| மத்திய | 163 | 2,310 | 142 | 3,135 | 43 | 3,665 |
| வடமத்திய | 37 | 830 | 17 | 820 | 12 | 251 |
| வடமேல் | 188 | 1,823 | 35 | 2,633 | 15 | 322 |
| தென் | 41 | 1,513 | 27 | 1,500 | 33 | 1,351 |
| வட | 38 | 1,415 | 43 | 897 | 21 | 425 |
| சப்ரகமுவ | 41 | 1,386 | 29 | 666 | 27 | 809 |
| கிழக்கு | 20 | 617 | 17 | 1,150 | 19 | 682 |
| மொத்தம் | 684 | 17,482 | 391 | 13,861 | 322 | 8,943 |

போதையூட்டும் ஔடத தடுப்பு, சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு பற்றி பொதுமக்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் வெளிநிலைச் சேவைகள் பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்டன. அதனிடையே புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஊர்வலமொன்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சியொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பெரும்

எண்ணிக்கையானவர்கள் அதில் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெளிநிலைச் சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் எட்வின் ரொஜர் அவர்களினால் இந்நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்குசெய்யப்பட்டது.





இதற்கு மேலதிகமாக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் கண்டி மாவட்டத்தில் சனசமூகத்தை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், பாடசாலை மாணவர்கள், வாழ்க்கைத்தொழிற் கல்வியைத் தொடரும் மாணவர்கள் போலவே அரச மற்றும் அரச சார்பற்ற துறைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என்போருக்கான விசேட தடுப்பு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நகழ்ச்சித்திட்டங்கள் வெளிநிலைச் சேவை உத்தியோகத்தர் ஆரியரத்ன அவர்களினால் நடத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, கண்டி 'எசல பெரஹரா' ஊர்வலத்தை முன்னிட்டும் சில நாட்களுக்கு நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டன. இதன் ஊடாக கண்டி மாவட்டத்தின் எல்லாக் குழுக்கள் மீதும் கவனம் செலுத்தப்பட்டதன் காரணமாக கூடுதல் பயனடைய முடிந்தது.







இரத்தினபுரி சமன் தேவாலய பெரஹரா ஊர்வலம் இடம்பெற்ற நாட்களில் எமது போதையூட்டும் ஔடத தடுப்பு பற்றிய விழிப்பூட்டல் கண்காட்சிக் கூடம் சமன் தேவாலய கௌரவ பஸ்நாயக்க நிலமே அவர்கள் தலைமையில் உதவி வெளிநிலைச் சேவைகள் உத்தியோகத்தர் சானிகா அபேசிங்க அவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டம், சபையின் வெளிநிலைச் சேவைகள் உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது.





<u>உலக சிறுவர் தின நிகழ்ச்சி</u>

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு தெஹிவளை பிரதேச உதவி வெளிநிலைச் சேவைகள் உத்தியோகத்தர் மொனிகா அமரசிங்க அவர்களினால் விசேட நிகழ்ச்சியொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சி, இப்பிரதேசத்திற்கு மிகவும் பொருத்தமானதாக இருந்தது. சிறுவர் பரம்பரையை இலக்கிட்டதாக பல்வேறு விதமான கடத்தல்கள் இப்பிரதேசத்தில் பரவலாக இடம்பெறுவதுடன் இத்தகைய இடர்களிலிருந்து பிள்ளைகளை மீட்டெடுக்கும் நோக்குடன் பெற்றோர்கள், சிறுவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் சிறுவர் தினத்தை முன்னிட்டு விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டன.



இதற்கு மேலதிகமாக, தெஹிவளை பிரதேசத்தில் சனசமூக அடிப்படையிலான நிகழ்ச்சிகள் அதாவது மொரட்டுவை லுனாவ வைத்தியசாலையில் நடத்தப்படும் ஆலோசனை சிகிச்சைக்களம், கடற்கரைப் பகுதிகளில் வாழும் மக்களை அறிவுறுத்துதல், மீன்பிடியாளர் சமூகம் போன்றே பாடசாலை செல்லாத பிள்ளைகள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்துவது முதலான பல்வேறு நிகழ்ச்சிகள் தெஹிவளை, இரத்மலானை, மொரட்டுவை, கல்கிசை ஆகிய பிரதேசங்களில் ஒழுங்குசெய்யப்பட்டன. அதன் ஊடாக பெரும் எண்ணிக்கையான பொதுமக்களுக்கு அளப்பரிய சேவையொன்றை வழங்க முடிந்தது. மேலும், போதையூட்டும் ஔடத கடத்தல் வியாபாரமும் பிரயோகமும் கூடுதலாக காணக்கூடியதாக இருக்கும் மேற்படி பிரதேசங்களுக்கு இந்நிகழ்ச்சிகளின் ஊடாக கூடுதல் செல்வாக்கொன்றைப் பிரயோகிக்க முடிந்தது. இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்தும்போது இப்பிரதேசங்களின் பொலிஸ் நிலையங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள் முதலான எல்லா அரச உத்தியோகத்தர்களதும் உதவி தொடர்ந்தும் கிடைத்தது.





<u>சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மத்தியில் விழிப்பூட்டல்</u>

வெலிக்கடை சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு போதையூட்டும் ஔடத தடுப்பு சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சியொன்று உதவிப் பணிப்பாளர் டப்ளியூ.மாரசிங்க அவர்கள் தலைமையில் உதவி வெளிநிலைச் சேவைகள் உத்தியோகத்தர் திருமதி துசாரா நில்மினியினால் ஒழுங்குசெய்யப்பட்டது.



எல்லாப் பிரதேசங்களையும் உள்ளடக்கக்கூடிய விதத்தில் சபையின் நிதி ஒதுக்கீடுகளின்கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின், நகர சபைகளின், வைத்தியசாலைகளின், பொலிஸ் நிலையங்களின் அதேபோல் ஏனைய அரசாங்க நிறுவனங்களின் அனுமதியுடன் இவற்றைக் காட்சிப்படுத்த முடிந்தது. இக்கண்காட்சியில் கொழும்பு பிரதேசத்தின் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், பொலனறுவை, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, நுவரெலியா, யாழ்ப்பாணம், களுத்துறை, மாத்தளை, யாழ்ப்பாணம், அம்பாறை, மட்டக்களப்பு, குருணாகல், புத்தளம் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக நகரில் பொதுமக்கள் அதிகளவில் நடமாடும் இடங்களில் 25 விளம்பரப் பலகைகளை நிறுவும் வாய்ப்புக் கிட்டியது.



*களனி விகாரைக்கு அருகில்*



*இரத்தினபுரியில்*




*யாழ்ப்பாணத்தில்*

<u>சாரதிகளின் அறிவை விருத்திசெய்தல்</u>

இதன் மற்றுமொரு நடவடிக்கையாக முச்சக்கர வண்டிச் சாரதிகள், பாடசாலை வான் வண்டிச் சாரதிகள், பஸ் வண்டிச் சாரதிகள் என்போரை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

அட்டவணை – 6

| மாகாணம் | முச்சக்கரவண்டிச் சாரதிகள் | பஸ்வண்டிச் சாரதிகள் | வான் வண்டிச் சாரதிகள் |
|---|---|---|---|
| மேல் | 995 | 101 | 221 |
| மத்திய | 2157 | 770 | 48 |
| வடமத்திய | 567 | 159 | 135 |
| வடமேல் | 402 | 99 | 81 |
| தென் | 208 | - | - |
| வட | 578 | 556 | 432 |
| சப்ரகமுவ | 227 | 85 | 15 |
| கிழக்கு | 358 | 256 | 227 |
| மொத்தம் | 5492 | 2026 | 1159 |

அட்டவணை - 7

போதையூட்டும் ஔடத தடுப்பு நடமாடும் நிகழ்ச்சிகள்

| மாகாணம் | ஆற்றுப்படுத்தல் | பாவனையிலிருந்து விடுபடல் |
|---|---|---|
| மேல் | 67 | 25,735 |
| மத்திய | 25 | 88,450 |
| வடமத்திய | 01 | 2,500 |
| வடமேல் | 11 | 19,300 |
| தென் | 11 | 3,225 |
| வட | - | - |
| சப்ரகமுவ | 16 | 9,367 |
| கிழக்கு | 01 | 250 |
| மொத்தம் | 132 | 148,827 |

## மஹாபோதி ஆலோசனை நிலையம்

போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்களதும் அவர்களின் குடும்பங்களதும் அங்கத்தவர்களுக்கு அவசியமான ஆலோசனைகளை வழங்குவதற்கு ஆலோசனைச் சேவைகளும் இப்பிரிவில் அமுல்படுத்தப்பட்டன. அதற்கு மருதானை மஹாபோதி விகாரையின் ஆலோசனை நிலையமொன்று நடத்தப்பட்டு வருகிறது.

2016 ஆம் ஆண்டில் போதையூட்டும் ஔடதங்களைப் பாவிப்பவர்களில் 755 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இந்நிலையத்தின் மூலம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டனர்.

## தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் நிறுவப்பட்டுள்ள பொதுமக்கள் தகவல் நிலையம் (1984)

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் சட்டவிரோத போதையூட்டும் ஔடதங்கள், அற்கஹோல் பாதிப்பு ஆய்வுத் தகவல் நிலையம் 2014.04.09 ஆந் திகதி நிறுவப்பட்டது. இந்நிலையத்திற்கு பொதுமக்களிடமிருந்து தகவல்களையும் முறைப்பாடுகளையும் பெற்றுக்கொள்வற்கு 1984 / 011 2077778 என்ற துரித அழைப்பு இலக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

மேற்படி தொலைபேசி அழைப்பின் ஊடாக அனுப்பிவைக்கப்படும் முறைப்பாடுகளும் தகவல்களும் கடிதங்கள் மூலம் அனுப்பிவைக்கப்படும் முறைப்பாடுகளும் தகவல்களும் நிலையத்தில் ஒப்படைக்கப்படும் முறைப்பாடுகளும் குறித்து விசாரணைசெய்வதற்கு பொலிஸ் பிரிவு, மதுவரித் திணைக்களம், பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம், வலான ஊழல் ஒழிப்புப் பிரிவு, பொலிஸ் அதிரடிப்படை, ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை ஆகிய நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

இந்நிறுவனங்களுக்கு வழங்கப்படும் முறைப்பாடுகள் குறித்த புலனாய்வு நடவடிக்கைகளையும் திடீர் சுற்றிவளைப்புகளையும் மேற்கொண்டு எமக்கு மீளூட்டம் வழங்கப்படுவதுடன், முறைப்பாட்டுகாரர்கள் அது சம்பந்தமாக விசாரிக்கும்போது அது பற்றி தகவல் நிலையத்தினால் அறிவுறுத்தப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக, போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட ஆட்களுக்கு ஆலோசனைப் பெற்றுக்கொள்வதற்காக இத்தகவல் நிலையத்தின் மூலம் புனர்வாழ்வளிப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

அதன்படி, 2016 ஆம் ஆண்டில் தகவல் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் திடீர் சுற்றிவளைப்புகளுக்காக அனுப்பிவைத்தல் பின்வரும் நிறுவனங்களுக்கு புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை – 8

2016 ஆம் ஆண்டு

| கிடைத்துள்ள முறைப்பாடுகளின் தன்மை | முறைப்பாடுகளின் எண்ணிக்கை | கிடைத்துள்ள முறைப்பாடுகள் குறித்து புலனாய்வுசெய்வதற்கு அனுப்பிவைக்கப்பட்ட நிறுவனங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் | விசேட அதிரடிப் படை | மதுவரித் திணைக்களம் | வலான் மோசடி ஒழிப்புப் பிரிவு | பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம் | ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை |
| ஹெரொயின்/ கஞ்சா | 618 | 618 | 62 | 00 | 09 | 04 | 00 |
| சட்டவிரோத அற்கஹோல் (கசிப்பு) | 637 | 502 | 04 | 568 | 21 | 00 | 00 |
| போதை மாத்திரைகள்/ சட்டவிரோத மருந்தகங்கள் | 22 | 02 | 01 | 00 | 00 | 00 | 21 |

## 8.6 தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் ஆய்வுகூடம் (NNL Lab)

### இலங்கையில் பரம்பியுள்ள துஷ்பிரயோக போதையூட்டும் ஔடதங்களை அடையாளம் காணல்

### தெருவில் கிடைக்கின்ற ஹெரொயின் போதையூட்டும் ஔடதங்கள்: ஹெரொயின் சார்ந்த ஆராய்ச்சிகள்

தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் பகுப்பாய்வுகளுக்கு மேதிகமாக, பின்வரும் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களும் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

- "தெருவில்" கிடைக்கும் ஹெரொயினின் விலை எதிர் தூய்தானதன்மை (Price vs Purity) பற்றி வெளிப்படுத்தி அதிலுள்ள தொடர்பை அடையாளம் காண்பதற்கு சட்டரீதியாக மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள்.
- ஹெரொயின் மாதிரி வகைகளின் தோற்றுவாயையும் பரிணாமத்தையும் அடையாளம் காணல்.
- "தெரு" ஹெரொயின் மாதிரி வகைகளிலுள்ள (Street Samples) புதிய செறிவுதளர்த்தும் பதார்த்தங்களை (Adultcrants) அடையாளம் காண்பதற்கான பகுப்பாய்வுகள்.

பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகத்தின் ஒத்தாசையுடன் இக்கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதுடன், நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் மாதாந்தம் சேகரிக்கப்படும் மாதிரி வகைகள் இந்த ஆய்வுகூடத்திற்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

2016 ஆம் ஆண்டில் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் 133 தெரு ஹெரொயின் மாதிரிவகைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றில் அடங்கியுள்ள டைஎசடைல் மோர்∴பீன் (ஹெரொயின்) சதவீதத்தையும் கலப்படம்செய்யப்படும் மற்றும் கலவையின் செறிவுதளர்த்தும் பதார்த்தங்களை அடையாளம் காண்பதற்கான பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அட்டவணை இல. 01 -
**2016 ஆம் ஆண்டில் பகுப்பாய்வுசெய்யப்பட்ட மாதிரி வகைகளின் எண்ணிக்கை**

| மாதம் | மாதிரி வகைகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 14 |
| பெப்ரவரி | 16 |
| மார்ச் | 17 |
| ஏப்ரல் | - |
| மே | - |
| ஜூன் | 18 |
| ஜூலை | 16 |
| ஆகஸ்ட் | - |
| செப்டம்பர் | 17 |
| அக்டோபர் | - |
| நவம்பர் | 20 |
| டிசம்பர் | 15 |
| மொத்தம் | 133 |

தெரு ஹெரொயின் மாதிரி வகைகளின் விலைகளுக்கும் தூய்தான தன்மைக்கும் இடையிலான தொடர்பு குறித்து ஆராய்வதன்மூலம் பாவனையாளர்களுக்கும் சந்தைக்கும் இடையிலான தொடர்பை கண்காணிப்பதற்கு மிகச் சிறந்த ஒரு குறிகாட்டி என்ற வகையில் கவனிப்பதன்மூலம் கிடைப்பனவில் ஏற்படும் மாற்றங்களை மிக இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும். இதற்கு மேலதிகமாக, விலைக்கும் தூய்தான தன்மைக்கும் இடையில் நிலவும் தொடர்புகளைத் தெளிவுபடுத்திக்கொள்வதன் மூலம் போதையூட்டும் ஔடதங்களின் வழங்கல் முறைகளை அடையாளம் காண்பதன் ஊடாக திட்டமிட்ட

இலக்குகளைப் பிரயோகித்து அமுல்படுத்துவதன் ஊடாக கடத்தல், போக்குவரவு, கைதாகும் ஹெரோயின் மற்றும் பாவனையாளர்கள் மீது மிகச் சிறப்பாக சட்டத்தை அமுல்படுத்த முடியும்.

இந்த ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின்படி இலங்கையில் தெரு மட்ட ஹெரோயின் மாதிரி வகைகளின் தூய்தான தன்மைக்கும் விலைகளுக்கும் இடையிலுள்ள தொடர்பை முறையான ஆய்வொன்றின்மூலம் பெறப்பட்ட தகவல்கள், கொள்கை வகுப்பின்போதும் சட்டத்தை அமுல்படுத்தும் உத்தியோகத்தர்களின் செயற்பொறுப்பிலும் முக்கியமானதாக அமைவதுடன், கைதுசெய்யப்படும் பாரியளவான போதையூட்டும் ஔடத கையிருப்பு, ஹெரோயின் மாதிரிகளின் தூய்தான தன்மை மற்றும் விலைகளுக்கு இடையிலான தொடர்பின் மீது பாதிப்புச் செலுத்த முடியுமா என்பதை தெளிவுபடுத்திக்கொள்ள முடியும்.

பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம் மூலம் போதையூட்டும் ஔடத மாதிரி வகைகள் ஏப்ரல், மே, ஆகஸ்ட், அக்டோபர் ஆகிய மாதங்களில் வழங்கப்படவில்லை என்பதுடன், ஆய்வுக்கு உட்படுத்தப்படும் 11 மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல நகரங்களின் விலை மற்றும் தூய்தான தன்மை தொடர்பான தரவுகள் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. அத்தரவுகளின்படி, ஹெரோயினின் தூய்தான தன்மையின் சராசரிப் பெறுமானம் 21.34% ஆக இருப்பதுடன், 2015 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக சராசரி தூய்தான தன்மையில் 5.79% வீழ்ச்சியொன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. தூய்மையின் உயர் சராசரிப் பெறுமானம் 43.10% ஜூலை மாதத்தில் அறிக்கையிடப்பட்டது. தாழ்ந்த சராசரிப் பெறுமானமான 5.34% பெப்ரவரி மாதத்தில் அறிக்கையிடப்பட்டது.

அட்டவணை இல. 02 -
மாதிரி வகைகளின் தூய்தான தன்மை (டை எசிட்டைல் மோர்.ஃ.பீன் சதவீதம்)

| பிரதேசம் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் (அநுராதபுரம்) | - | - | 1.59 | - | - | - | - | - | 33.55 | - | - | - |
| அநுராதபுரம் (அநுராதபுரம்) 1 | - | - | - | - | - | 33.10 | - | - | - | - | - | - |
| அநுராதபுரம் (அநுராதபுரம்) 2 | - | - | - | - | - | 0.00 | - | - | - | - | - | - |
| கொழும்பு (அவிசாவளை) | 16.90 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கொழும்பு (கொழும்பு) | - | *2.35* | 29.78 | - | - | - | - | - | 0.00 | - | 13.75 | 39.86 |
| கொழும்பு (மருதானை) 1 | - | - | - | - | - | 31.78 | - | - | - | - | - | - |
| கொழும்பு (மருதானை) 2 | - | - | - | - | - | 2.96 | - | - | - | - | - | - |
| கொழும்பு (வெள்ளவத்தை) | - | - | - | - | - | - | 50.16 | - | - | - | - | - |
| காலி (காலி) | 34.50 | - | 1.00 | - | - | 8.20 | 0.00 | - | 0.79 | - | 4.65 | - |
| காலி (மீட்டியாகொட) | - | *3.51* | - | - | - | - | - | - | - | - | - | - |
| கம்பஹா (கம்பஹா) | 0.60 | *13.51* | - | - | - | 35.47 | 49.07 | - | 45.12 | - | 21.61 | 27.09 |
| கம்பஹா (நீர்கொழும்பு) | 15.80 | - | - | - | - | - | - | - | - | - | 48.58 | 1.55 |
| கம்பஹா (களனி) 1 | - | - | - | - | - | - | - | - | - | - | 0.65 | - |
| கம்பஹா (களனி) 2 | - | - | - | - | - | - | - | - | - | - | 18.70 | - |
| களுத்துறை (களுத்துறை) | 0.30 | - | - | - | - | 0.00 | 50.25 | - | 39.11 | 54.00 | - | - |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கண்டி (கண்டி) | - | *16.85* | - | - | - | - | 52.47 | | 23.79 | - | - | 43.08 |
| கேகாலை (கேகாலை) | | | | | | | | | | | 13.17 | 11.48 |
| கேகாலை (கேகாலை) 1 | | | | | | | | | | - | - | - |
| கேகாலை (கேகாலை) 2 | | | | | | | | | | - | - | - |
| கேகாலை (மாவனல்லை) | 19.10 | | | | | | | | | - | - | - |
| குருணாகல் (குருணாகல்) | - | - | - | - | - | 0.00 | 44.04 | - | 21.15 | - | 21.22 | 40.90 |
| குருணாகல் (மஹவை) | 22.80 | - | - | - | - | - | | | | | | |
| பொலனறுவை (பொலனறுவை) | | | | | | | | | | | 49.79 | |
| புத்தளம் (சிலாபம்) | - | *11.86* | - | - | - | 11.24 | 55.35 | - | 40.16 | - | - | 73.14 |
| புத்தளம் (சிலாபம்) 1 | - | - | 26.01 | - | - | | | | | | | |
| புத்தளம் (சிலாபம்) 2 | - | - | 28.51 | - | - | | | | | | | |
| புத்தளம் (புத்தளம்) | - | - | - | - | - | 31.73 | 34.79 | | 32.58 | | | |
| இரத்தினபுரி (எஹலியகொடை) | - | - | - | - | - | - | 51.86 | - | | | | |
| இரத்தினபுரி (இரத்தினபுரி) | | | | | | | 31.40 | | | | 13.63 | 12.50 |
| சராசரி | 15.73 | 5.34 | 8.79 | - | - | 16.90 | 43.10 | - | 29.53 | - | 23.61 | 27.73 |

*தூய ஹெரோயின் 1 மில்லி கிராமின் சராசரி விலை 129.21 ரூபாவிலிருந்து 2,206.57 ரூபா என்ற வீச்சில் மாற்றமடைந்துள்ளது. உச்சவிலை அக்டோபர் மாதத்தில் பதிவாகியுள்ளது. தூய ஹெரோயின் 1 மில்லி கிராமின் விலை பல்வேறு பகுதிகளில் மாற்றமடையும் விதத்தை அட்டவணை இல. 03 காட்டுகிறது.*

## அட்டவணை இல. 03 -
## "தெரு" ஹெரோயின் மாதிரி வகைகளின் விலையும் தூய்தான தன்மையும்
*(டை எசட்டைல் மோர்.:.பீன் மில்லி கிராம் ஒன்றுக்கான விலை ரூபாய்களில்)*

| பிரதேசம் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் (அநுராதபுரம்) | | | 7073.30 | | | | | | 161.99 | | | |
| அநுராதபுரம் (அநுராதபுரம்) 1 | | | | | | 194.22 | | | | | | |
| அநுராதபுரம் (அநுராதபுரம்) 2 | | | | | | | | | | | | |
| கொழும்பு 1 (அவிசாவளை) | 490.24 | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு (கொழும்பு) | | 1396.35 | 185.51 | | | | | | 0.00 | | | 39.79 |
| கொழும்பு (மருதானை) 1 | | | | | | 17.36 | | | | | | |
| கொழும்பு (மருதானை) 2 | | | | | | 448.43 | | | | | | |
| கொழும்பு (வெள்ளவத்தை) | | | | | | | 65.8 | | | | | |
| கொழும்பு (கொழும்பு) | - | - | - | - | - | - | - | - | - | - | 149.60 | - |
| காலி (காலி) | 61.88 | | 734.41 | | | 308.4 | | | 2036.18 | | 817.02 | |
| காலி (மீட்டியாகொட) | - | 313.68 | - | - | - | - | | - | - | - | - | - |
| கம்பஹா (கம்பஹா) | 3572.19 | 82.86 | - | - | - | 79.12 | 149.67 | - | 45.32 | - | 89.12 | 84.02 |
| கம்பஹா (களனி) 1 | - | - | - | - | - | - | - | - | - | - | 711.25 | - |
| கம்பஹா (களனி) 1 | - | - | - | - | - | - | - | - | - | - | 47.84 | - |
| கம்பஹா (நீர்கொழும்பு) 2 | 162.1 | - | - | - | - | - | - | - | - | - | 46.94 | 214.43 |
| களுத்துறை (களுத்துறை) | 10875.63 | - | - | - | - | - | 138.44 | - | 52.80 | - | 35.09 | - |
| கண்டி (கண்டி ) | - | 539.63 | - | - | - | - | 137.99 | - | 46.45 | - | - | 188.80 |
| கேகாலை (கேகாலை) | - | - | - | - | - | - | - | - | - | - | 309.90 | 583.34 |
| கேகாலை (கேகாலை) 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கேகாலை (கேகாலை) 2 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கேகாலை (மாவனெல்லை) | 211.64 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| குருணாகல் (மஹவை) | 72.29 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| குருணாகல் (குருணாகல்) | - | - | - | - | - | - | 213.77 | - | 47.63 | - | 69.81 | 87.70 |
| பொலன்னறுவை (பொலன்னறுவை) | - | - | - | - | - | - | - | - | - | - | 108.57 | - |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| புத்தளம் (சிலாபம்) | | 38.91 | | | | 246.02 | 30.97 | | 72.93 | | | 15.22 |
| புத்தளம் (சிலாபம்) 1 | | | 26.38 | | | | | | | | | |
| புத்தளம் (சிலாபம்) 2 | | | 23.43 | | | | | | | | | |
| புத்தளம் (புத்தளம்) | | | | | | 86.95 | 178.69 | | 171.58 | | | |
| இரத்தினபுரி (எஹலியகொட) | - | - | - | - | - | - | 118.35 | - | - | - | - | - |
| இரத்தினபுரி (இரத்தினபுரி) | | | | | | 55.2 | | | | | 222.00 | 429.80 |
| சராசரி | 2206.57 | 474.28 | 767.58 | - | - | 130.52 | 129.21 | | 329.36 | - | 237.01 | 182.57 |

### "தெரு" ஹெரொயின் மாதிரி வகைகளிலுள்ள அல்கொலொயிட் வகை அசுத்தப் பதார்த்தங்கள், கலவையின் செறிவு தளர்த்தும் பதார்த்தங்கள்/ வேறு கலப்படப் பதார்த்தங்களை அடையாளம் காண்பதற்கு மேற்கொள்ளப்படும் பகுப்பாய்வுகள்

தெரு ஹெரொயின் மாதிரி வகைகளின் பகுப்பாய்வுச் சட்டகத்தில் போதையூட்டும் ஔடதத்தின் தரம், அதேபோல் ஆரம்பப் பிரதேசங்கள், மாதிரி வகைகள் ஒவ்வொன்றுக்கும் இடையிலான தொடர்பு என்பன தெரிய வருகின்றன.

எவ்வாறாயினும், மிகவும் அர்த்தமுள்ள முடிவுகளுக்கு வர முடியாதுள்ளமைக்குரிய காரணம், போதிய எண்ணிக்கையில் மாதிரி வகைகள் கிடைக்காமை, ஒரே பிரதேசத்திலிருந்து உரிய மாதிரி வகைகள் கிடைக்காமை ஆகியனவாகும். இதன் காரணமாக, எதிர்பார்த்த குறிக்கோளை பூரணமாக அடைந்துகொள்ள முடியாதுள்ளது.

பிரதானமான அல்கொலொயிட் வகை அசுத்தப் பதார்த்தங்கள் (Alkaloidal Impurities) மிகச் சொற்ப அளவுகளில் Gas Chromatography Mass Spectrometer தொழில்நுட்பத்தின்கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளன. அட்டவணை இல. 04, 05 ஆகியவற்றில் அவ்விபரங்கள் தரப்பட்டுள்ளன.

அட்டவணை இல. 04 -

**"தெரு" ஹெரொயின் மாதிரி வகைகளில் காணக்கூடிய அல்கொலொயிட் வகை அசுத்தப் பதார்த்தங்கள்**

| பிரதேசம் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் (அநுராதபுரம்) | - | - | MOR<br>6-AC<br>6-MAM | - | - | - | - | - | MOR-6-ol<br>6-MAM<br>PAP | - | - | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் (அநுராதபுரம்) 1 | - | - | - | - | - | MOR ,6-MAM COD | - | - | - | - | - | |
| அநுராதபுரம் (அநுராதபுரம்) 2 | - | - | - | - | - | MOR ,6-MAM COD | - | - | - | - | - | |
| கொழும்பு (அவிசாவளை) | THE MOR 6-AC 6-MAM | - | - | - | - | - | - | - | - | - | - | |
| கொழும்பு (கொழும்பு) | - | - | MOR, 6-AC, 6-MAM | - | - | - | - | - | MOR COD 6-MAM 6-AC | - | 6-MAM COD NOS | MEC MAM 6-AC PAP NOS |
| கொழும்பு (மருதானை) 1 | - | - | - | - | - | MOR 6-MAM COD | - | - | - | - | - | |
| கொழும்பு (மருதானை) 2 | - | - | - | - | - | 6- AC 6-MAM | - | - | - | - | - | |
| கொழும்பு (வெள்ளவத்தை) | - | - | - | - | - | | PAP COD 6-MAM ATH | - | - | - | - | |
| காலி (காலி) | MOR 6-AC 6-MAM | - | 6-AC, 6-MAM | - | - | COD 6-MAM | - | - | - | - | 6-MAM COD | None |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலி (மீட்டியாகொட) | - | - | - | - | - | | - | - | - | - | | |
| கம்பஹா (கம்பஹா) | 6-AC | 6-AC<br>6-MAM | - | - | - | 6-AC<br>6-MAM | PAP<br>COD<br>6-MAM<br>ATH<br>NOS | - | 6-MAM<br>MOR-6-ol | - | 6-MAM<br>COD | MEC<br>MAM<br>6-AC<br>NOS |
| கம்பஹா (களனி) 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | |
| கம்பஹா (களனி) 2 | - | - | - | - | - | - | - | - | - | - | NOS<br>COD | |
| கம்பஹா (நீர்கொழும்பு) | 6-AC<br>6-MAM | - | - | - | - | - | - | - | - | - | 6-MAM<br>COD<br>NOS | MAM<br>6-AC |
| களுத்துறை (களுத்துறை) | - | - | 6-AC<br>6-MAM | - | - | 6-MAM<br>COD | 6-MAM<br>ATH<br>COD<br>PAP | - | 6-MAM<br>6-AC<br>NOS | - | 6-MAM<br>COD | |
| கண்டி (கண்டி) | - | 6-AC<br>6-MAM<br>MOR | - | - | - | - | PAP<br>COD<br>6-MAM<br>ATH<br>NOS | - | NOS<br>6-MAM<br>MOR-6-ol | - | - | MAM<br>6-AC<br>NOS |
| கேகாலை (கேகாலை) | - | - | - | - | - | - | - | - | | | NOS | MEC<br>MAM<br>6-AC<br>NOS |
| கேகாலை (கேகாலை) 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கேகாலை (கேகாலை) 2 | - | - | - | - | - | - | - | - | - | - | - | |
| கேகாலை (மாவனல்லை) | 6-AC 6-MAM | - | - | - | - | - | - | - | - | - | - | |
| குருணாகல் (குருணாகல்) | - | 6-AC 6-MAM | - | - | - | COD 6-MAM | PAP COD 6-MAM ATH NOS | - | 6-MAM 6-AC | | 6-MAM COD NOS | MAM 6-AC NOS |
| குருணாகல் (மஹவை) | THE MOR 6-AC 6-MAM | - | - | - | - | - | - | - | - | - | - | |
| பொலன்னறுவை (பொலன்னறுவை) | - | - | - | - | - | - | - | - | - | - | 6-MAM COD | |
| புத்தளம் (சிலாபம்) | - | 6-AC 6-MAM | - | - | - | 6-MAM | PAP COD 6-MAM ATH NOS | - | 6-AC 6-MAM NOS | - | - | MAM 6-AC |
| புத்தளம் (சிலாபம்) 1 | - | - | 6-AC 6-MAM | - | - | - | - | - | - | - | - | |
| புத்தளம் (சிலாபம்) 2 | - | - | 6-AC 6-MAM NOS | - | - | - | - | - | - | - | - | |
| புத்தளம் (புத்தளம்) | - | - | - | - | - | COD 6-MAM | PAP COD 6-MAM ATH NOS | - | 6-AC 6-MAM NOS | - | - | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி (எஹலியகொட) | - | - | - | - | - | - | COD<br>6-MAM<br>ATH<br>NOS | - | - | - | - | |
| இரத்தினபுரி (இரத்தினபுரி) | - | 6-AC<br>6-MAM | - | - | - | 6-MAM<br>COD | - | - | - | - | 6-MAM<br>COD<br>NOS | MAM<br>6-AC<br>NOS |

***MOR*** *- Morphine ;* ***AC*** *– Acetylcodeine ;* ***MAM*** *– 6-Acetylmorphine;* ***ATH****-Acetylthebeol ;* ***THE*** *– Thebaine ;* ***PAP*** *– Paperverine ;*
***NOS*** *– Noscapine,* ***COD*** *– Codeine,* ***PAP*** *– Papaverine,****HC*** *–Hydrocotarnine,* ***MEC*** *–Meconine,*
***AHE****- Anhydroecgoninemethyl ester,* ***MEG*** *– Methyecgonine,* ***PEG****-Pseudoecgoninemethyl ester*

## அட்டவணை இல. 05 -
## "தெரு" ஹெரோயின் மாதிரி வகைகளில் அடையாளம் காணப்பட்ட கலப்படப் பதார்த்தங்களும் *(Adulterants)* கலவையின் செறிவுதளர்த்தும் பொருள்களும் *(Diluents)*

| பிரதேசம் | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் (அநுராதபுரம்) | - | - | CAF | - | - | - | - | - | CAF<br>DIZ | - | - | - |
| அநுராதபுரம் (அநுராதபுரம்) 1 | - | - | - | - | - | ACT | - | - | - | - | - | - |
| அநுராதபுரம் (அநுராதபுரம்) 2 | - | - | - | - | - | CAF<br>ACT | - | - | - | - | - | - |
| கொழும்பு (அவிசாவளை) | CAF<br>ACT | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கொழும்பு (கொழும்பு) | - | - | CAF | - | - | - | - | - | CAF<br>ACT | - | CAF<br>DIZ<br>ACT | CAF<br>ACT |
| கொழும்பு (மருதானை) 1 | - | - | - | - | - | CAF | - | - | - | - | - | - |
| கொழும்பு (மருதானை) 2 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கொழும்பு (வெள்ளவத்தை) | - | - | - | - | - | - | CAF<br>ACT | - | - | - | - | - |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலி (காலி) | - | - | CAF | - | - | CAF DIZ | - | - | - | - | - | ACT |
| காலி (மீட்டியாகொட) | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கம்பஹா (கம்பஹா) | CAF ACT | - | ACT | - | - | CAF | CAF ACT | - | CAF | - | CAF DIZ ACT | CAF ACT |
| கம்பஹா (நீர்கொழும்பு) | CAFD IZ | - | - | - | - | - | - | - | - | - | CAF | CAF ACT |
| கம்பஹா (களனி) 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கம்பஹா (களனி) 2 | - | - | - | - | - | - | - | - | - | - | CAF | - |
| களுத்துறை (களுத்துறை) | ACT | - | CAF | - | - | CAF ACT | CAF | - | CAF DIZ ACT | - | - | - |
| கண்டி (கண்டி) | - | CAF | ACT | - | - | - | CAF | - | CAF ACT | - | - | CAF ACT |
| கேகாலை (கேகாலை) | - | - | - | - | - | - | - | - | - | - | CAF ACT | CAF ACT |
| கேகாலை (கேகாலை) 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கேகாலை (கேகாலை) 2 | - | CAF | - | - | - | - | - | - | - | - | - | - |
| கேகாலை (மாவனெல்லை) | CAFD IZ | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| குருணாகல் (மஹவை) | CAF | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| குருணாகல் (குருணாகல்) | - | CAF | CAF | - | - | CAF BZO | CAF DIZ | - | CAF DIZ | - | CAF DIZ ACT | CAF ACT |
| பொலனறுவை (பொலனறுவை) | - | - | - | - | - | - | - | - | - | - | CAF ACT | - |
| புத்தளம் (சிலாபம்) | - | - | - | - | - | CAF DIZ | CAF | - | CAF DIZ | - | - | - |
| புத்தளம் (சிலாபம்) 1 | - | - | CAF DIZ | - | - | - | - | - | - | - | - | - |
| புத்தளம் (சிலாபம்) 2 | - | - | CAF DIZ | - | - | - | - | - | - | - | - | - |
| புத்தளம் (புத்தளம்) | - | - | CAF | - | - | ACT | CAF DIZ | - | DIZ CAF | - | - | - |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி (எஹலியகொட) | - | - | - | - | - | - | CAF | - | - | - | - | - |
| இரத்தினபுரி (இரத்தினபுரி) | - | CAF | - | - | - | CAF | - | - | - | - | CAF<br>DIZ<br>ACT | CAF<br>ACT |

***ACT** – Acetaminophen, **CAF**-Caffeine, **DIZ** – Diazepam*

## 1.2 ஏனைய ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள்

### தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் ஔடதங்களும் உளமருட்சியை உண்டுபண்ணும் வெறியப் பொருள்களும் சம்பந்தமான தற்போது இடம்பெற்றுவரும் ஆராய்ச்சிகள்

போதையூட்டும் ஔடதங்கள் என்ற சந்தேகத்திற்கிடமான பதார்த்தங்களை அடையாளம் காண்பதற்கு சட்ட வினைப்படுத்துகை உத்தியோகத்தர்களினால் முன்வைக்கப்படும் மாதிரிவகைகள்மீது தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் ஔடதங்கள் ஆய்வுகூடத்தினால பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எம்பெட்டமின், மெத்எம்பெட்டமின், மெதிலீன்டயொக்சி மெத்எம்பெட்டமின் (MDMA) மற்றும் லைசர்ஜிக் எசிட் டை எதில் எமைட் (LSD) ஆகிய போதையூட்டும் ஔடதங்கள் இதனிடையே உள்ளனவா என்பதை அடையாளம் காண்பது இதன் முக்கிய நோக்கமாகும். இவற்றின் ஊடாக அடையாளம் காணப்படும் ஏனைய கழிவுச் சேர்மானங்களதும் இரசாயனங்களதும் கூறுகளை அடையாளம் காண்பதன்மூலம் இவற்றை உற்பத்திசெய்வதற்குப் பயன்படுத்தப்படும் வேறுபட்ட இரசாயன முறைகளையும் பயன்படுத்தும் இரசாயனப் பதார்த்தங்களையும் அடையாளம் காண்பதும் விசேடமாக இலக்கிடப்படுகிறது.

### விளையாட்டின்போது பயன்படுத்தப்படும் தடைசெய்யப்பட்ட செயலூக்க மருந்துகளுக்காக (Controlled/Prohibited Substances) செய்யப்படும் ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள்

தடைசெய்யப்பட்ட செயலூக்க மருந்துகளைப் பாவிப்பதன் காரணமாக விளையாட்டுத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலைக்கு மிகத் துரிதமாக பதில்குறிகாட்டி காண்பிப்பது முக்கியமானதாகும். இலங்கை, இந்நெருக்கடிக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கும் பொருட்டு தேசிய விளையாட்டு வைத்திய நிறுவகத்துடன் இணைந்து விளையாட்டு வீர வீராங்கனைகளின் ஊக்க மருந்துப் பாவனை மற்றும் துஷ்பிரயோகத்தின் அடிப்படையில் தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் பதார்த்தங்களின் ஆய்வுகூடத்தினால் பின்வரும் ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

உலக தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனத்தினால் தடைவிதிக்கப்பட்டுள்ள ஊக்க மருந்துகளை அடையாளம் கண்டு, அதன்மூலம் தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்துப் பாவனை சம்பந்தமாக விளையாட்டு வீர வீராங்கனைகளை அறிவுறுத்துவதற்கான தடுப்புக் கல்வி மற்றும் தடுப்பு பற்றிய புதிய உபாயமுறைகளை விருத்திசெய்வதற்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் இத்தகைய பகுப்பாய்வுகளின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது.

### அற்கஹோல் பற்றிய ஆராய்ச்சிகள்

இலங்கையில் பரவலாக பயன்படுத்தப்படும் பியர் மாதிரிகளில் அடங்கியுள்ள அற்கஹோல் சதவீதங்களை சரியான முறையில் அடையாளம் காண்பதற்காக முடுக்கிவிடப்பட்டுள்ள ஆராய்ச்சிக் கருத்திட்டங்களுக்கு மாதிரி வகைகளின் பகுப்பாய்வை மேற்கொண்டு இக்கருத்திட்டம் மேலும் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

**கொக்கைன், கொக்கைன் மூலத்திலிருந்து வருவிக்கப்பட்ட (Derivatives) போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய ஆராய்ச்சிகள்**

கொக்கைன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகள் கொக்கைன் மற்றும் அதன் மூலத்திலிருந்து வருவிக்கப்பட்ட போதையூட்டும் ஔடதங்களை அடையாளம் காண்பதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. அதேபோல், போதையூட்டும் ஔடத பண்புரு வருணனைசார் (Drug Charaterization) ஆய்வுகள் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களினால் வழங்கப்படும் கொக்கைன் என சந்தேகிக்கப்படும் மாதிரிகளுக்காக மேற்கொள்ளப்படுகிறது.

**இலங்கையில் முதல் தடவையாக சைலொசின் (Psilocin) அடங்கிய சொக்கொலட் உற்பத்திகள் பற்றி கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி**

புலனாய்வுத்துறை ஊடாக இலங்கை பொலிஸ் அதிரடிப்படைமூலம் சந்தேகத்திற்கிடமான சொக்கொலட் மாதிரியொன்று பகுப்பாய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. இதில் ‘சைலொசின்’ எனும் போதையூட்டும் பதார்த்தம் அடங்கியிருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இது இலங்கையில் முதல் தடவையாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அது சம்பந்தமான ஆராய்ச்சிகளின் அடிப்படை அறிக்கை 2016 ஆகஸ்ட் 27 ஆந் திகதி சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆண்டு அமர்வின்போது ‘Detection of Psilicin in Chocolates: Appearance for the First time in Sri Lanka’ சுருக்க அறிக்கையாக பகிரங்கப்படுத்தப்பட்டது.

**2. துஷ்பிரயோக போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்துமுகமாக சட்ட வினைப்படுத்துகைக்கான நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட ஏனைய அதிகாரம் பொருந்திய நிறுவனங்களுக்கு அவசியமான விஞ்ஞான ரீதியான உதவிகளை வழங்குதல்**

**2.1 சந்தேகத்திற்கிடமான போதையூட்டும் ஔடதங்களின்/ ஔடதங்களின் பகுப்பாய்வு**

2016 ஆம் ஆண்டில் 30 நிகழ்வுக்கூறுகளில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின்படி போதையூட்டும் ஔடதங்கள் எனச் சந்தேகிக்கப்படும் 78 மாதிரி வகைகளுக்கான பகுப்பாய்வுகள் NNL இனால் மேற்கொள்ளப்பட்டன.

தேசிய மற்றும் ஏனைய பொறுப்புவாய்ந்த நிறுவனங்களுடன் பகிர்ந்துகொண்டு போதையூட்டும் ஔடதப் பிரச்சினை பற்றிய பல்வேறு நடவடிக்கைகள், புதிய போக்குகள் பற்றி பகுப்பாய்வுசெய்தல், உபாயமுறை ரீதியான பகுப்பாய்வுகள், சட்டக் கொள்கைப் பகுப்பாய்வு, சட்ட மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்ளல், நோக்கங்களை அடைந்துகொள்ளல் ஆகிய விடயங்களுக்காக மேற்படி பகுப்பாய்வுப் பெறுபேறுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாட்டின் சட்டங்களை வலுப்படுத்துதல், குற்றத்தடுப்பு மற்றும் சுகாதாரக் கொள்கை வகுப்பு ஆகியவற்றுக்கு அவசியமான விஞ்ஞான ரீதியான அம்சங்கள் இத்தகவல்களில் அடங்கும்.

நச்சுத்தன்மைவாய்ந்த அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழும் 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் ஔடதங்களதும் உளமருட்சியை உண்டுபண்ணும் பதார்த்தங்களதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டத்தின்கீழும், NNL மூலம் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளினால் ஆய்வுகூடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட போதையூட்டும் ஔடதங்கள் எனச் சந்தேகிக்கப்படும் மாதிரி வகைகளின் ஆராய்ச்சிபூர்வ பகுப்பாய்வின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கைகளின் விபரம் கீழ்த் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை இல. 06 – போதையூட்டும் ஔடதங்கள் என்ற சந்தேகத்தின்பேரில் 2016 ஆம் ஆண்டில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாதிரி வகைகளின் எண்ணிக்கைகள்

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை பொலிஸ்/ பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம் | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | 01 | 01 | 01 | | | 01 | | 02 | | | 01 | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | 02 | 01 | 03 | | | 01 | | 02 | | | 02 | |
| இலங்கை கடற்படை | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | | | | | | 01 | | | | | | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | | | | 01 | | | | | | |
| விசேட அதிரடிப் படை | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | | 01 | | | | | | | 01 | | | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | 01 | | | | | | | 02 | | | |
| இலங்கைச் சுங்கம் | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | | | 01 | | 02 | | | 01 | 01 | 01 | | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | 01 | | 09 | | | 01 | 01 | 02 | | |
| இலங்கை சிறைச்சாலைத் திணைக்களம் | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | | | | | | | | | 01 | | | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | | | | | | | 04 | | | |
| நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | | | 01 | | | | | | | | | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | 01 | | | | | | | | | |
| இலங்கை மதுவரித் திணைக்களம் | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | | 01 | | | | | | | | | | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | 07 | | | | | | | | | | |
| நீதவான் நீதிமன்றம், மாளிகாகந்தை | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | | 01 | | 01 | | | | | | | | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | 01 | | 06 | | | | | | | | |
| தே.அ.ஔ.க. சபை | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | | | 01 | | | 03 | | | | | 02 | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | 01 | | | 03 | | | | | 02 | |
| வேறு | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | 02 | 01 | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | | | | | | | | 12 | 12 | |
| மொத்தம் | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | 01 | 04 | 04 | 01 | 02 | 05 | | 03 | 03 | 03 | 04 | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | 02 | 10 | 06 | 06 | 09 | 05 | | 03 | 07 | 14 | 16 | |

*நிகழ்வுக்கூறுகளின் மொத்த எண்ணிக்கை : 30*
*மாதிரி வகைகளின் மொத்த எண்ணிக்கை : 78*

## 2.2 அற்கஹோல் மாதிரி வகைகளின் பகுப்பாய்வு

ஆராய்ச்சி அடிப்படையில் NNL மூலம் மேற்கொள்ளப்படும் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஊடாக அனுப்பிவைக்கப்படும் அற்கஹோல் பகுப்பாய்வின் மூலம் அவற்றில் அடங்கியிருக்கும் மெதனோல் மற்றும் ஏனைய சேர்மானங்கள் குறித்த அறிக்கையின் விபரங்கள் கீழ் தரப்பட்டுள்ளன. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட 16 நிகழ்வுக்கூறுகளுக்குரிய 67 மாதிரி வகைகளின் பகுப்பாய்வு விபரம் வருமாறு:

அட்டவணை இல. 07 -
2016 ஆம் ஆண்டில் பகுப்பாய்வுசெய்யப்பட்ட மாதிரி வகைகளின் எண்ணிக்கை

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை மதுவரித் திணைக்களம் | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | | 02 | | 03 | 02 | | 01 | 01 | 01 | 01 | 01 | 02 |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | 05 | | 09 | 11 | | 01 | 10 | 01 | 01 | 10 | 11 |
| மத்திய ஊழல் ஒழிப்புப் பிரிவு, வலான, பாணந்துறை | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | 01 | | 01 | | | | | | | | | |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | 01 | | 07 | | | | | | | | | |
| மொத்தம் | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | 01 | 02 | 01 | 03 | 02 | | 01 | 01 | 01 | 01 | 01 | 02 |
| | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | 01 | 05 | 07 | 09 | 11 | | 01 | 10 | 01 | 01 | 10 | 11 |

*நிகழ்வுக்கூறுகளின் மொத்த எண்ணிக்கை : 16*
*மாதிரி வகைகளின் மொத்த எண்ணிக்கை : 67*

## 2.3 களப் பரிசோதனைக் கருவிகலத்தொகுதிகளின் செயற்பாட்டை உறுதிசெய்தலும் மீள்நிரப்புதலும்

07 களப் பரிசோதனைக் கருவிகலத்தொகுதிகள், பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகமும் இலங்கைச் சுங்கமும் மூலம் செயற்பாட்டு குறித்த பரிசோதனைக்காக நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன், அவை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இரசாயன மீள்நிரப்பலுடன் மீளமைக்கப்பட்டன. அவற்றின் விபரம் வருமாறு:

| நிறுவனம் | களப் பரிசோதனைக் கருவிகலத்தொகுதி வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம் | தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் இரசாயனங்களை பிரித்தறியும் கருவிகலத்தொகுதிகள் | 02 |
| இலங்கைச் சுங்கம் | தூக்கமயக்கத்தை உண்டுபண்ணும் இரசாயனங்களை பிரித்தறியும் கருவிகலத்தொகுதிகள் | 03 |

| | | |
|---|---|---|
| | முன்னோடி இரசாயனங்களை பிரித்தறியும் கருவிகலத்தொகுதிகள் | 02 |
| மொத்தம் | | 07 |

### 2.4 களப் பரிசோதனை கருவிகலத்தொகுதிகளின் செயற்பாட்டை உறுதிசெய்தலும் மீள ஒழுங்கமைத்தலும்

**போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணைகள் முடிவடைந்த போதையூட்டும் ஔடத கையிருப்புகளை அழித்துவிடுவதற்கு இறுதி விஞ்ஞான ரீதியான உறுதிப்படுத்தல்.**

ஜனவரி மாதத்தில் இல.03 கனம் மேல்நீதிமன்ற நீதிபதி அவர்களின் அறிவித்தலின் பேரில் வழக்குகளுக்குரிய வழக்கு விசாரணைகள் முடிவடைந்த போதையூட்டும் ஔடதங்களை அழித்துவிடுவதற்கு இறுதியாக விஞ்ஞான ரீதியான உறுதிப்படுத்தல் செயன்முறைக்கு போதையூட்டும் ஔடதங்களை அழிக்கும்போது NNL ஆய்வுகூடத்தின் விஞ்ஞான பணியாள்தொகுதியினரின் உதவி வழங்கப்பட்டது.

## 3. போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்தும் துறையுடன் சம்பந்தப்பட்ட சட்ட வினைப்படுத்துகை அதிகாரசபைகளுக்கும் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்குமான வினைத்திறன்சார் மற்றும் அறிவு விருத்திசார் நிகழ்ச்சித்திட்டம்

கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ஔடதங்களதும் முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களதும் இறக்குமதி, ஏற்றுமதி, விநியோகம் ஆகிய விடயங்களில் இதனுடன் செயலாற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் அறிவை விருத்திசெய்வதற்கும் ஆராய்ச்சி ஆற்றலை விஞ்ஞானரீதியான தோற்றச் சாயல்கள் மீதான விழிப்பூட்டும் பயிற்சி அமர்வுகளை NNL முன்னெடுக்கிறது. இங்கு, துஷ்பிரயோக ஔடதங்களை அடையாளம் காண்பதற்கு சட்ட வினைப்படுத்துகை நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் விசேடமாக பயிற்றுவிக்கப்படுகின்றனர். போதையூட்டும் ஔடதங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்கும் இவ்வாறான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள் அமுல்படுத்தப்பட்டது.

### 3.1 விஞ்ஞான ரீதியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள்

“இலங்கையில் சட்டவிரோத ஔடதங்களை அடையாளம் காணும், முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களைக் கட்டுப்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட சட்டவினைப்படுத்துகை ஆற்றல்களை விருத்திசெய்தல்” என்ற தொனிப்பொருளில் இரு நாள் விஞ்ஞான பயிற்சி நிகழ்சித்திட்டம் NNL இனால் ஒழுங்குசெய்யப்பட்டது. இப்பயிற்சிச் செயலமர்வின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் வருமாறு:

1. தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள், உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள், முன்னோடி இரசாயனங்கள் என்பவற்றின் சட்டவிரோத கடத்தல் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.

2. தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள், உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள், முன்னோடி இரசாயனங்கள் என்பன சம்பந்தமான விரிவான அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.

3. தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள், உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்கள், முன்னோடி இரசாயனங்கள் என்பவற்றை பிரித்தறிவதற்கான களப் பரிசோதனைக் கருவிகலத்தொகுதிகளை உபயோகித்து பிரயோக ரீதியான அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.

4. போதையூட்டும் ஔடதங்களின் நவீன விதங்கள் சம்பந்தமாக பங்குபற்றுவோரின் அறிவை இற்றைவரைப்படுத்தல்.

### 3.2 பிற நிறுவனங்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

நாட்டில் மருந்தகங்களில் விற்பனைசெய்யப்படும் போதையை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்களை துஷ்பிரயோகம்செய்வது சம்பந்தமான விஞ்ஞானரீதியான பகுப்பாய்வுகளும் விளக்கங்களும் காலத்திற்கேற்ப மிகவும் முக்கியத்துவம் வகிக்கின்றன. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்தின் உளவியல் வைத்தியப் பிரிவின் மாணாக்கர்களுக்கு இது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடராக நடத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி மற்றும் சான்றிதழ் கற்கைநெறியைத் தொடரும் மாணாக்கர்களுக்கும் விசேட விரிவுரைகளும் பயிற்சி அமர்வுகளும் ஒழுங்குசெய்யப்பட்டன.

2016 ஆம் ஆண்டில் ஒழுங்குசெய்யப்பட்ட அத்தகைய செயலமர்வுகளின் விபரம் அட்டவணை இல. 08 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை இல. 08 -

2016 ஆம் ஆண்டில் ஒழுங்குசெய்யப்பட்ட பயிற்சிகளின்/ பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | 01 | 01 | 01 | 01 | 01 | | 02 | 01 | | 01 | 01 |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | 18 | 20 | 20 | 21 | 20 | | 39 | 18 | | 17 | 18 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான பீடம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | | 01 |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | | | | | | 31 |
| இலங்கை கடற்படை | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | 02 | 04 | | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | 98 | 194 | | | | | | | | | |
| இலங்கை பொலிஸ் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | 01 | | 01 | | 01 | 01 | 01 | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | 44 | | 56 | | 41 | 29 | 53 | | |
| இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | 01 | 01 | | 01 | 01 | | | | | | 01 |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | 37 | 40 | | 38 | 35 | | | | | | 42 |
| மதுவரித் திணைக்களம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | 01 | | 01 | 02 | 02 |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | 79 | 92 | | 41 | 83 | 69 |
| தேசிய மாணவர் பயிலிளவல் சிறப்பணி (இலங்கை) | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 01 | | | | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | 50 | | | | | | | | | | | |
| போதையூட்டும் ஔடத முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறியைத் தொடரும் மாணாக்கர்கள் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 01 | | | | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | 35 | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| போதையூட்டும் ஔடத முகாமைத்துவ சான்றிதழ் கற்கைநெறியைத் தொடரும் மாணாக்கர்கள் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 02 | | 01 | | 01 | | 02 | 02 | | | 02 | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | 49 | | 26 | | 37 | | 87 | 70 | | | 66 | |
| இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | 13 | | | | | |
| சிறைச்சாலைத் திணைக்களம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | 01 | 01 | 01 | 01 | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | 38 | 40 | 40 | 42 | | | | | |
| தொழில்நுட்ப மற்றும் மருத்துவவியல் நிறுவகம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | 01 | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | 04 | | | | | | |
| சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களின் தாதியர்கள் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | | | | | | |
| மருந்துக் கலவையாளர்களுக்கான போதையூட்டும் ஔடத தடுப்பு மற்றும் பயிற்சி | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | | 01 |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | | | | | | 50 |
| மொத்தம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | 04 | 04 | 07 | 03 | 04 | 05 | 05 | 06 | 02 | 02 | 05 | 06 |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | 134 | 153 | 280 | 102 | 136 | 155 | 221 | 242 | 47 | 94 | 166 | 210 |

*பயிற்சிச் செயலமர்வுகளின் மொத்த எண்ணிக்கை : 53*
*பங்குபற்றியோரின் மொத்த எண்ணிக்கை : 1940*

### 3.3 போதையூட்டும் ஔடதங்களுடன் சம்பந்தப்பட்ட சட்டவினைப்படுத்துகை உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் கணினிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை (NDDCB), ஐ.நா. போதையூட்டும் ஔடதங்களையும் குற்றச்செயல்களையும் தடுக்கும் அலுவலகம் (UNODC) ஆகியவற்றின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தப்பட்ட சட்டவினைப்படுத்துகை இயல்திறன்களைப் பலப்படுத்தும் நோக்கில் கணினிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.

பின்வரும் துறைகளுடன் சம்பந்தப்பட்ட பரந்த அறிவைப் பெற்றுக்கொடுப்பதன்மூலம் சட்டவினைப்படுத்துகை செயற்பாடுகளின் இயல்திறனைப் பலப்படுத்துவதே இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும்.

- கடல், ஆகாய, பூமி எல்லைகள் ஊடாக இடம்பெறும் போதையூட்டும் ஔடதக் கடத்தலைத் தடுத்து நிறுத்துதல்.
- கண்காணிப்பு நுட்பமுறைகள்.
- கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ஔடதங்களின் விநியோகம்.
- இடர் முகாமைத்துவம்.
- போதையூட்டும் ஔடதங்களை அடையாளம் காணலும் பரிசோதனை நடவடிக்கைகளும்.

எவ்வாறாயினும், இந்நிகழ்ச்சித்திட்டங்கள் புதிய உள்ளடக்கங்களைக் கொண்டவையாக அமைந்திருந்ததுடன், e-கல்வி மொடியூல்கள் சிங்களமொழி மூலம் 32, ஆங்கிலமொழி மூலம் 86 என்ற அடிப்படையில் இற்றைவரைப்படுத்தப்பட்டன. போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமான சட்ட வினைப்படுத்தலுக்கு இந்நிகழ்ச்சித்திட்டங்கள் இன்றியமையாதனவாக இருப்பதுடன், சட்டவிரோத போதையூட்டும் ஔடதங்களின் கடத்தலுக்கு எதிராக இலக்கிட்ட முறைமைகளுடன் பயிற்சிக் கற்கைநெறிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கையில் போதையூட்டும் ஔடத துஷ்பிரயோகம் பற்றிய கட்டுப்பாடும் தடுப்பும் பற்றிய தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கு இந்நிகழ்ச்சிதிட்டம் உறுதுணையாக அமையும்.

தரப்படுத்தப்பட்டு இற்றைப்படுத்திய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்மூலம் மிகவும் வெற்றிகரமான நடவடிக்கைகளுடன்கூடிய தொழில்நுட்ப நுட்பமுறைகளையும் அறிவுசார் நுட்பமுறைகளையும் பயன்படுத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். அதன்மூலம் மிகவும் வெற்றிகரமாக சட்டத்தை அமுல்படுத்தலாம். ஆகையால், கணினிமூல பயிற்சிக் கற்கைநெறியின்மூலம் அறிவையும் ஆற்றல்களையும் விருத்தி செய்வதுடன், இலக்கிட்ட விடயங்களுக்கு மாற்றமான மொடியூல்கள்மூலம் மிகவும் பயன்கூர்நிலை நுட்பமுறைகளுடன்கூடிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சட்டவினைப்படுத்துகை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டன. கீழ்க்காணும் அட்டவணையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான விபரங்கள் தரப்பட்டுள்ளன.

அட்டவணை இல. 09 –

**2016 ஆம் ஆண்டில் கணினிமூல பயிற்சிக் கற்கைநெறிகளின் எண்ணிக்கை**

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை பொலிஸ் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | 02 | 01 | | 01 | 01 | | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | 18 | 09 | | 09 | 08 | | | | | |
| இலங்கை கடற்படை | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | 01 | | | 01 | 01 | 01 | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | 09 | | | 09 | 09 | 09 | |
| விசேட அதிரடிப்படை, இலங்கை பொலிஸ் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | 02 | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | 03 | 05 | | | | |
| இலங்கைச் சுங்கம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | 02 | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | 03 | 06 | | | | |
| பொலிஸ் போதையூட்டும் ஔடதங்கள் ஒழிப்புப் பணியகம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | 02 | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | 03 | 06 | | | | |
| சிறைச்சாலைகள் திணைக்களம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | | | | | 01 | 01 | | | | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | | | | | 09 | 08 | | | | |
| மொத்தம் | பயிற்சிச் செயலமர்வுகளின் எண்ணிக்கை | | | 02 | 01 | | 02 | 05 | 07 | 01 | 01 | 01 | |
| | பங்குபற்றியோர் எண்ணிக்கை | | | 18 | 09 | | 18 | 26 | 25 | 09 | 09 | 09 | |

*பயிற்சிச் செயலமர்வுகளின் மொத்த எண்ணிக்கை : 20*
*பங்குபற்றியோரின் மொத்த எண்ணிக்கை : 123*

## துஷ்பிரயோக ஔடதங்களின் ஜீவதத்துவ பரிணாம பதார்த்தங்களை அடையாளம் காணலும் பகுப்பாய்வுசெய்தலும்

இச்செயன்முறையின்போது உயிரியல் மாதிரி வகைகளை அவற்றிலுள்ள கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்ற ஔடதங்களின் ஜீவதத்துவ பரிணாமக் கூறுகளை அடையாளம் காண்பதற்கு தனிநபர் மற்றும் நிறுவன மட்டத்தில் பகுப்பாய்வுசெய்யப்படுகிறது. இத்தகைய பகுப்பாய்வின் பின்னர் போதையூட்டும் ஔடதங்களிலிருந்து விடுபட்டுள்ளார் என்பதற்காக வழங்கப்படும் சான்றிதழானது தொழில் பெற்றுக்கொள்வது போன்ற இன்னபிற கருமங்களுக்கும் பயனுள்ளதாக அமைகிறது. இவ்வாய்வுகூட அறிக்கையானது நோய் நிர்ணயத்தை அடையாளம் காணல், சிகிச்சையைத் தீர்மானித்தல், புனர்வாழ்வளித்தல் என்பவற்றுக்கு ஆட்களை ஆற்றுப்படுத்தல் போன்ற விடயங்களில் பயனுள்ளதாக அமைகிறது.

நச்சுத்தன்மைவாய்ந்த அபின் மற்றும் அபாயகரமான போதையூட்டும் ஔடதங்கள் பற்றிய சட்டம், 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்களதும் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களதும் சட்டமுரணான வியாபாரத்திற்கு எதிரான சமவாயங்கள் சட்டம் என்பவற்றுக்குப் பயன்கொடுப்பதற்கான ஆய்வுகூடத்தில் பகுப்பாய்வுசெய்யப்பட்ட உயிரியல் மாதிரி வகைகளின் விவரமான ஆவணங்கள் அட்டவணை இல. 10 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை இல. 10 -
2016 ஆம் ஆண்டில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட
உயிரியல் மாதிரி வகைகளின் எண்ணிக்கை

| | | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரசாங்க/ தனியார் வைத்திய-சாலைகள் | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | 02 | 05 | 06 | 02 | 06 | 03 | 01 | 01 | 02 | 02 | 02 | 03 |
| | பரிசோதனைகளின் எண்ணிக்கை | 03 | 06 | 15 | 04 | 11 | 08 | 02 | 02 | 04 | 06 | 03 | 06 |
| டெலிகா மெடிகெயார் நிலையம் - கொழும்பு 08 | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | | | | | 01 | | | 01 | | | | |
| | பரிசோதனைகளின் எண்ணிக்கை | | | | | 05 | | | 05 | | | | |
| நீதவான் நீதிமன்றம் | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | 03 | 02 | 02 | 04 | | 03 | 02 | | 01 | 02 | | 06 |
| | பரிசோதனைகளின் எண்ணிக்கை | 03 | 04 | 02 | 04 | | 05 | 04 | | 02 | 02 | | 10 |
| பிற | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | 01 | | | | | | | | | | | |
| | பரிசோதனைகளின் எண்ணிக்கை | 05 | | | | | | | | | | | |
| மொத்தம் | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | 06 | 07 | 08 | 06 | 07 | 06 | 03 | 02 | 03 | 04 | 02 | 09 |
| | பரிசோதனைகளின் எண்ணிக்கை | 11 | 10 | 17 | 08 | 16 | 13 | 06 | 07 | 06 | 08 | 03 | 16 |

*முழு மொத்தம்: மாதிரி வகைகளின் எண்ணிக்கை - 63*
*பரிசோதனைகளின் எண்ணிக்கை - 14*

## 5. செயலூக்க ஔடதங்களின் பகுப்பாய்வு - புதியதோர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இன்றளவில் நாட்டில் பாரதூரமான ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ள இலங்கை விளையாட்டு வீர வீராங்கனைகளின் தடைசெய்யப்பட்ட செயலூக்க மருந்து/ஔடத பாவனை தொடர்பில் எடுக்கப்படக்கூடிய ஒரு துரித தீர்வாக, முறைகேடான விதத்தில் பயன்படுத்தப்படும் ஔடதங்களின் கட்டுப்பாடு, துஷ்பிரயோகம் என்பவற்றைத் தடுப்பதற்கான பொறுப்புவாய்ந்த ஒரேயொரு அரச நிறுவனமான தே.அ.ஔ.க.சபை விளையாட்டு வீர வீராங்கனைகளின் தடைசெய்யப்பட்ட செயலூக்க மருந்துகளின்/ ஔடதங்களின் பகுப்பாய்வை ஆரம்பித்தது.

இந்நிகழ்ச்சித்திட்டம், தேசிய விளையாட்டு மருத்துவ நிறுவகத்துடன் இணைந்த பரீட்சார்த்தக் கருத்திட்டமொன்றாகவே ஆரம்பிக்கப்பட்டது.

### 5.1 ஆய்வுகூடப் பகுப்பாய்வு ஆற்றலை உயர்ந்த மட்டத்திற்கு இட்டுச்செல்லல்

விளையாட்டு வீர வீராங்கனைகளின் உடற்பாய்மங்களில் அடங்கியிருக்கும், விளையாட்டின்போது பயன்படுத்தும் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களையும் அவற்றின் ஜீவதத்துவ பதார்த்தங்களையும் அடையாளம் காண்பதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பகுப்பாய்வுகளும் தொழில்நுட்ப முறைகளும் கையாளப்பட்டன.

* பகுப்பாய்வு மற்றும் பரிசோதனை முறைமைகளைக் கண்டுபிடித்தல்.
* பரிசோதனை முறைகளை செல்லுபடியாக்கல்.

### 5.2 உயிரியல் மாதிரி வகைகளின் பகுப்பாய்வு

தேசிய விளையாட்டு மருத்துவ நிறுவகத்தினால் 01 உயிரியல் மாதிரி தடைசெய்யப்பட்ட பதார்த்தப் பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன், அது பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

அட்டவணை இல. 11:
குறித்த காலப்பகுதியில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட
உயிரியல் மாதிரி வகைகளின் எண்ணிக்கை

| நிறுவனம் | மாதிரி வகைகளின் எண்ணிக்கை | பரிசோதனை வகை | பகுப்பாய்வுசெய்யப்பட்ட ஔடதங்கள்/ ஜீவதத்துவ பரிணாம பதார்த்தங்கள் |
|---|---|---|---|
| தேசிய விளையாட்டு மருத்துவ நிறுவகம் | 03 | Steroids | தடைசெய்யப்பட்ட பட்டியல் WADA |
| மொத்தம் | 03 | | |

### 5.3 மேலதிக உணவுசார் உற்பத்திகளில் அடங்கியிருக்கும் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களை அடையாளம் காண்பதற்காக செய்யப்படும் பகுப்பாய்வுகள்

விளையாட்டு வீர வீராங்கனைகளால் பயன்படுத்தப்படும் மேலதிக உணவுசார் உற்பத்திகளில் அடங்கியிருக்கும் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களை அடையாளம் காண்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் ஆய்வுகூடத்தினால் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் விளையாட்டுத் துறையிலும் பாடசாலை மட்டத்திலும் விளையாட்டு வீர வீராங்கனைகள் பயன்படுத்தும் மேலதிக உணவுசார் உற்பத்திகளில் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்கள் அடங்கியிருப்பதாக கிடைத்த தகவல்களை அடுத்து இவ்வாறான பதார்த்தங்கள் பற்றி பகுப்பாய்வுசெய்யப்பட்ட அவ்வாறான பதார்த்தங்களை அடையாளம் காணல், விளையாட்டின் உள்ளுயிர்ப்பைப் பேணல், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அபகீர்த்திக்குரிய

நிலைமைகள் காரணமாக நாட்டுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்தல் ஆகிய நோக்கங்களுடன் தேசியப் பணியொன்றாகக் கருதி தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகள் ஆய்வுகூடம் மேலதிக உணவுசார் உற்பத்திகளின் பகுப்பாய்வுப் பணியை ஆரம்பித்தது. இதன்போது தேசிய விளையாட்டு மருத்துவ நிறுவகம்/ இலங்கை தடைசெய்யப்பட்ட செயலூக்க மருந்துகள் ஒழிப்பு நிறுவகம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகள் விஞ்ஞானபூர்வ பகுப்பாய்வுகள் ஆராய்ச்சி மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. நாட்டின் பல்வேறு மேலதிக உணவுசார் உற்பத்திகள் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளின் பகுப்பாய்வுகள் பற்றிய விபரம் அட்டவணை இல.12 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை இல. 12

குறித்த காலப்பகுதியில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட
மேலதிக உணவுசார் உற்பத்தி மாதிரி வகைகளின் எண்ணிக்கை

| நிறுவனம் | நிகழ்வுக்கூறுகளின் எண்ணிக்கை | மாதிரி வகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| NUTRISHOP, கொழும்பு 06. | 01 | 01 |
| Mega Life Sciences (Pvt) Ltd, கொழும்பு 02. | 01 | 01 |
| Vitawell (Pvt) Ltd2 | 01 | 03 |
| R & S Distributors (Pvt) Ltd | 01 | 01 |
| மொத்தம் | 04 | 06 |

## போதையூட்டும் ஔடதங்களின் பகுப்பாய்வுக்காக சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுகூட தரப்படுத்தலும் பேணுகையும் பராமரிப்பும்

### 6.1 சர்வதேச வினைத்திறன் பரிசோதிப்பு நிகழ்ச்சித்திட்டம்

ஐ.நா. போதையூட்டும் ஔடதங்கள் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின்மூலம் சர்வதேச ஒத்துழைப்புக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் என்ற பெயரில் நடாத்தப்படும் சர்வதேச ஆய்வுகூட வினைத்திறன் பரிசோதிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் ஆய்வுகூடம் பங்குகொள்கிறது. அபிவிருத்தியடைந்த மற்றும் வளர்முக நாடுகளின் ஆய்வுகூடங்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குகொள்கின்றன.

தொடர்ச்சியாக இதில் பங்குகொள்வதன்மூலம் உலகளாவிய அளவில் ஆய்வுகூட நியமமாக்கல், பகுப்பாய்வு ஆற்றல்களை விருத்திசெய்துகொள்ளல் என்பவற்றுடன் சரியான முடிவெடுத்தல் பற்றிய மிகச் சரியான அணுகுமுறையொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். ஒருசீரான மற்றும் இணைந்த பெறுபேறுகளையும் அறிக்கையிடல்களையும் அனைத்து ஆய்வுகூடங்கள் மூலமும் அடைந்து கொள்வதற்கு இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா. போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான அலுவலகத்தினால் அவசியமான சிபார்சுசெய்யப்பட்ட மாதிரி வகைகளும், அடையாளம் காணப்படாத, சந்தேகத்திற்கிடமான மாதிரி வகைகளும் உயிரியல் மாதிரி வகைகளும் அடையாளம் காண்பதற்காகவும் பகுப்பாய்வு செய்வதற்காகவும் அனுப்பிவைக்கப்படுகிறது.

<u>சர்வதேச ஒத்துழைப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் **(ICE)** - 2015, 2016</u>

இக்காலப்பகுதியில் சர்வதேச ஒத்துழைப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2015 சுற்று 2, 2016 சுற்று 1 ஆகியவற்றில் ஆய்வுகூடங்கள் பங்குபற்றின. இந்த மாதிரி வகைகளுக்கு அளவுரீதியான, பண்புத்தர ரீதியான பகுப்பாய்வுகளை மேற்கொண்டு தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் அடங்கியவை அல்லது அடங்கியிராதவை என்பதற்கான (சந்தேகத்திற்கிடமான மாதிரி வகைகளும் உயிரியல் மாதிரி வகைகளும்) அவசியமான அறிக்கைகள் வழங்கப்பட்டன.

<u>சர்வதேச ஒத்துழைப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் **(ICE)** – 2015 சுற்று 2</u>

சர்வதேச ஒத்துழைப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2016 சுற்று 1 பெறுபேற்று மீளாய்வின்படி தகுதிபெறும் ஆய்வுகூடங்களின் பட்டியல்படுத்தலுக்கு 60 நாடுகளின் 193 ஆய்வுகூடங்கள் பங்குகொண்டன. அட்டவணை இல. 13 இல் தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் ஆய்வுகூடத்தின் பெறுபேற்று மதிப்பீட்டைக் காணலாம்.

**Table 13: Evaluation results of Round 1 of ICE program 2016**

| Test | Z score |
|---|---|
| Mathamphetamine | 0.7 |
| Cocaine | - 0.8 |

*Satisfactory Limit of Z Score: < 2*

<u>சர்வதேச ஒத்துழைப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் **(ICE)** – 2015 சுற்று 1</u>

சர்வதேச ஒத்துழைப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (ICE) - 2016 சுற்று 1 பெறுபேற்று மீளாய்வின்படி தகுதிபெறும் ஆய்வுகூடங்களின் பட்டியல்படுத்தலுக்கு 68 நாடுகளின் 220 ஆய்வுகூடங்கள் பங்குகொண்டன. அட்டவணை இல. 14 மூலம் தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் ஆய்வுகூடத்தின் பெறுபேற்று மதிப்பீட்டைக் காணலாம்.

**Table 14: Evaluation results of Round 1 of ICE program 2016**

| Test | Z score |
|---|---|
| Cocaine | 1.2 |
| Metheledioxymethamphetamine (MDMA) | - 0.7 |

*Satisfactory Limit of Z Score: < 2*

### 7.2 **ISO** 9001 தர முகாமைச் சான்றிதழ்

ஆய்வுகூடத்தில் விஞ்ஞான பகுப்பாய்வுசெய்வதற்குள்ள ஆற்றலை விருத்திசெய்வதன்மூலமும் விளையாட்டு மாதிரி வகைகளின் பகுப்பாய்வை மேற்கொள்வதையும் உயர் மட்டத்தில் பேணிச்செல்வதன்மூலமும் முகாமை அலுவல்களை ஒழுங்குபடுத்துவதன்மூலமும் இதற்கான ஆய்வுகூட தயார்படுத்தல் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில், அவசியமான முதலாவது கணக்காய்வு தற்போது மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், தற்போது அகக்கணக்காய்வின்படி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அட்டவணை இல. 15

**தேசிய தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் ஆய்வுகூடத்தின் சேவைகளை வழங்கி 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வருமானமீட்டல்கள் சம்பந்தமான தகவல்கள்**

| பகுப்பாய்வு | ரூ. |
|---|---|
| அற்கஹோல் மாதிரி வகைகளின் பகுப்பாய்வு | 352,500.00 |
| துஷ்பிரயோக ஔடதங்களில் ஜீவதத்துவ பரிணாம பதார்த்தங்களை அடையாளம் காணலும் பகுப்பாய்வும் | 66,000.00 |
| விளையாட்டின்போது பயன்படுத்தப்படுகின்ற தடைசெய்யப்பட்ட செயலூக்க மருந்துகளில் ஜீவதத்துவ பரிணாம பதார்த்தங்களை அடையாளம் காணலும் பகுப்பாய்வும் | 8,000.00 |
| மேலதிக உணவுசார் உற்பத்திகளில் அடங்கியுள்ள தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களை அடையாளம் காண்பதற்கு செய்யப்படும் பகுப்பாய்வு | 150,000.00 |
| கள பரிசோதனைக் கருவிகலத்தொகுதிகளின் செயற்பாட்டை உறுதிப்படுத்தலும் மீளமைத்தலும் | 25,000.00 |
| மொத்தம் | 601,500.00 |

## 8.7 முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகாரசபை

இலங்கையில் போதையூட்டும் ஔடத தொல்லையை பூண்டோடு ஒழித்துக்கட்டும் தகுதிவாய்ந்த தேசிய அதிகாரியாக முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகாரசபை முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களின் இறக்குமதி, ஏற்றுமதி, விஸ்தரிப்பு என்பவற்றைக் கட்டுப்படுத்தும் பொருட்டு பின்வரும் கருமங்களில் ஈடுபடுகிறது:

### I. அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் மற்றும் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய சட்டவிரோத வெறியப்பொருள்களின் கடத்தலுக்கு எதிரான சமவாயச் சட்டத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ள அட்டவணை இல. I மற்றும் II இல் குறிப்பிடப்படும் பதார்த்தங்களை இறக்குமதிசெய்வதற்கு அல்லது ஏற்றுமதி ஏற்றுமதிசெய்வதற்கு ஒவ்வொரு நபரும் முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

### II. வளவுகளின் பதிவு

அனுமதிப்பத்திரம்பெற்ற ஒவ்வொரு இறக்குமதியாளரும் ஏற்றுமதியாளரும் சட்டத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ள அட்டவணை இல. I மற்றும் II இல் குறிப்பிடப்பட்டுள்ள பதார்த்தங்கள் தொடர்பில் செயலாற்றும் களஞ்சிய வளவுகளைப் பதிவுசெய்ய வேண்டும்.

### III. கண்காணிப்பும் பரிசோதனையும்

சட்டத்தில் நிரற்படுத்தப்பட்டுள்ள அட்டவணை இல 1 மற்றும் II இல் குறிப்பிடப்படும் பதார்த்தங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள வளவுகளையும் அதற்குரிய பணிகளையும் காலாண்டு அடிப்படையில் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

அதன்படி, அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் பிரதான கருமங்களாவன:

- கம்பனிகளின் பரிசோதிப்பு.
- கம்பனிகளின் பதிவு.
- போதையூட்டும் ஔடதங்கள் சம்பந்தமான சட்டவினைப்படுத்தல் அதிகாரசபைகள் மற்றும் ஏனைய போதையூட்டும் ஔடதங்கள்/முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களுடன் செயற்படும் முகவர் நிறுவனங்களின் செயற்பாட்டை மேம்படுத்தல்.
- முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களின் கையுதிர்ப்புக்கு விஞ்ஞான ரீதியான சிபார்சுகளை வழங்குதல்.

### கம்பனிகள் பரிசோதிப்பு

2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஔடதங்கள் மற்றும் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய சட்டவிரோத வெறியப்பொருள்களின் கடத்தலுக்கு எதிரான சமவாயச் சட்டத்தில் நிரற்படுத்தப்பட்டுள்ள அட்டவணை இல. I மற்றும் II இல் குறிப்பிடப்படும் பதார்த்தங்கள் களஞ்சியத்திடப்பட்டுள்ள வளவுகள் முன்னோடிக் கட்டுப்பாட்டு அதிகாரசபையினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதேபோல், முன்னோடி இரசாயனங்கள் பிரிவில் பதிவைப் பூர்த்திசெய்த நிறுவனங்களின் அறிக்கைகள், பாகங்கள் முதலியன சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. அதன்படி, 2016 ஆம் ஆண்டில் பின்வரும் கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| <u>மாதம்</u> | <u>கண்காணிப்பு</u> |
|---|---|
| ஜனவரி-பெப்ரவரி | 01 |
| மார்ச் | 01 |
| ஏப்ரல் | 01 |
| மே | 00 |
| ஜூன் | 09 |
| ஜூலை - ஆகஸ்ட் - செப்டம்பர் | 26 |
| அக்டோபர் - நவம்பர் | 08 |
| டிசம்பர் | 09 |
| மொத்தம் | 54 |

<u>கம்பனிகள் பதிவு</u>

| | |
|---|---|
| இறக்குமதியாளர் | 106 |
| ஏற்றுமதியாளர் | 05 |
| விநியோகஸ்தர் | 102 |
| இறுதிப் பயனர் | 651 |
| வளவுகள் | 181 |
| மொத்தம் | 1045 |

# 9. வருமானக்கூற்று

## தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2016 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவுறும் ஆண்டுக்கான வருமானக்கூற்று

| | | 2016 | 2015 |
|---|---|---|---|
| | | (ரூ) | (ரூ) |
| வருமானங்கள்: | குறிப்பு இல. | | |
| அரச மீண்டெழும் கொடைகள் | குறிப்பு 1 | 201,401,000.00 | 170,633,833.00 |
| பிற நானாவித வருமானங்கள் | குறிப்பு 2 | 10,080,128.92 | 8,069,703.79 |
| நிலையான சொத்து விற்பனைமூலம் பெற்ற இலாபம் | குறிப்பு 3 | 539,282.80 | |
| வெளிநாட்டுக் கொடைகள் - மீண்டெழும் | | 214,020.00 | 105,900.00 |
| HONLEA இற்குக் கிடைத்த கொடை | | 12,720,000.00 | |
| | | 224,954,431.72 | 178,809,436.79 |
| செலவினங்கள்: | | | |
| ஆள்சார் மற்றும் நிர்வாகச் செலவு | குறிப்பு 4 | 141,182,640.37 | 110,700,459.23 |
| நடவடிக்கைச் செலவு | குறிப்பு 5 | 60,071,962.28 | 36,738,974.55 |
| உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவன பங்களிப்பு | குறிப்பு 6 | 610,000.00 | 466,000.00 |
| தடுப்புக் கல்விப் பிரிவுச் செலவு | குறிப்பு 7 | 3,484,539.81 | 4,185,199.44 |
| சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புச் செலவு | குறிப்பு 8 | 16,932,895.54 | 15,634,079.65 |
| ஆராய்ச்சிக் கற்கைகளுக்கான செலவு | குறிப்பு 9 | 5,938,473.70 | 4,788,572.30 |
| வெளிநிலைச் சேவைகள் செலவு | குறிப்பு 10 | 5,309,283.12 | 3,872,679.40 |
| ஆய்வுகூடச் செலவு | குறிப்பு 11 | 2,498,318.73 | 610,985.49 |
| சிறைச்சாலைகளும் ஏனைய நிலையங்களும் | குறிப்பு 12 | 109,359.30 | 161,235.00 |
| மனிதவள அபிவிருத்திச் செலவு | குறிப்பு 13 | 593,221.00 | 732,235.83 |
| நிதிச் செலவு | குறிப்பு 14 | 2,767,273.89 | 521,528.84 |
| தேய்மானம் | குறிப்பு 15 | 226,389,477.99 | 14,508,322.69 |
| மொத்த நடவடிக்கைச் செலவு | | 262,137,445.73 | 192,920,272.42 |
| மிகை அல்லது பற்றாக்குறை | | (371,83,014.01) | (14,110,835.63) |

# 10. ஐந்தொகை

## தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2016 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை

| | | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்:** | | (ரூ) | (ச) | (ரூ) | (ச) |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்:** | | | | | |
| நிலையான சொத்துக்கள் | குறிப்பு 16 | | 85,814,869.35 | | 83,627,182.07 |
| அறவிடப்படவேண்டிய இடர்க் கடனும் வைபவ முற்பணங்களும் | குறிப்பு 17 | | 9,870,610.00 | | 10,161,282.00 |
| WIP புதிய கட்டிடம் | | | 556,142.20 | | |
| மென்பொருள்கள் | | | 200,000.00 | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | | | | |
| வங்கியிலுள்ள காசு | குறிப்பு 18 | 7,609,816.04 | | 6,345,366.97 | |
| கையிருப்புக்கள் | குறிப்பு 19 | 4,563,647.59 | | 3,130,328.87 | |
| முற்கொடுப்பனவுகள் | குறிப்பு 20 | 2,663,796.35 | | 2,461,846.52 | |
| பகுதிக் கொடுப்பனவுகள் | | - | | 11,449,488.44 | |
| முற்பணங்கள் | குறிப்பு 21 | 1,912,759.50 | | 1,939,669.50 | |
| வைப்புக்கள் | குறிப்பு 22 | 506,812.96 | | 356,812.96 | |
| | | | 17,256,832.44 | | 25,683,513.26 |
| மொத்த சொத்துக்கள் | | | 113,698,453.99 | | 119,471,997.33 |
| **உரிமைகளும் பொறுப்புக்களும்:** | | | | | |
| **உரிமைகள்:** | | | | | |
| அரச மூலதனக் கொடை | குறிப்பு 23 | 20,000,000.00 | | 17,233,000.00 | |
| மூலதன ஒதுக்குகள் | குறிப்பு 24 | 65,503,710.68 | | 63,343,346.09 | |
| மீள்கணிப்பீட்டு ஒதுக்குகள் | | 25,184,005.17 | | 25,184,005.17 | |
| தொங்கல் கணக்கு | | 480,899.89 | | (480,899.89) | |
| மிகை / பற்றாக்குறை | | (44,226,852.73) | | (14,110,835.63) | |
| மொத்த உரிமைகள் | | | 66,941,763.01 | | 91,168,615.74 |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்:** | | | | | |
| பணிக்கொடை | குறிப்பு 25 | | 41,234,429.38 | | 22,861,182.50 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்:** | | | | | |
| கடன் கொடுநர்கள் | குறிப்பு 26 | 67,000.00 | | 51,000.00 | |
| அட்டுறு செலவுகள் | குறிப்பு 27 | 5,445,261.60 | | 5,381,179.09 | |
| நிறுத்திவைத்த தொகைகள் | | 10,000.00 | | 10,000.00 | |
| | | | 5,522,261.60 | | 5,442,179.09 |
| **மொத்த பங்குமுதலும் பொறுப்புக்களும்:** | | | 113,698,453.99 | | 119,471,997.33 |

கணக்கிற்குரிய கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதிக்கூற்றின் இன்றியமையாத ஓரங்கமாகும். அதனை நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அரச அலுவல்கள் பற்றிய உள்ளபடியானதும் நியாயமானதுமான ஒரு நோக்கை வழங்குவதற்காகவே நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் வெளியிடப்படுகின்றன.

2016 மற்றும் அதன் மிகை/(பற்றாக்குறை) முடிவடைந்த ஆண்டிற்காக இந்நிதிக்கூற்றுக்கள் ஏற்புடைத்தாகா.

இந்த நிதிக்கூற்றுக்கள் அரசாங்கத்தின் விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் ஏற்புடைத்தாகும்.

உதவிப் பணிப்பாளர் - நிதி
தே.அ.ஔ.க.ச.

தவிசாளர் / பணிப்பாளர் நாயகம்
தே.அ.ஔ.க.ச.

இந்த பக்கம் 1 முதல் 3 வரையான கணக்கீட்டுக் கொள்கைகளதும் இந்த நிதிக்கூற்றுக்களதும் உள்ளக பகுதிகளை உருவாக்குவதற்கு பக்கங்கள் பற்றிய குறிப்புக்கள். இந்த நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பணிப்பாளர் சபை பொறுப்புடையதாகும். அத்தகைய நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அவர்களுக்காக கையொப்பமிடப்பட்டது.

பணிப்பாளர் சபை
உறுப்பினர்
தே.அ.ஔ.க.ச.

பணிப்பாளர் சபை
உறுப்பினர்
தே.அ.ஔ.க.ச.

# 11. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

1. கூட்டிணைத் தகவல்கள்

1.1 வாழிடமும் சட்ட வடிவமும்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, 1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தினால் இலங்கையில் நிறுவப்பட்டுள்ள ஒரு நியதிச்சட்ட சபையாகும். இந்நிறுவனம் கோட்டே வீதி, இராஜகிரிய என்ற முகவரியில் அமையப்பெற்றுள்ளது.

### 1.2 சபையின் தத்துவங்கள்

(அ) அபாயகரமான ஔடதங்களை முறைகேடான விதத்தில் பயன்படுத்துவதைத் தடுத்தலும் கட்டுப்பாடும் சம்பந்தமான தேசியக் கொள்கையொன்றை ஒழுங்குறுத்தல், மீளாய்வுசெய்தல், அவ்வாறான கொள்கைகள் பற்றி அமைச்சருக்கு மதியுரைகளையும் விதப்புரைகளையும் வழங்குதல்,

(ஆ) சபையின் தத்துவங்களுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு நியாயமான வகையில் தேவைப்படும்போது தனிநபர்கள், அமைப்பாண்மைகள், அரசாங்கத் திணைக்களங்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிடமிருந்து தகவல்களையும் விபரங்களையும் கோரல்,

எவ்வாறாயினும், நீதிமன்றத்தினால் கோரப்படும்போது அல்லது சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுடன் இசைவுறுதல் தவிர்ந்தவிடத்து இப்பிரிவின் ஏற்பாடுகளின்வண்ணம் பெற்றுக்கொண்ட ஏதேனும் ஒரு தகவல் அல்லது விபரம் அங்கத்தவரினால் வெளிப்படுத்தப்படல் ஆகாது,

(இ) சபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து உதவிகளையும் கொடைகளையும் பெற்றுக்கொள்ளல்,

(ஈ) அபாயகரமான ஔடதங்களைக் கண்டுபிடிப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ள முகவராண்மைகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச்செய்தல்,

(உ) போதையூட்டும் ஔடதங்களுக்கு அடிமைப்பட்ட ஆட்களுக்கான சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வளிப்புப் பணிகளை ஊக்குவித்தலும் தேசிய அபாயகரமான ஔடதங்களை முறைகேடான விதத்தில் பயன்படுத்தல் மற்றும் தடுப்பு சம்பந்தமான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை சிறுவர்களுக்கும் முதியவர்களுக்கும் ஒழுங்குசெய்தல் அத்துடன்,

(ஊ) அபாயகரமான ஔடதங்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுடன் இணைந்த தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்பாண்மைகளுடனும் முகவராண்மைகளுடனும் ஒருங்கிணைப்பைப் பேணுதல்

சபையின் தத்துவங்களாகும்.

### 2. கணக்கீட்டுக் கொள்கைகள் (சாதாரண)

### 2.1 தயாரிக்கும் அடிப்படை

சபையின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை அரசதுறை கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்களுக்கு பாதிப்புச் செலுத்தும் பணவீக்கக் காரணிகளுக்கு சீராக்கம் செய்யப்படவில்லை. குறித்த இடங்களில் பயன்படுத்தப்பட்ட விசேட கொள்கைகள் எதிர்வரும் குறிப்புகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

### 2.2 ஒப்பீட்டளவான தகவல்கள்

நடப்பு ஆண்டில் நிதிக்கூற்றுக்களை மிகச் சிறந்த முறையில் விளங்கிக்கொள்வதற்காக முன்னைய ஆண்டிற்குரிய அவசியமான ஒப்பீட்டு ரீதியான தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுக்களின் உருப்படிகளைச் சமர்ப்பித்தல் அல்லது மீள்வகையீடுசெய்தல் திருத்தம் செய்யப்பட்டுள்ளவிடத்து, மிகச் சிறந்ததொரு சமர்ப்பிப்பை வழங்கும் பொருட்டு நடப்பு ஆண்டுடன் இசைவானவாறு ஒப்பீட்டுப் பெறுமதிகளும் மீள்வகையீடு செய்யப்பட்டுள்ளன.

## 2.3 ஆதனங்களும் பொறித்தொகுதிகளும் உபகரணங்களும்

ஆதனங்களும் பொறித்தொகுதிகளும் உபகரணங்களும் கிரயத்தில் அல்லது திரண்ட தேய்வுப் பெறுமானத்தில் காட்டப்படுகின்றன. இறையிலி காணிகள் தவிர்ந்தவிடத்து ஆதனங்களுக்கும் பொறித் தொகுதிகளுக்கும் உபகரணங்களுக்கும் தேய்வுப் பெறுமான ஒதுக்கீடு அவற்றின் மதிப்பீட்டுப் பயன்படு ஆயுட்காலத்தில் சமமான தவணைகளில் பதியும் பொருட்டு அவற்றின் கணிப்பீட்டுப் பெறுமதியின் பேரில் பின்வருமாறு கணிப்பீடுசெய்யப்படுகிறது.

| | விகிதாசாரம் (%) |
|---|---|
| கட்டிடங்களும் கட்டுமானங்களும் | 5 |
| தளபாடங்கள் | 10 |
| அலுவலக உபகரணங்கள் | 20 |
| பொருத்துதல்கள் | 20 |
| நூலக நூல்கள் | 25 |
| வாகனங்கள் | 25 |
| சமையலறை உபகரணங்கள் | 20 |
| வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை உபகரணங்கள் | 20 |
| என்.என்.எல். ஆய்வுகூட உபகரணங்கள் | 20 |
| வேறு பொறித்தொகுதிகளும் உபகரணங்களும் | 20 |

எளிய வரிசைமுறையின் பேரில் சொத்துக்கள் கொள்வனவுசெய்த ஆண்டில் முழு ஆண்டிற்குமான தேய்மானமும் 2016 ஆம் ஆண்டிற்கு முன்பு கொள்வனவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக அப்புறப்படுத்தும் திகதி வரை தேய்மானம் செய்யப்படுவதுடன் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் கொள்வனவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கு கொள்வனவுசெய்த/ அப்புறப்படுத்திய திகதியின் அடிப்படையில் தேய்மானம் கணிப்பிடப்படுகிறது.

மோட்டார் வாகனங்கள் மீள்கணிப்பீட்டுப் பெறுமதிகளின்பேரில் காட்டப்படுவதுடன், ஏனைய எல்லாச் சொத்துக்களும் வகையீட்டுக் கிரயத்தில் காட்டப்படுகின்றன.

| குத்தகை ஆதனங்கள் | பெறுமதி (ரூ) | குத்தகைக் காலம் |
|---|---|---|
| தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை,<br>இல.383, கோட்டே வீதி,<br>இராஜகிரிய. | 4,350,000 | 99 ஆண்டுகள் |
| பிட்டிபன காணி | 26,000,000 | 30 ஆண்டுகள் |
| 3ஆம் மாடி,<br>இல.385C-3/1,<br>இராஜகிரிய. | 3,600,000 | 02 ஆண்டுகள் |
| மஹஹேன தோட்டம் | குத்தகை ஒப்பந்த காலம் முடிவடைந்திருப்பதுடன், இன்னும் 30 ஆண்டு காலப்பகுதிக்கு நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | |

### 2.4 பணிக்கொடைக்கான ஒதுக்கீடு

சேவையின் முதல் ஆண்டில் ஆரம்பித்து ஓராண்டு சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்த உத்தியோகத்தர் ஒவ்வொருவரதும் நிதியாண்டின் இறுதி மாதத்திற்குரிய சம்பளத்தில் அரைவாசி என்ற அடிப்படையில் கணிப்பிடப்பட்ட பெறுமதிக்குச் சமமான பணிக்கொடைக்கான நிதிஒதுக்கீடு இந்நிதிக்கூற்றுக்கள்மூலம் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின்கீழ் தொடர்ச்சியாக 05 ஆண்டு சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்வதன் பேரில் மட்டும் உத்தியோகத்தர் ஒருவர் பணிக்கொடை செலுத்தத் தகுதி பெறுவார்.

### 2.5 வர்த்தகப் பெறுவனவுகள்

எதிர்பார்க்கப்பட்ட கிடைக்கத்தக்க பெறுமதிக்கு வர்த்தக பெறுவனவுகள் பதியப்படுகின்றன. ஆண்டு இறுதிப் பகுதியளவில் காணப்படும் எல்லா செலுத்தப்படாதுள்ள தொகைகளின் மீளாய்வொன்றின் அடிப்படையில் ஐயுறவான பெறுவனவுகளுக்கான மதிப்பீடொன்று தயாரிக்கப்படுகிறது. அறவிடமுடியாக் கடன்கள் அடையாளம் காணப்பட்ட ஆண்டினுள் பதிவழிக்கப்படுகின்றன.

### 2.6 காசும் காசுக்கு நிகரானவையும்

காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக காசுக்கு நிகரான ஒன்றாக கையிலுள்ள காசு, வங்கி வைப்புகள், வங்கி மேலதிகப்பற்றின் தேறிய இலாபம் என்பன உள்ளடங்குகின்றன. ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்களில் கடன்பெறல் என்பதன் கீழ் வங்கி மேலதிகப்பற்றுகள் உள்ளடக்கப்படவில்லை.

### 2.7 ஐந்தொகை திகதிக்குப் பிந்திய சம்பவங்கள்

ஐந்தொகை திகதிக்குப் பிந்திய எல்லா முக்கிய சம்பவங்களையும் கவனத்திலெடுத்து நிதிக்கூற்றில் அவசியமான சீராக்கங்களும் வெளிப்படுத்தல்களும் செய்யப்படுகிறது.

### 2.8 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

ஐந்தொகை திகதியன்று உள்ளவாறு அடையாளம் காணப்பட்ட எல்லாப் பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதுடன், தற்போதுள்ளதாக அடையாளம் காணப்பட்ட எனினும் தொகையை சரியாகத் தீர்மானிக்க முடியாத பொறுப்புக்களுக்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

### 2.9 ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.பொ.நிதியத்திற்கான ஏற்பாடுகள்

ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சபைக்கு பங்களிப்பு கிடைப்பதற்கு ஊழியர்கள் தகுதியானவர்கள். ஊழியர்களின் மொத்த சம்பளத்தின் அடிப்படையில் சபையினால் ஊ.சே.நிதியம், ஊ.ந.பொ.நிதியத்திற்கு முறையே 12%, 3% வீதம் பங்களிப்பு வழங்கப்படும்.

### 2.10 வருமானம்

#### 2.10.1 மீண்டெழும் தன்மையிலான நிதிஒதுக்கீடுகள்

மீண்டெழும் செலவினங்களுக்கு பொதுத் திறைசேரியினால் சபைக்கு கிடைத்த நிதிஒதுக்கீடுகள் வருமானமாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், சபையினால் ஈட்டப்படும் எல்லா வருமானங்களும் வேறு வருமானங்களின்கீழ் வருமானக் கூற்றுக்களுக்கு நேரடியாகவே அடையாளம் காணப்படுகின்றன.

#### 2.10.2 மூலதன தன்மையிலான நிதிஒதுக்கீடுகள்

மூலதன செலவுகளுக்காக பொதுத் திறைசேரியினால் சபைக்கு வழங்கப்படும் நிதிஒதுக்கீடுகள் குறித்த செலவுகளை அறிக்கையிடுவதன்மூலம் குறைக்கப்பட்டுள்ளன.

### 2.11 செலவுகள்

செலவை விஞ்சிய வருமானத்தைக் கணிப்பிடும்போது சபையை இயக்கிச்செல்வதற்கு செய்யப்பட்ட மீண்டெழும் தன்மையிலான எல்லாச் செலவுகளும் வருமானத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

### 2.12 பண்டக் கையிருப்பு

பண்டக் கையிருப்புகள் கிரயத்திற்கு அடையாளம் காணப்பட்டுள்ளன.

## 3. கணக்கீட்டுக் கொள்கையை மாற்றுதல்

### 3.1 பெறுமானத் தேய்வுக் கொள்கை

2016 ஆம் ஆண்டு முதல் கொள்வனவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு செய்யும் முறை கொள்வனவுசெய்த ஆண்டில் முழு ஆண்டுக்கும் பெறுமானத்தேய்வு முறையில் கொள்வனவுசெய்த ஆண்டின் நாள் அடிப்படையிலான பெறுமானத்தேய்வு முறைக்கு மாறுகிறது.

## 4. காசுப்பாய்ச்சல் கூற்று

நேரடியற்ற முறையைப் பயன்படுத்தி காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. காசு மற்றும் காசுக்கு நிகரானவற்றில் சபையின் வங்கி மீதிகள் உள்ளடங்குகிறது.

# 12. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

(327)

| | | | |
|---|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. | එල්ඕආර්/බී/එන්ඩීඩීසීබී/2016/17 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date: 2018 පෙබරවාරි 07 දින |

NDDCB
04 APR 2018
FINANCE DIVISION

AD/F
F.N.A.P

සභාපති,

අන්තරායකර ඖෂධ පාලක ජාතික මණ්ඩලය.

**අන්තරායකර ඖෂධ පාලක ජාතික මණ්ඩලයේ 2016 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2)(සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව**

---

මාගේ සමාංක හා 2017 සැප්තැම්බර් 24 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

NATIONAL DANGEROUS DRUGS CONTROL BOARD
03 APR 2018
04
★ CHAIRMAN ★

ඊ.ඒ.ජී.ආනන්ද
නියෝජ්‍ය විගණකාධිපති
විගණකාධිපති වෙනුවට

පිටපත් : 1. ලේකම් - නීතිය හා සාමය සහ දක්ෂිණ සංවර්ධන අමාත්‍යාංශය
2. ලේකම් - මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. எல்ஓஆர்/பீ/என்டீடீசீபீ/2016/17

මගේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2017 செப்தம்பர் 24

தலைவர்,
தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை.

**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1984 இன் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரச்சட்டத்தின் 12(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு 2017 யூன் 15 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

Auditor General's Department
AGDSL
325

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்ப்ழியுள்ளதாக்கப்படுகின்றது.

2

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியமத்தின் 14 ஆம் பந்தியின் பிரகாரம் சபையின் சொத்துக்கள் உருப்படி மற்றும் அண்மித்த எதிர்கால நலன்களோ அல்லது சேவை சாத்தியவளமுள்ள போது அவை வேறாக இனங்காணப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் இரண்டு காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் 87 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தின் காணி தொடர்பாக பின்வரும் வெளிப்படுத்தல்கள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மேற்கௌ்ளப்பட்டிருக்கவில்லை.

- உருப்படி அடிப்படையில் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள் மற்றும் பொறுப்புக்களுக்காக பாதுகாப்பிற்காக வெளியிடப்பட்டுள்ள ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் இருப்பு மற்றும் பெறுமதிகள்
- ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கையேற்பதற்காக உடன்படிக்கை மற்றும் கடப்பாடு அளவு

3

Auditor General's Department
(323)

(இ) நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணமாக கிரயம் ரூபா 39,282,116 தொகையான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் அட்டுறு செலவினத்திற்காக போதியளவு ஒதுக்கீடு செய்யப்படாமையால் அட்டுறு செலவினம் ரூபா 402,815 ஆல் விஞ்சி 2017 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் போது வெளிநாட்டு சுற்றுலாவொன்றிற்காக செலவினம் மேற்கொள்வதற்காக வங்கிக்கு ரூபா 1,045,992 ஆன நிலையான கட்டளையொன்று வழங்கப்பட்டிருக்கையில் அப்பணத்தை அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு பேரேட்டின் பிரகாரம் ரூபா 22,616,678 ஆக இருந்த போதிலும் வருமானக்கூற்று மற்றும் நிலையான சொத்துக்களுக்குரிய பட்டோலையின் பிரகாரம் ரூபா 22,639,478 என இரண்டு பெறுமதிகள் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நிதிக்கூற்றுக்களை சமப்படுத்துவது தொடர்பாக சிக்கலொன்றாக இருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் இறுதியில் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான பட்டோலைகளின் பெறுமதிகளுக்கிடையே நான்கு வகையான சொத்துக்களின் ரூபா 497,071 கூடுதலாகவும் மூன்று சொத்துக்கள வகைகளில் ரூபா 510,533 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

4

(ஆ) 2016 ஆம் ஆண்டின் இறுதியில் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமானத்தேய்வின் பெறுமதி மற்றும் நிறுவகத்தினால் பெறுமானத்தேய்வு செய்தல் பட்டோலையின் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமனத்தேய்வு பெறுமதிக்கிடையே ரூபா 6,685,931 ஆன தேறிய வேறுபாடு காணப்பட்டது.

(இ) ஐந்து வகையான சொத்துக்களின் சொத்துக்கள் பதிவேடு மற்றும் பேரேடுகளுக்கு இடையே பெறுமதி ரூபா 1,928,853 ஆன தேறிய வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) ஐந்தொகையில் கிடைக்க வேண்டிய இடர் கடன் மற்றும் விசேட முற்பணங்களாக ரூபா 9,870,610 எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பட்டோலையில் (குறிப்பு இலக்கம் 17) அம்மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,858,175 ஆக இருந்தமையால் ரூபா 12,435 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

### 2.2.4 தொங்கல் கணக்கு

முன்னைய ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த தொங்கல் கணக்கின் மீதி ரூபா 480,900 தொகையை மீளாய்வாண்டின் போதும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கு விடயங்களுக்கு எதிராக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி (ரூபா) | சமர்ப்பிக்கப்பட்டிருக்காத சான்றுகள் |
|---|---|---|
| (அ) காணி | 11,067,487 | உரித்துறுதி மற்றும் உடன்படிக்கை |
| (ஆ) இரசாயன பொருள் இருப்பு | 2,535,326 | பொருள் மெய்மையாய்வு அறிக்கை |

5

321

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்து வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்ட முற்பண மீதிகள் ரூபா 1,782,060 ஆக இருந்ததுடன் அம்மீதிகள் எந்த வருடத்திலிருந்து இருந்து வருவதாக குறிப்பாக இனங்காண முடியாதிருந்தன.

(ஆ) 11 வெளி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 184,313 ஆன வைப்புக்களுக்குரிய பற்றுச்சீட்டுக்கள் சபையிடம் காணப்படாமையால் அவ்வைப்புத் தொகையை அறவிடுவது தொடர்பில் ஆபத்தொன்று காணப்பட்டது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2007 இன் 54 ஆம் இலக்க ஔடதப் பொருளிற்கு அடிமையான நபர்கள் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) அதிகாரச் சட்டத்தின் 4(3) ஆம் பிரிவு | தனியார் சிகிச்சை நிலையங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற சிகிச்சைகள் தொடர்பான வெற்றியளிப்பு தொடர்பில் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களின் பணிப்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய கால ரீதியான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 104(3) | வாகனங்கள் விபத்துக்கள் தொடர்பான அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

6

Auditor General's Department

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணங்கள் 109(1)(ஆ) | வாகனங்கள் விபத்துக்கள் தொடர்பான நட்டங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 569 III ஆம் வகுப்பு | வெவ்வேறு தன்மையிலான வைப்புக்கள் "நானாவித வைப்புக்கள்" என்ற பெயரில் பொதுக் கணக்கின் கீழ் செய்யப்பட வேண்டிய போதிலும் சபையினால் ரூபா 506,813 தொகையான வைப்புக்களுக்காக அவ்வாறான கணக்கொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப் பிரமாணம் 751 | கிடைக்கப்பெறும் சகல பொருட்களும் உடனடியாக பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் சபையால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 888,995 பெறுமதியான பொருட்கள் பொருட் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப் பிரமாணம் 754 | ஒவ்வொரு ஆண்டின் இறுதியின் போது பொருட் பதிவேடு சமப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1978 திசெம்பர் 09 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 74 மில்லியன் பெறுமதியான சொத்துக்களுக்காக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

7

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 37,183,014 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 14,110,836 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 23,072,178 ஆல் அதிகரித்திருந்தது. செயற்பாட்டு செலவினம் ரூபா 69,217,174 ஆல் அதிகரித்திருந்தமை பற்றாக்குறையின் அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது தொடர்ச்சியான நிதிப் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 15,013,481 தொகையான அது மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 37,183,014 ஆக இருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் சம்பளம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 36,922,418 தொகையான சபையின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதி ரூபா 81,587,124 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரச்சட்டத்தின் நோக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- அபாயகர ஔடதங்கள் துஷ்பிரயோகம் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பிலான தேசிய கொள்கையொன்றை உருவாக்குதல், மீளாய்வு செய்தல், அத்தகைய கொள்கைகள் தொடர்பாக தேசிய கொள்கையொன்றை தயாரித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் அவ்வாறான கொள்கைகள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் சமர்ப்பித்தல்.

* சபையின் அதிகாரங்களைப் செயற்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து நன்கொடைகளையும் மானியங்களையும் பெற்றுக்கொள்ளல்.

* அபாயகரமான ஔடதங்களைத் தடுப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ள முகவர் நிறுவனங்களின் நடவடிக்கைகளை கூட்டிணைத்தல்.

* போதைப்பொருட்களுக்கு அடிமையான நபர்களுக்கான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தல், சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் தேசிய போதைப்பொருள் பயன்பாடு மற்றும் நிவாரணங்கள் துர்ப்பிரயோகம் தொடர்பான கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

* அபாயகரமான ஔடதங்களின் பாவனையின் பரவல், அதற்கான காரணங்கள் மற்றும் அபாயகரமான ஔடதங்களின் பாவனையின் மூலம் ஏற்படும் சட்ட, மருத்துவ, சமூக, கலாசார மற்றும் பொருளாதார சிக்கல்கள் தொடர்பான ஆராய்ச்சி கற்கைகளை நடாத்துதல் மற்றும் அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொறுப்பேற்றல், போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட தேசிய பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புக்கள் மற்றும் முகவர்களுடன் தொடர்பினைப் பேணுதல்.

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பில் தேசிய ஆய்வுகூடத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயலாற்றல் கீழே காட்டப்பட்டுள்ளன.

| இலக்கம் | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|---|
| | | எதிர்பார்த்த இலக்கு | அடையப் பெற்ற எண்ணிக்கை | சதவீதம் % |
| 1. | விலை மற்றும் தூய்மையான வீதி ஹெரொய்னுக்கிடையிலான இடையிலான தொடர்பினை இனங்காண்பதற்கு நடாத்தப்பட்ட பகுப்பாய்வு மற்றும் வீதி ஹெரொய்னில் உள்ளடங்கியுள்ள | 360 | 133 | 36.9 |

9

AGDSL
Auditor General's Department
(317)

| | | | | |
|---|---|---|---|---|
| | புதிய கலப்படங்களின் விளைவிற்காக நடாத்தப்பட்ட பகுப்பாய்வு | | | |
| 2. | (i) மேலதிக உணவு மாதிரிகளின் உற்பத்தி பகுப்பாய்வு | - | 06 | - |
| | (ii) விளையாட்டின் போது பயன்படுத்தப்படும் வளர்சிதை பொருட்கள் உள்ளடக்கப்பட்டதை அறிய மேற்கொள்ளப்பட்ட உயிரியல் சார்ந்த பகுப்பாய்வு | - | 01 | - |
| 3. | மதுசார மாதிரி பகுப்பாய்வு | - | 67 | - |
| 4. | வளர்சிதை மூலப்பொருட்கள் கொண்டுள்ள பாலுறவு மற்றும் மனோவியூல் தாக்கங்களின் மதிப்பீடு நடாத்தப்பட்ட உயிரியல் மாதிரிகளின் பகுப்பாய்வு | | | |
| | மாதிரிகளின் எண்ணிக்கை | 180 | 63 | 35.0 |
| | பரிசோதனைகள் எண்ணிக்கை | - | 121 | |
| 5. | ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் மற்றும் குற்றங்களை தவிர்த்தல் அலுவலகத்தின் மூலம் வழங்கி இருக்கும் ஈ இலத்திரனியல் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 48 | 20 | 41.7 |

10

(3b)

| | | | | |
|---|---|---|---|---|
| | - சமூகமளித்தவர்களின் எண்ணிக்கை | - | 123 | |
| 6 | (i) பாலுறவு மற்றும் மனோவியலை இனங்காணப்பதற்கு அமுலாக்கல் குறைந்த நிறுவனங்களினை கண்காணிப்பதற்கான வெளிக்கள பரிசோதனைகளின் தயாரிப்பு | 60 | 07 | 11.7 |
| | (ii) நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக தேவையான விஞ்ஞானம் சார்ந்த சேவைகளை வழங்குதல் | - | 01 | - |
| | (iii) இலங்கை சுங்கத்திற்காக தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பினை வழங்குதல் | - | - | - |
| 7. | ஆராய்ச்சி வெளியீடுகள் | - | 01 | - |
| 8. | ஆய்வுகூடத்தின் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகள் நியமங்களுக்கு இணங்க பேணிச்செல்லல். | /z/≤2 | 2016 முதலாவது சுற்றின் பெறுபேறுகள் கிடைப்பதற்கு உள்ளது | 100 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 8 செயலாற்றல் துறைகளுக்கு இடையே மேலதிக உணவு உற்பத்திகள் மாதிரி பகுப்பாய்வு, விளையாட்டுக்களின் போது பயன்படுத்தப்படும் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் மருந்துகளில் உள்ளடக்க பொருட்கள் உள்ளதாக மேற்கொள்ளப்பட்ட உயிர் விஞ்ஞான ரீதியான மாதிரி பகுப்பாய்வு, மதுசார மாதிரி பகுப்பாய்வு, பாலுறவு மற்றும் மனோவியலை இனங்காணப்பதற்கு சட்டத்தை செயற்படுத்தும் நிறுவனங்களுக்கு வெளிக்கள பரிசோதனைத் தொகுதிகளை தயாரித்து வழங்குதல், நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக தேவையான விஞ்ஞானம் சார்ந்த சேவைகளை வழங்குதல், இலங்கை சுங்கத்திற்காக தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பினை வழங்குதல் மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகள் போன்ற துறைகளில் இலக்கிடப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை குறிப்பிடப்படாமையால் செயலாற்றலின் செயன்முன்னேற்றத்தை கணக்காய்விற்கு உறுதிப்படுத்த முடியாதிருந்தது. மேலும் 4 துறைகளில் செயலாற்றல் 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

(ஆ) ஆய்வுகூடம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகள் நியமங்களின் பிரகாரம் பேணிச்செல்லும் சரியானதன்மையைக் காண்பிக்கும் பரிசோதனைகளின் பெறுபேறுகள் கிடைப்பதற்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன்செயலாற்றல் 100 சதவீதம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

செயல்நிமித்த கட்டுநிதி அது வழங்கப்பட்ட செயற்பாடு முடிவடைந்த உடனே தீர்க்கப்பட வேண்டிய போதிலும் முற்பணங்களைத் தீர்ப்பதற்காக 14 நாட்கள் முதல் 141 நாட்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 78,850 ஆன 2017 மார்ச் 15 ஆந் திகதி வரையிலும் தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் வழங்கப்பட்ட தொகையில் 50 சதவீதத்தினை விட குறைவாக செலவிடப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் ரூபா 107,595 தொகையான முற்பணங்கள் உரிய செயற்பாடுகளுக்காக செலவிடப்படாமல் 02 நாட்கள் முதல் 141 நாட்கள் வரையான காலம் நிறுத்திவைக்கப்பட்டு மீண்டும் தீர்வுசெய்யப்பட்டிருந்தது.

AGDSL
Auditor General's Department
314

4.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கு எழுதுகருவிகளைக் கொள்வனவு செய்வதற்காக 2016 பெப்ரவரி மாதத்தில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 2,068,605 ஆன எழுதுகருவிகள் 2016 நவம்பர் மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் தேவைப்பாடொன்று இல்லாதிருக்கும் போது எழுதுகருவிகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய மாதக ஆய்வுகூடத்தின் இருப்பு அரசின் இரசாயனப் பகுப்பாய்வாளரால் கணிப்பீடு செய்யும் போது இருப்பு அறிக்கையில் 13 இரசாயன பொருட்களின் பெறுமதி ரூபா 89,343 ஆல் மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 9 இரசாயன பொருட்களின் பெறுமதி ரூபா 45,888 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(இ) 2016 ஆம் ஆண்டின் போது தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் வெளிநாட்டு பிரயாணச் செலவினத்திற்காக ரூபா 4,823,223 செலவிடப்பட்டிருந்ததுடன் அத்தொகையில் ரூபா 3,067,602 தொகை அதாவது 64 சதவீதம் சபையின் தலைவருக்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இம்முழுச் செலவினம் 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 77 சதவீத அதிகரிப்பொன்றாகும்.

(ஈ) மேற்படி செலவினத்திற்கு மேலதிகமாக சபையினால் செயற்படுத்தப்பட்ட UNDCP 1995 செயற்திட்டத்தின் நோக்கங்கள் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்படாதிருந்துடன் செயற்திட்ட பணத்திலிருந்து ரூபா 1,957,830 தொகை பணிப்பாளர் நாயகத்தின் வெளிநாட்டு செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

4.4 நிதியக் குறைப்பயன்பாடு

மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் 06 நடைமுறைக் கணக்குகளுக்குரிய ரூபா 9,330,322 ஆன மீதிகள் 05 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்ற வகையில் வங்கிக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

AGDSL
Auditor General's Department
313

**4.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

2014 ஏப்ரல் 30 ஆந் திகதி ரூபா 2,971,405 செலவிடப்பட்டு ஹோமாகம பிரதேசத்தில் 40 பேர்ச் காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆக்கபூர்வமான செயற்பாடொன்றிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

ஆசிய மற்றும் பசுபிக் வலய சட்ட அமுலாக்கல் தேசிய நிறுவனத்தின் மாநாடு (HONLEA) 2016 யூன் 20 ஆந் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடாத்துவதற்காக திறைசேரியிடமிருந்து சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 12,720,000 தொகையில் ரூபா 1,068,726 தொகை சட்டமும் சமாதானமும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சர் அமெரிக்கா ஐக்கிய குடியரசில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் விசேட பொதுக்கூட்டத்திற்கு சமூகமளிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது.

**4.7 ஏனைய நிறுவனங்களின் வளங்களைப் பயன்படுத்துதல்**

சுகாதார அமைச்சிற்கு சட்டரீதியான உரித்துக் காணப்படும் காணி மற்றும் கட்டிடமொன்றில் சபையின் தலங்கம சிகிச்சை நிவாரண நிலையம் பேணிச் செல்லப்பட்டு வந்ததுடன் அதற்கான உடன்படிக்கை 1993 யூன் 01 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் அது 2017 மார்ச் 15 ஆந் திகதி வரை புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.8 பதவியணியினர் நிர்வாகம்**

சபையின் ஆரம்பத்திலிருந்து உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கொள்வனவுத் திட்டம்**

2006 அரசின் பெறுகைகள் வழிகாட்டிகள் கோவையின் 4.2.1 (ஆ) மற்றும் (உ) பிரிவுகளின் பிரகாரம் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டு (03) காலப்பகுதிக்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் பிரதான திட்டத்தில்

14

AGDSL
Auditor General's Department

அட்டவணைப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும், சபையினால் தயாரிக்கப்பட்ட திட்டம் ஓராண்டிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் அது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்கு புத்தகங்கள் சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) நாட்குறிப்பு பதிவுகளுக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமை. |
| (ஆ) சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை முறையாகப் பராமரிக்காமை. |
| (இ) நிதி முகாமைத்துவம் | (i) செயற்பாடற்ற வங்கிக் கணக்குகள் காணப்பட்டமை<br>(ii) பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் பணத்தை செலுத்துதல் |
| (ஈ) மனித வள முகாமைத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (உ) செலவினக் கட்டுப்பாடு | திட்டமிடப்படாத செயற்பாடுகளை மேற்கொள்ளல் |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

15

# 13. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மீதான தவிசாளரின் அவதானிப்புகள்

NDDCB/GEN.AUD/2017/04

*2017.07.03*

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

கவனத்திற்கு: திருமதி யூ.என்.அளுத்கே (கணக்காய்வுக் கண்காணிப்பாளர்)

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின்
2016 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான
நிதிக்கூற்றுகள் பற்றிய 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின்
14(2)(சி) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

2.2 நிதிக்கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

2.2.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்கள்

(அ) கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அவதானிப்புகளை ஏற்றுக்-கொள்கின்றேன். எழுத்து வழுவொன்றின் பேரில் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கடன் முற்பணங்கள் நடைமுறைச் சொத்துக்களாகப் பதியப்பட்டுள்ளதுடன், அது நீண்டகால மற்றும் நிறுவனத்தின் ஊழியர் கடனாக இருப்பதால், நடைமுறை அல்லாத சொத்துக்களின் உருப்படிக்குக் கீழ் பதிய நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ஆ) கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அவதானிப்புகளின்படி சபையின் சொத்து உருப்படி மற்றும் அவற்றின் நன்மைகளின்படி காணிகள் சம்பந்தமாக அடையாளம் காணல்களை எதிர்காலத்தில் மேற்கொண்டு அரசதுறை கணக்கீட்டு நியம இல. 07 இன் வண்ணம் செயலாற்றுவதற்காக குறித்துக்கொண்டேன்.

(இ) i. சபை வசமுள்ள குத்தகை ஆதனங்களை பின்வருமாறு அட்டவணை ஒன்றின்மூலம் காண்பிக்கலாம்:

| குத்தகை ஆதனம் | பெறுமதி | குத்தகைக் காலம் |
|---|---|---|
| தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை – தலைமையகம் | ரூ.4,350,000/- | 99 வருடங்கள். |
| பிட்டிபன காணி | ரூ.2,600,000/- | 30 வருடங்கள் |
| 3 ஆவது மாடி, இல.385C$^{3/1}$, இராஜகிரிய | ரூ.3,600,000/- | 02 வருடங்கள் |

** நவதிகன்த நிலையத்தின் குத்தகை ஒப்பந்தம் தற்போது காலாவதியாகி இருப்பதுடன், குத்தகைக் காலத்தை மீண்டும் நீடித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

அதன்படி, ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை அல்லாச் சொத்துக்களிலுள்ள சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பதைத் திருத்தி சமர்ப்பிக்கின்றேன்.

ii. சபைக்குச் சொந்தமான கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூ.556,142/- பெறுமதியான மண் பரிசோதனைக் கட்டணத்தை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

iii. இது பற்றி ஆராய்ந்து சரியான ஒப்பந்த ரீதியான பிணைப்புகளின் அளவை எதிர்காலத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

ஈ) நடைமுறை அல்லாச் சொத்துக்களில் முற்றாகவே தேய்மானம் செய்யப்பட்டுள்ள தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் சொத்துக்களை அடையாளம் காண்பது சம்பந்தமாக குழுவொன்றை நியமித்து மிகத் துரிதமாக அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு 2017 ஆம் ஆண்டிற்குரிய இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும்போது வழுக்கள் காணப்படின், திருத்தமாக சீராக்கம்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறிவிக்கின்றேன்.

2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

(அ) கணக்கீட்டுக் கொள்கைகளைத் தயாரிக்கும்போது எழுத்து வழுவொன்றின் பேரில் காணிகளும் கட்டிடங்களும் 5% தேய்மான வீதமொன்றைச் சுட்டியபோதும், இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும்போது தேய்மானம் செய்யுமிடத்து காணிகள் புறக்கணிக்கப்பட்டு கட்டிடங்களின் பேரில் மாத்திரம் 5% தேய்மானம் செய்யப்பட்டுள்ளது. கணக்கீட்டுக் கொள்கை திருத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கணக்கீட்டுக் கொள்கை இல.2.3 இன்பிரகாரம் நடைமுறை அல்லாச் சொத்துக்களுக்கான தேறிய பெறுமதியைக் குறிப்பிடும்போது வகுதிகளின் அடிப்படையில் வகுப்பீடுசெய்து இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

(இ) 2016 ஆம் ஆண்டிலிருந்து கால அடிப்படையின் பேரில் சொத்துக்கள் கொள்வனவின்போதும் கையுதிர்ப்புச்செய்யும்போதும் தேய்மானம் செய்வதற்கான கொள்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதனைத் திருத்திய கணக்கு அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கின்றேன்.

2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) எதிர்காலத்தில் இதனைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) 2016.12.31 ஆந் திகதியளவில் கொள்வனவுசெய்வதற்கு ஒப்பந்தம் செய்துகொண்ட சில நடைமுறை அல்லாச் சொத்துக்களுக்காக (சபைக்கு அத்தியாவசியமாக இருந்த) ஒரு பகுதி கொடுப்பனவாக இத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. தற்போது கொடுப்பனவுகளுக்குரிய எல்லாச் சொத்துக்களையும் கையகப்படுத்திக்கொண்டு சரியான இரட்டைப் பதிவை மேற்கொண்டு திருத்திய கணக்கு அறிக்கையின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(இ) இந்த ரூ.217,422/- பெறுமதியான 03 செலவுறுதிச்சீட்டுக்களின் மொத்தம், 2017 ஆம் ஆண்டிற்குரிய செலவுகளாக இருப்பதால், திரண்ட செலவுகளினுள் உள்ளடக்கப்படவில்லை.

(ஈ) கணக்காய்வின்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கு பின்வரும் விளக்கங்களை முன்வைக்கின்றேன்:-

1. சபையில் பணியாற்றிய திருமதி கே.ஏ.டி.ஹசாந்தி லக்மினி என்ற உத்தியோகத்தர் சபையிலிருந்து விலகிச்சென்றதுடன், ரூ.158,250/- ஆகக் காணப்பட்ட கடன் நிலுவை, அவரது பணிக்கொடைத் தொகை மற்றும் மேலும் செலுத்தவேண்டியிருந்த தொகை அவரால் செலுத்தித் தீர்க்கப்பட்டது.

2. சபையில் பணியாற்றும் திரு. எல்.பி.என்.சாமர என்பவரின் கடன் நிலுவையான ரூ.45,175/- தொகை அவரால் காசாக செலுத்தித் தீர்க்கப்பட்டது.

(உ) இது எழுத்து வழுவொன்று காரணமாக இடம்பெற்றதாகும். கணக்குகளைத் திருத்தி இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

2.2.5 இணக்கம்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(அ), (ஆ), (இ) கணக்காய்வின்மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அவதானிப்புகளை ஏற்றுக் கொள்கின்றேன். இது சபையில் முன்பு காணப்பட்ட கணக்கு ஏடுகள் சிலவற்றுடன் சம்பந்தப்பட்ட, தொடர்ச்சியாக முன்னெடுத்துச்செல்லப்படும் ஒரு வழுவாக இருப்பதால் எல்லா வருடங்களிலும் கணக்குகளை உன்னிப்பாகப் பரிசோதித்து வித்தியாசங்களை அடையாளம் கண்டு சீராக்கம்செய்வதற்கு சபையின் பதவிநிலை கூட்டத்தின் அனுமதிபெற்று வெளிநிலைக் கணக்காய்வுச் சேவை

நிறுவனமொன்றின் மூலம் சீராக்கம்செய்துகொள்வது உகந்ததென 2017.06.13 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின்போது இணக்கப்பாடு பெறப்பட்டது. அதன்படி, எதிர்காலத்தில் கேள்வி விலைகோரி குறித்த பெறுகைச் செயன்முறையைப் பின்பற்றி வெளிநிலைக் கணக்காய்வுச் சேவை நிறுவனமொன்றிடம் ஒப்படைத்து சீராக்கம்செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன்.

(உ) **கணக்காய்வின் அவதானிப்பின்படி பின்வரும் விளக்கங்களை முன்வைக்கின்றேன்:-**

1. சபையில் இணைக்கப்பட்டு பணியாற்றிய திரு. அமல் புத்திக்க கேரகல என்பவர் வெளிநாடு சென்றமையால் அவரது சம்பளம் 2016 பெப்ரவரி மாதம் தொடக்கம் இடைநிறுத்தப்பட்டது. அதன்படி, அவரது கடன் நிலுவையின் வித்தியாசமான ரூ.20,180 தொகையை பிணைதாரர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2. சபையில் இணைக்கப்பட்டு பணியாற்றிய திருமதி கே.எல்.ஆர்.டி.புஸ்பகுமாரி என்பவருக்கு 2014 ஆம் ஆண்டில் பணித்தடை விதிக்கப்பட்டதுடன், அவரிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூ.83,111 தொகையை பிணைதாரர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

   அதன்படி, மேற்படி இரு உத்தியோகத்தர்களின் கடன் நிலுவைகளின் மொத்தமான ரூ.103,291 தொகையானது சம்பளங்கள் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட வித்தியாயமாகும். அது சீராக அறவிடப்பட்டுள்ளது.

(ஊ) மேலே (அ) இல் உள்ளவாறு வெளிநிலைக் கணக்காய்வுச் சேவை நிறுவனத்தின்மூலம் இந்த வித்தியாசத்தை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன்.

(எ) சபையின் பணிப்பாளர் நாயகம் உத்தியோகபூர்வ விஜயமொன்றுக்காக 2016.12.05 ஆந் திகதி பிரேசில் நோக்கிப் பயணமானதுடன், இணைந்த கொடுப்பனவுகளையும் அமய கொடுப்பனவுகளாக அமைந்த செலவுகளையும் இக்கணக்கின் ஊடாக செலவிட அனுமதி கிடைத்தது. இதன்படி, வங்கிக்கு நிலையியற் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டதுடன், 2016.12.31 ஆந் திகதியளவிலும் வங்கி விபரக்கூற்று கிடைக்கவில்லை என்பதால், குறித்த தொகை திரண்ட செலவாக கணக்கில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், தற்போது வங்கிக்கூற்றின்படி தெளிவாக இருப்பதால் திருத்திய கணக்கில் சரிசெய்யப்பட்டது. மேலும், ஊழியர் உந்துதல் நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கும் 2016 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட வேண்டியிருந்த நிர்வாகச் செலவுகளுக்கும் 2017 ஜனவரி மாதம் செலுத்தப்பட்டிருப்பதால், அத்தொகையும் திரண்ட செலவாக கணக்கீட்டில் உட்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.6 தொங்கல் கணக்குகள்

மேலே 2.2.5 (அ) இன் படி நடவடிக்கை எடுக்கின்றேன்.

### 2.2.7 கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

அ, ஆ) கணக்காய்வின்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களின்படி இந்த நிலுவைகள் மிகப் பழையவையாக இருப்பதால், தற்போது அடையாளம் காணமுடியாத மட்டத்தை அடைந்துள்ளது. இதன்படி, இந்த நிலுவைகளுக்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை குறித்து வரவுசெலவுத்திட்ட பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்புகொண்டு எனது NDDCB/BUD/2017/01 ஆம் இலக்கமும் 2017.06.29 ஆந் திகதியும்கொண்ட கடிதத்தின் மூலம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. ஆலோசனைகள் கிடைத்தவுடன் அதன்படி உரிய திருத்தங்களை மேற்கொண்டு சமர்ப்பிக்கின்றேன். (பின்னிணைப்பு I)

### 2.2.6 கணக்காய்விற்குப் போதிய சான்றுகள் இன்மை

இப்பயிற்சிக் கற்கைநெறியில் தவிசாளர் கலந்துகொள்ளவில்லை என்பதுடன் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தி சபையின் இரசாயனர் திருமதி ரி.கே.ஆர். திசாநாயக்க கலந்துகொண்டார். அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.18/2016 இன்படி விடயப்பொறுப்பு கௌரவ அமைச்சரின் அனுமதி பெறப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு II)

(ஆ) மேற்படி 2.2.1 (iii) இலுள்ள பதில் ஏற்புடைத்தாகும்.

(இ) ரூ.2,535,326/- பெறுமதியான இறுதிக் கையிருப்பு அறிக்கையை இத்துடன் மீள சமர்ப்பிக்கின்றேன். (பின்னிணைப்பு III)

2.2.7 **சட்டதிட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

(அ) பணிப்பாளருக்கு - சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வு (தனியார்) எனது NDDCB/FIN/INT.LET/2017/01 ஆம் இலக்கமும் 2017.06.26 ஆந் திகதியும் கொண்ட கடிதத்தின் மூலம் உரிய கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஆ) கணக்காய்வு அவதானிப்புகளை ஏற்றுக்கொண்டு எதிர்காலத்தில் நிதிஒழுங்குவிதி 103 இன் பிரகாரம் வாகன விபத்துக்கள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கைகளை உரிய முறையில் தயாரித்து சமர்ப்பிக்குமாறு எனது NDDCB/FIN/INT.LET/2017/02 ஆம் இலக்கமும் 2017.06.29 ஆந் திகதியும்கொண்ட கடிதத்தின் மூலம் சம்பந்தப்பட்ட விடயப்பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு V)

(இ) மேற்படி (ஆ) பதில் ஏற்புடைத்தாகும்.

(ஈ) கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்-கொள்கின்றேன். எதிர்காலத்தில் திருத்தக் கசிவுநீர் (Correction Fluid) பாவிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கின்றேன்.

(உ) ஏற்கனவே இந்த வழு சீராக்கம்செய்யப்பட்டுள்ளது.

(ஊ) ஏற்கனவே இந்த வழு சீராக்கம்செய்யப்பட்டுள்ளது.

(எ) எதிர்காலத்தில் பொது வைப்புக் கணக்கொன்றில் உரியவாறு பதிவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ஏ) ஏற்கனவே சீராக்கம்செய்யப்பட்டுள்ளது.

(ஐ) ஏற்கனவே சீராக்கம்செய்யப்பட்டுள்ளது.

(ஒ) ஏற்கனவே சீராக்கம்செய்யப்பட்டுள்ளது.

(ஔ) இதற்கவசியமான அனுமதிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. (பின்னிணைப்பு VI)

(க) எதிர்காலத்தில் மேலே 2.2.5 (அ) பதிலின்படி வெளிநிலைக் கணக்காய்வு நிறுவனம் மூலம் சொத்துக்கள் ஆவணத்தை முறைப்படி தயாரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ங) இது தவறுதலாக இடம்பெற்றுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் முறைப்படி சபையின் அனுமதியின் கீழ் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ச) 02 வாகனங்களுக்கு திறைசேரியின் அனுமதி கிடைத்த கடிதத்தை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். (பின்னிணைப்பு VII)

03. நிதி மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

கணக்காய்வின் அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் செலவினங்களை உயர்ந்தபட்சம் கட்டுப்படுத்த குறித்துக் கொள்கின்றேன்.

3.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) இக்கணக்குகள், சபையில் காணப்பட்ட கருத்திட்டங்களின் எஞ்சிய காசு மீதியாக இருப்பதுடன், இதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து திறைசேரியின் பிரதிச் செயலாளரினால் 2017.06.16 ஆந் திகதி நடைபெற்ற கலந்துரையாடல் குறிப்பின்

மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். (பின்னிணைப்பு VIII)

(ஆ) மேற்படி (அ) இலுள்ள பதில் ஏற்புடைத்தாகும்.

(இ) 2.2.3(ஆ) இலுள்ள பதில் ஏற்புடைத்தாகும்.

(ஈ) மேற்படி (அ) இலுள்ள பதில் ஏற்புடைத்தாகும். மேலும் கீழ்க்காணும் அட்டவணையின் ஊடாக தெளிவுபடுத்துகின்றேன்.

| கணக்கு இல. | கணக்கின் பெயர் | 2016.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி (ரூ) | காரணம் |
|---|---|---|---|
| 0003230702 | ராஜகிரிய கிளை கணக்கு | 104,249.32 | செயற்படு நிலையில் தற்போது பாவனையில் உள்ளது. |
| 003270499 | UNDCP 1995 | 1,614,224.28 | பொதுத் திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தல்களின்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| 003271068 | WHO Regular Budjet | 1,406,142.40 | |
| 0003271164 | NDDCB RAS H71 Project | 1,048,100.31 | |
| 0003271165 | UNICEF School Drug Prevention Project | 41,550.86 | |
| 007810523 | NDDCB Treatment & Rehabilitation | 53,494.76 | சபையின் பிரதான கணக்குடன் இணைப்பூட்டப் -பட்டுள்ளது. |

4. செயற்பாட்டு மீளாய்வு

(அ)

1. 2016 ஆம் ஆண்டுக்காக ஆய்வுகூடத்தினால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் பற்றிய செயலாற்றுகை 10 துறைகளுக்காக முன்வைக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள இலக்குகளின்படியும் ஆண்டு இறுதியில் எய்தப்பெற்ற இலக்குகளின்படியும் முன்னேற்றம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2. தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகளும் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களும் தொடர்பாக செயற்படும் சட்டவினைப்படுத்துகை நிறுவனங்களுக்கும் போதையூட்டும் ஔடதங்களுக்கான கேள்வியைக் குறைப்பதற்காக பாவனையைத் தடுத்தல், சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வு தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் நிறுவனங்களுக்கும் ஆய்வுகூடத்தினால் சேவைகள் வழங்கப்படுகின்றன.

3. இங்கு ஆய்வுகூடத்தினால் அந்நிறுவனங்களின் தேவைப்படி சேவைகள் வழங்கப்படுகின்றன. விளையாட்டில் பயன்படுத்தப்படும் மேலதிக உணவுப் பொருள்களின் உற்பத்தியைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்துதல், அற்கஹோல் மாதிரிகளின் பகுப்பாய்வு, தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகளையும் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப் பொருள்களையும் அடையாளம் காண்பதற்காக சட்டவினைப்படுத்தும் நிறுவனங்களுக்கு களப் பரிசோதனைத் தொகுதிகளைத் தயார்செய்து வழங்குதல், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அவசியமான விஞ்ஞான ரீதியான சேவைகளை வழங்குதல், சுங்கத்திற்கு தொழில்நுட்ப ரீதியான

ஒத்துழைப்புக்கான சேவைகளை வழங்குதல் என்பன மேற்படி நிறுவனங்களின் தேவைகளின்படியும் செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்படும் துறைகளுக்கு உரியதாக வழங்கப்பட்ட சேவைகளுக்கு மேலதிகமானவையாகவும் மேற்கொள்ளப்பட்டன.

4. 4 துறைகளுக்குரிய முன்னேற்றம் 50% ஐ விடக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கையில் இதற்குக் காரணமாக அமைந்த விடயங்கள் விபரிக்கப்பட்டுள்ள-போதும், குறித்த ஒவ்வொரு துறைக்கும் உரிய முன்னேற்றம் தொடர்பான விரிவான ஒரு விளக்கம் கீழ் குறிப்பிடப்படுகிறது.

5. <u>செயலாற்றுகை இல. 01</u>

தெரு ஹெரொயினின் விலைக்கும் தூய்மைக்கும் (Purity of street hHeroine) இடையிலான இடைத்தொடர்பை அடையாளம் காண்பதற்கான பகுப்பாய்வுக்கும் புதிய செறிவுதளர்த்தும் பொருள்கள் (New diluents) அடங்கியிருப்பதாக மேற்கொள்ளப்படும் பகுப்பாய்வுக்கும் உரிய மாதிரிகள் பொலிஸ் போதையூட்டும் ஔடத தடுப்புப் பணியகத்தினால் வழங்கப்படுகிறது. எனினும், பகுப்பாய்வுக்காகக் கிடைத்த மாதிரிகளின் எண்ணிக்கையில் குறைவொன்று ஏற்பட்டமையால், முன்னேற்றம் 50% ஐ விடக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மேலும், இந்நிகழ்ச்சித்டத்திற்கு மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறையை மேலும் வினைத்திறன் உடையதாக்குவதற்கு மதுவரித் திணைக்களமும் இலங்கை பொலிசும் அவ்வாறான சட்டத்தை அமுல்படுத்தும் ஏனைய நிறுவனங்களை அறிவுறுத்துவதுடன் அதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

6. <u>செயலாற்றுகை இல. 05</u>

தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துகளிலும் உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள்களிலும் ஜீவதத்துவ பரிணாமக் கூறுகள் அடங்கியிருப்பதாக உயிரியல் மாதிரிகளுக்கான பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கும், சிகிச்சையளிப்பு மற்றும் புனர்வாழ்வு நிலையங்களுக்கும் பல்வேறு உளநோய் அறிகுறிகளை நிர்ணயிக்கும்போது போதையூட்டும் ஔடதக பாவனை காரணமாக ஏற்பட்ட நிலைமைகளா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு அரசாங்க மற்றும் தனியார் மருத்துவனைகளிலும் ஏனைய கல்விசார் மற்றும் தொழில்களுக்காக போதையூட்டும் ஔடத பாவனைக்கு அடிமையானவரா என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்வதற்காக ஏனைய நிறுவனங்களினால் மாதிரிகள் அனுப்பிவைக்கப்படும். அத்தகைய நிறுவனங்களின் தேவைப்படி பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மேற்படி சேவைகளின் தேவையின் அடிப்படையிலேயே மாதிரிகள் அனுப்பிவைக்கப்படும்.

7. <u>செயலாற்றுகை இல. 07</u>

ஐக்கிய நாடுகள் போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் குற்றத்தடுப்பு அலுவலகத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் முன்னெடுத்துச்செல்லப்படும் e-கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உரிய முன்னேற்றம் 41.7 என்றே பதியப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கான முனைப்பான திட்டத்தின்படி, முன்னைய ஆண்டில் ஏற்பாடுசெய்யப்பட்ட மாதிரிப்படி 2 நாட்களைக் கொண்ட நிகழ்ச்சிகள் 48 ஐ மேற்கொள்வதே இலக்காக அமைந்தது. (672 மணித்தியாலங்களை உள்ளடக்கும்.) எனினும், சட்டவினைப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முக்கியமானதாக அமையும் மொடியூல்களைக் கற்றுக்கொள்வதற்கு 02 நாட்களைக்கொண்ட (14 மணித்தியால) காலம் போதியதாக இல்லாமல் இருந்தமையால், 2016 நவம்பர் மாதம் வரையில் 02 நாட்களைக்கொண்ட (14 மணித்தியால) நிகழ்ச்சி 1 ஐயும் மூன்று நாட்களைக்கொண்ட (21 மணித்தியால) நிகழ்ச்சிகள் 2 ஐயும் 4 நாட்களைக்கொண்ட (28 மணித்தியால) நிகழ்ச்சி 1 ஐயும் 5 நாட்களைக்கொண்ட (35 மணித்தியால) நிகழ்ச்சிகள் 16 ஐயும் நடத்தி 644 மணித்தியாலங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

அதன்படி, பூர்த்திசெய்யப்பட்ட மணித்தியாலங்களுடன் கருத்திற்கொள்ளும்போது நூற்றுக்கு 95.83 சதவீத முன்னேற்றமொன்று சுட்டிக்காட்டப்படுகிறது. மேலும், இந்த கணினி நிகழ்ச்சிநிரல்கள் முன்னெடுக்கப்படுவதற்கிடையில் சேவைவழங்கி கணினியில் (Server Computer) எழுந்த ஒரு கோளாறு காரணமாக 05 நாட்கள்கொண்ட 02 நிகழ்ச்சிகளில் 02 நாட்களைக்கொண்ட நிகழ்ச்சி 1 ஐ மாத்திரம் முன்னெடுக்க நேரிட்டது. அதேபோல், இதன் காரணமாகவே டிசம்பர் மாதத்திற்கும் நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்ய முடியாமல் போனது.

மேலும், நவம்பர் மாதத்தில் நடைபெற்ற ஆசிய பசுபிக் பிராந்திய போதைவஸ்து சட்டத்தை வினைப்படுத்தும் நிறுவனங்களின் தலைவர்களுடனான சந்திப்பின் (HONLEA) ஏற்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த நேரிட்டது.

8. <u>செயலாற்றுகை இல. 08</u>

தூக்கமயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய மருந்துககளையும் உளமருட்சியை உண்டு பண்ணக்கூடிய வெறியப்பொருள்களையும் அடையாளம் காண்பதற்கு சட்டத்தை வினைப்படுத்தும் நிறுவனங்களுக்கு 60 களப் பரிசோதனைத் தொகுதிகளைத் தயார்செய்து கொடுக்கும் இலக்கை எய்துவதற்கு முடியாமல்போனதற்குக் காரணம், அதற்கு அத்தியாவசியமான கோரப்பட்ட மேலதிக உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட சிரமமாகும். தற்போது பொலிஸ் போதையூட்டும் ஔடத தடுப்புப் பணியகத்துக்கும் இலங்கை சுங்கத்திற்கும் வழங்கப்பட்டுள்ள தொகுதிகளை மீள ஒழுங்கமைக்கும் பணி மட்டும் மேற்கொள்ளப்பட்டது.

9. விளையாட்டில் பயன்படுத்தப்படும் மேலதிக உணவுப்பொருள்களைப் பகுப்பாய்வு செய்யும் செயற்பாட்டுத் திட்டத்தில் ஐயுறவான மாதிரிகளின் பகுப்பாய்வு என்ற துறையின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபோதும், முன்னேற்றத்தை அறிக்கையிடும்போது அதற்காக தனிவேறான குறிப்பொன்று இடப்பட்டுள்ளது.

செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்படும் விதமாக ஐயுறவான மாதிரிகளைப் பகுப்பாய்வுசெய்வதற்கான பெறுபேறுகள் பின்வருமாறு அமையும்:

| துறை | உத்தேச இலக்கு | எய்தப்பெற்ற இலக்குகளின் எண்ணிக்கை | முன்னேற்றம் |
|---|---|---|---|
| ஐயுறவான மாதிரிகளின் பகுப்பாய்வு | 80 | 78 | 105% |
| உணவு உற்பத்திகளின் பகுப்பாய்வு | | 06 | |

(ஆ) 2016 ஆம் ஆண்டில் ஆய்வுகூடத்தினால் மேற்கொள்ளப்படும் தரநிர்ணய நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2015 இரண்டாம் சுற்றுக்கும் 2016 முதலாவது இரண்டாவது சுற்றுக்களுக்கும் மாதிரிகளின் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு ஐக்கிய நாடுகள் போதையூட்டும் ஔடதங்கள் மற்றும் குற்றத்தடுப்பு அலுவலகத்திற்கு பெறுபேறுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

2015 இரண்டாம் சுற்றுக்கும் 2016 முதலாம் சுற்றுக்கும் கைப்பற்றப்பட்ட போதையூட்டும் ஔடத மாதிரிகளின் பகுப்பாய்வு தொடர்பில் 100% வீதம் சரியாந்தன்மையைச் சுட்டிக்காட்டியதுடன், 2016 இரண்டாம் சுற்றுக்கு பெறுபேறுகள் கிடைக்கப் பெறவுள்ளன.

4.2 **முகாமைத்துவத் திறமையீனங்கள்**

(i) கணக்காய்வு அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் முறைப்படி முற்பணங்களைச் செலுத்த நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ii) கணக்காய்வு அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கின்றேன். இது மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இடம்பெற்றதாகும்.

(iii) மேற்படி I இலுள்ள பதில் ஏற்புடைத்தாகும்.

(iv) கணக்காய்வு அவதானிப்புகளை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் இதுபோன்ற முற்பணங்களைப் பெற்றுக்கொண்டு மீளச் செலுத்தாத உத்தியோகத்தர்களின் சம்பளத்தை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கின்றேன்.

4.3 **செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

(அ) எதிர்காலத்தில் பெறுகைத் திட்டத்தின்படி எல்லாக் கொள்வனவுகளையும் மேற்கொள்ள

நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ஆ) போதையூட்டும் ஔடத உளவள ஆலோசனைச் சான்றிதழ் கற்கைநெறியின் முழு விரிவுரை மணித்தியாலங்கள் 48 ஆகும். அது கோட்பாட்டு ரீதியாக 41 மணித்தியாலங்களும் 06 பிரயோக மணித்தியாலங்களும் 01 பரிசோதனை மணித்தியாலமும் என்ற அடிப்படையில் குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

| விரிவுரைகளின் மணித்தியால அளவு | பணம் செலுத்தும் விதம் | செலுத்தும் மொத்தத் தொகை |
|---|---|---|
| கோட்பாட்டு ரீதியான விரிவுரைகள் - 41 மணித்தியாலங்கள் | ரூ.2,000 x 41 | ரூ.82,000.00 |
| கள விஜயத்தின்போது பிரயோக செயற்பாடுகளுக்கும் பரீட்சைகளுக்கும் 03 விரிவுரையாளர்களுக்கு | 02 மணித்தியாலங்கள் வீதம் x 03 x ரூ.2,000 | ரூ.12,000.00 |
| இறுதிப் பரீட்சைக்கு – 01 மணித்தியாலம் | ரூ.2,000 x 01 | ரூ.2,000 |

இதன்படி, கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் கற்கைநெறி இலக்கம் 23, 24, 25, 26, 27, 28, 31, 33, 34, 35 ஆகியவற்றுக்கான பிரயோக ரீதியான செயற்பாடுகளையும் பரீட்சைகளை நடத்திய மணித்தியாலங்களையும் உள்ளடக்கும்போது 48 மணித்தியாலங்கள் பூர்த்தியடையும். அக்கற்கைநெறிகளுக்காக 48 மணித்தியாலங்களை உள்ளடக்கக்கூடிய விதத்தில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

29, 30 ஆவது கட்டங்கள் மகளிர் பணியகத்தின் கோரிக்கைப்படி அப்பணியகத்தின் உளவள ஆலோசனை உத்தியோகத்தர்களுக்கான விசேட கற்கைநெறிகளாக ஒழுங்கு செய்யப்பட்டன. அவர்களுக்கு மேலதிக அறிவை வழங்கத் தீர்மானிக்கப்பட்டமையால் இக்கற்கைநெறியில் 06 மணித்தியால விரிவுரைகளை அதிகரிக்க கற்கைநெறி ஆலோசனை மற்றும் இணைப்பூட்டல் குழு தீர்மானித்தது. ஆகையால், விசேட கற்கைநெறிகளுக்கான மணித்தியாலங்களின் அளவு 54 மணித்தியாலங்களாகும். (கால அட்டவணை இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.) (பின்னிணைப்பு IX)

32 ஆவது கற்கைநெறிக்காக நடத்தப்பட்ட விரிவுரைகளின் மணித்தியாலங்கள் 54 என கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், அது 48 மணித்தியாலங்களே என்பதை அறியத் தருகின்றேன். கற்கைநெறிக்கான விரிவுரைக் கட்டணம் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு (ரூ.135,000 + 81,000) அன்றி, (96,000 + 94,500) எனத் திருத்தப்பட வேண்டும்.

(இ) உளமருட்சியை உண்டுபண்ணக்கூடிய வெறியப்பொருள் ஆய்வுகூடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இரசாயனப் பதார்த்தங்கள் பற்றிய விபரம் அங்கு பணியாற்றும் உதவிப் பணிப்பாளரின் (விஞ்ஞான ஆராய்ச்சிகள்) கீழ் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளது. கையிருப்புப் பெறுமதி பற்றிய தகவல்கள் அன்றைய கணினிமயப்படுத்திய தரவுகளின் துணையுடன் நிதிக்கூற்றுகளில் உட்படுத்தப்பட்டுள்ளன. அதில் விடுபாடுகள் ஏதும் ஏற்பட்டிருப்பின், அது பற்றி விரிவாக ஆராய்ந்து 2017 கணக்கு ஆண்டில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ஈ) இது கையிருப்பைக் கணக்கெடுப்பை மேற்கொள்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் தவறு காரணமாக இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். குறித்த கையிருப்புப் பெறுமதிகள் எதிர்காலத்தில் கணக்கேடுகளில் சீராக்கம்செய்யப்படும்.

4.4 செயற்பாடற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

இக்காணியை அமைச்சுக்கு கையகப்படுத்திக்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் குறித்து

ஆராயுமாறு அமைச்சின் செயலாளரினால் 2016.10.20 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின்போது அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு (நிர்வாகம்) அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க ஆவண செய்கின்றேன்.

**4.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதிஒதுக்கீடுகள்மூலம் இத்தொகை மீள்நிரப்பல் செய்யப்பட்டது. (பின்னிணைப்பு X)

**4.6 வேறு அமைப்புகளின் வளங்களைப் பயன்படுத்தல்.**

மேலே 2.2.1 (III) இலுள்ள பதில் ஏற்புடைத்தாகும்.

**4.7 பணிக்குழாம் நிர்வாகம்**

சபையின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு ஓர் உத்தியோகத்தர் இணைத்துக்கொள்ளப்பட்டார். அவர் மற்றுமொரு நிறுவனத்தில் பணியாற்றச் சென்றமையால் தற்போது அப்பதவி வெற்றிடமாக உள்ளது. எனினும், நிரல் அமைச்சினால் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டப்படி கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், எதிர்காலத்தில் உள்ளக கணக்காய்வாளர் பதவிக்குப் பொருத்தமான ஓர் உத்தியோகத்தரை நியமிக்க நடவடிக்கை எடுக்கின்றேன்.

ஏற்கனவே உதவிப் பணிப்பாளர் (நிதி) பதவிக்கும் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**5. கணக்களிதகைமையும் நல்லாட்சியும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் கணக்காய்வின்மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை இயன்றளவு சீர்செய்து திருத்திய நிதிக்கூற்றுக்களையும் அறிக்கைகளையும் இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

**5.2 உள்ளக கணக்காய்வு**

இது சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சுக்கு ஏற்புடையதாகும்.

**5.3 பெறுகைத் திட்டம்**

அ, ஆ) கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு எதிர்காலத்தில் பெறுகைத்திட்டத்தை 3 ஆண்டு காலத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளையும் உட்படுத்தி 6 மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்தில் நாளாந்தம் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

**5.4 வரவுசெலவுத்திட்டக் கட்டுப்பாடு**

அ) மீளாய்வு ஆண்டின் ஆரம்பத்தில் வரவுசெலவுத்திட்டத்தில் உட்படுத்தப்பட்ட நிதிஒதுக்கீடுகளில் ஆண்டின் நடுப்பகுதி அளவில் பற்றாக்குறைகளும் மிகைகளும் அடையாளம் காணப்பட்டமையால், வரவுசெலவுத்திட்டத்தில் உட்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைத் திருத்தி மிகை செலவு விடயங்களிலிருந்து நிதிஒதுக்கீடுகளை குறை செலவு விடயங்களுக்கு மாற்றித் தருமாறு என்னால் 2016.09.02 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வரவுசெலவுத்திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு XI)

அதன்படி, அதற்கு அனுமதி கிடைத்தமையால் உரிய திருத்தங்களுக்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆ, இ) இதற்கு கீழ்க்காணும் விளக்கங்களை ஏற்புடைத்தாக்கிக்கொள்ளவும்.

| உருப்படி | பெறுமதி (ரூ) | விளக்கம் |
|---|---|---|
